தமிழரசு
1.4.1995 ரூ.3



# எட்டாவது உலகத் தமிழ் மாநாடு:
# இசை நிகழ்ச்சிகளில் சில...





திரு. டி.கே.எஸ். கலைவாணன்






திரு. ஆத்மநாதன்




செல்வி செளம்யா

# இந்த இதழில்...


✦ மேதகு ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு முதல்வர் சட்டப் பேரவையில் ஆற்றிய பதிலுரை: . . . . . . . . . . . . 2

✦ நிதி நிலை அறிக்கை (1995-96) —மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை . . . . . . . 32

✦ புதுக்கோட்டை மாவட்டத்தில், குடிநீர்த் திட்டங்கள் - அரசுத் திட்டப் பணிகள் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை . . . . . . 58



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு: 2026

பங்குனித் திங்கள்: 18

மலர்: 25 இதழ்: 19

1.4.1995

விலை: ரூ. 3




இதழ்தோறும் ஓர் இனியகுறள்

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. (18)

* மழை பெய்யாமல் போகுமானால், இவ்வுலகத்தில் வானோர்க்காக நடக்கும் திருவிழாவும் நடைபெறாது; நாள் வழிபாடும் நடைபெறாது.

பெற்றுள்ளோம்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்று வள்ளுவர் அன்றே கூறிச் சென்றிருக்கிறார்.

எனவே, எங்கள் அரசின் சேவையைப் பாராட்டி மகிழ்ந்தவர்களுக்கு, எங்களின் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் குறைகளைச் சுட்டிக் காட்டியவர்களுக்கு, அவற்றை நாங்கள் குறைகளாகக் கருதாமல், எங்கள் பணி, மேலும் சிறக்கவேண்டும் என்பதற்காகக் கூறப்பட்ட கருத்துக்களாக எடுத்துக்கொண்டு, அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தை பெரியார் அவர்களின் சமூக நீதியும், பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவார்ந்த கொள்கைகளும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின், மனிதாபிமானக் கோட்பாடுகளும், எங்களை என்றென்றும் வழிநடத்திச் செல்கின்ற, கலங்கரை விளக்கங்களாக விளங்கும். அவர்கள் காட்டிச் சென்ற வழியைக் கடைப்பிடித்து, தமிழகத்தின் புகழைத் தரணி எங்கும் பரப்பி, தமிழக மக்களுக்கு, ஒளிமயமானதொரு வாழ்க்கையைப் பெற்றுத் தருவோம் என்கின்ற உறுதியை, மீண்டும் எனது அன்பிற்குரிய, தமிழக மக்களுக்கு வழங்கி மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு, எனது பதிலுரையை, இந்த மாபெரும் பேரவை முன் வைக்க விரும்புகிறேன்.

**திட்ட ஒதுக்கீடும் வளர்ச்சிப் பணிகளும்**

1991-ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்பு, தமிழகத்தில் முடங்கிக் கிடந்த, வளர்ச்சிப் பணிகளை முடுக்கி விட்டோம். வளர்ச்சிப் பணிகளுக்கு ஒதுக்கப் படுகின்ற நிதி ஒதுக்கீடு, மிகக் குறைவாக இருந்த ஒரு காலகட்டத்தில், தமிழகத்தின் தொடர்ச்சியான முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, எப்படியேனும் வளர்ச்சிப் பணிகளுக்கு ஒரு ஊக்கமும் உத்வேகமும் கொடுப்பதற்கு, எங்கள் அரசு, நல்ல பல திட்டங்களை வகுத்தது.

1991-92-ஆம் ஆண்டு, வெறும் 1600 கோடி ரூபாயாக மட்டுமே, இருந்த திட்ட ஒதுக்கீடு வருகின்ற நிதி ஆண்டில், அதாவது 1995-96-ஆம் ஆண்டில், 3200 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஆக, நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, திட்டப் பணிகள், 2 மடங்காகி உள்ளன என்பதையும், நான்கே ஆண்டுகளில் திட்ட ஒதுக்கீடு 100 சதவிகித உயர்வைக் கண்டு உள்ளது என்பதையும், காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் கூட, ஒரு அற்புதமான சாதனை என்பதை ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

தவறுகள் நடக்கும்போது மட்டும், சுட்டிக் காட்டுகின்ற எதிர்க்கட்சிகள், சாதனைகள் படைக்கும்போது, அவற்றைத் திறந்த மனதுடன் பாராட்டவேண்டும், பேசுவதற்கும், ஏசுவதற்கும் மட்டுமே எதிர்க்கட்சிகள் படைக்கப்பட்டிருப்பது, தமிழகத்தின் துரதிருஷ்டம். நாங்கள் என்ன செய்யமுடியும்?

திட்ட ஒதுக்கீட்டினை உயர்த்தியது மட்டுமின்றி, ஒவ்வொரு ஆண்டும் இந்த அரசு, ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கும் அதிகமாக, இத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது என்பதையும், பெருமிதத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1991-92-இல் திட்ட ஒதுக்கீடான 1600 கோடி ரூபாய்க்கும் மேலாகத் திட்டப் பணிகளுக்குச் செலவிடப்பட்ட தொகை, 1726 கோடி ரூபாயாகும். 1992-93-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட, 1751 கோடி ரூபாய்க்கும் அதிகமாக, 1935 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 1993-94-ஆம் ஆண்டின் திட்ட ஒதுக்கீடு, 2101 கோடி ரூபாய், ஆனால், செலவிடப்பட்ட தொகையோ, 2232 கோடி ரூபாய். இது அனைத்திந்திய அளவில் வெகுவாகப் பாராட்டப்பட்ட, ஒரு மாபெரும் சாதனை ஆகும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின், மூன்று ஆண்டுக் காலகட்டத்தை, எவ்விதக் குறைபாடும் இன்றிச் செயல்படுத்திவரும், வெகு சில மாநிலங்களில், தமிழகமும் ஒன்று என்பது தமிழக மக்களுக்குப் பெருமைதரும் செய்தி ஆகும்.

பல மாநிலங்கள், திட்ட ஒதுக்கீட்டை நிறைவேற்ற இயலாமல், அடுத்த ஆண்டில் குறைத்தும், அவ்வாறு குறைக்கப்பட்ட அளவிலான, திட்ட ஒதுக்கீட்டினையே, எய்தி உள்ளன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 1993-94-ஆம் நிதி ஆண்டில், பீகார், அரியானா, குஜராத், மத்தியப் பிரதேசம், ஒரிசா, பஞ்சாப்,

உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம், ஆகிய மாநிலங்கள், கொடுக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டினை எய்தவில்லை. ஏதோ புள்ளி விவரங்கள் இல்லாமல், நான் பொதுவாகக் கூறுவதாக, இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் கருதிவிடக் கூடாதே, என்ற எச்சரிக்கை உணர்வில், சில குறிப்பிட்ட மாநிலங்களின் செயல்பாடுகளை, எடுத்துரைக்க விரும்பு கிறேன்.

*1993-94*-ஆம் ஆண்டிற்கான பீகார் மாநிலத்தின் திட்ட ஒதுக்கீடு, *2300* கோடி ரூபாயாகும். ஆனால், எய்தப்பட்ட தொகை, *750* கோடி ரூபாய் மட்டுமே.

மத்தியப் பிரதேச மாநிலத்திற்குத் திட்ட ஒதுக்கீடு, *2400* கோடி ரூபாய், ஆனால் எய்திய தொகை, *2018* கோடி ரூபாய் மட்டுமே.

உத்திரப்பிரதேச மாநிலம் *4050* கோடி ரூபாயைத் திட்ட ஒதுக்கீடாகப் பெற்றிருந்தும், *2800* கோடி ரூபாய் வரைதான், எய்தி இருக்கின்றது.

மேற்கு வங்காள மாநிலத்திற்கு, *1550* கோடி ரூபாய், திட்ட ஒதுக்கீடு கிடைத்திருந்த போதிலும், எய்தப்பட்டத் தொகை, *1021* கோடி ரூபாய்தான்.

எனவே, தேசிய அளவில் பொருளாதார நெருக்கடியையும், மாநில அளவில் கடுமை யான நிதி நெருக்கடியையும் சமாளித்து ஆண்டுக்காண்டு திட்ட ஒதுக்கீட்டை அதிகரித்து அந்த ஒதுக்கீட்டிற்கும் அதிகமாகச் செலவழித்து வளர்ச்சிப் பணிகளை வெற்றி கரமாக நிறைவேற்றியது. தமிழ்நாடு தான் என்பதைத் தமிழகத்தின் முன்னேற்றத்தின் மீது ஆர்வமும், அக்கறையும் கொண்டுள்ள வர்கள் ஒப்புக்கொள்வார்கள். மாறிவருகின்ற பொருளாதாரச் சூழ்நிலைகளிலும், மாநிலப் பொருளாதாரத்தை நசுக்குகின்ற பல சூழ்நிலைகளிலும், நாம் படைத்துள்ள சாதனை மகத்தானதாகும்.

*1991*-ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது சட்டம் ஒழுங்கு கெட்டு வன்முறை தலைவிரித்து ஆடியது. காலியான கஜானாவும் தாங்க முடியாத கடன் சுமையும் கடுமையான நிதிப் பிரச் சினையும்தான் நாங்கள் முந்தைய ஆட்சியி லிருந்து, பெற்ற சொத்துக்கள், *1991-92*-ஆம் ஆண்டில், திட்டப் பணிகளை நிறைவேற்று வதற்கு *1220* கோடி ரூபாய் பற்றாக்குறையை, நாங்கள் சமாளிக்க வேண்டி இருந்தது. ஒருபுறம், சிக்கன நடவடிக்கைகளையும் மற்றொரு புறம், கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் முயற்சிகளும் எனது நேரடி மேற்பார்வையில், நான் மேற்கொண்டதால் தான், நிதி நெருக்கடியை ஒரு கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்தோம். திட்டப் பணிகளைக் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடித்துக் காட்டினோம்.

ஆனால், அண்மையில் சில மாநிலங்கள் நிதிப் பற்றாக்குறையைச் சரிக்கட்ட இயலாமல் தனியார் நிதி நிறுவனங்களிடம் 17.5 சதவிகித வட்டியில் கடன்கள் பெற்றுள்ளன. இவ்வாறு அதிக வட்டியில் பெறப்படும் கடன்கள் வருங்காலங்களில் மாநிலங்களின் கடன் பளுவையும் நிதி நெருக்கடியையும் அதி கரிக்கக் கூடும் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், எங்கள் ஆட்சியில் நாங்கள் எந்த ஒரு காலகட்டத்திலும் தனியார் நிதி நிறுவனங்களை அணுகி, கடன் கேட்க வில்லை. மாறாக நிதி நெருக்கடியைக் கட்டுப்படுத்தி திட்டச் செலவுகளைக் கொடுத்ததற்கும் அதிகமாகச் செலவழித் துள்ளோம் என்பது எங்கள் அரசின் நிதி மேலாண்மையையும் நிர்வாகத் திறனையும் எடுத்துக்காட்டுகிறது என்பதை இங்கு இருக்கின்ற எதிர்க்கட்சிகள் ஒப்புக்கொள்ளா விட்டாலும், நாடு முழுவதும் இருக்கின்ற நல்ல மனம் படைத்தவர்கள் ஏற்றுக்கொள் வார்கள். பரந்த மனம் படைத்தவர்கள் பாராட்டுவார்கள்.

## தமிழன்னைக்கு ஆராதனை

அமிழ்தினும் இனிய அருந்தமிழ் மொழி யின் பெருமைகளையும், தொன்மை மிக்க தமிழ்க் கலாச்சாரத்தின் சிறப்பியல்புகளையும் மீண்டும் ஒரு முறை அகிலம் முழுவதும் உணர்த்தி உலகெங்கும் வாழும் தமிழ் நெஞ்சங்கள் உவகை கொள்ளும் வண்ணம் தஞ்சைத் தரணியில் "எட்டாவது உலகத் தமிழ் மாநாடு" சீரோடும், சிறப்போடும் நடைபெற்றது.

நம் நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்து நின்று வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு எழுச்சி தரும் நிகழ்ச்சியாக அமைந்தது என்பதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியுடன் எண்ணற்ற தூய தமிழ் உள்ளங்களின் உணர்வுகளோடு, என்னுடைய உணர்வு களையும் இணைத்துக் கொள்கிறேன்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரப்புவதற்கும் அன்னைத் தமிழின் அமுதக் குரல் உலக அரங்கினில் தனிச் சிறப்போடு ஒலித்திடவும் நடைபெற்ற மாநாட்டு நிகழ்ச்சிகள் சரித்திரச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாக மாறிவிட்டன. தஞ்சைத் தரணியில் குவிந்திட்ட இலட்சக்கணக்கான தமிழ் நெஞ்சங்களுக்கும், தொலைக்காட்சியில் கண்டுகளித்த கோடிக்கணக்கான தமிழ் உள்ளங்களுக்கும், எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினை இந்த மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மொழிக்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும், தமிழ் ஆராய்ச்சிப் பணிகளுக்கும் தமிழ்நாட்டின் கலை மற்றும் பண்பாட்டுச் செறிவின் எழுச்சிக்கும் இந்த மாநாடு வழிவகுத்தது என்பதைத் 'தமிழ்கூறும் நல்லுலகம்' வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக, மாறிவரும் சமுதாயத்தின் புதிய சூழ்நிலைகளுக்கேற்ப தமிழ் மொழி நவீனப் போக்குகளையும் சமுதாய மாற்றங்களையும் தன்னகத்தே ஏற்றுக்கொண்டு, முத்தமிழோடு அறிவியல் தமிழையும் மலரச் செய்ய வேண்டும் என்ற உரத்த சிந்தனையை இந்த உலகத் தமிழ் மாநாடு நம் மனங்களில் ஏற்படுத்தி உள்ளது. தமிழ் அறிஞர்கள், கல்வியாளர்கள், மொழி ஆராய்ச்சியாளர்கள் ஏன் பொதுமக்கள் மத்தியிலும் இது ஒரு மாபெரும் பாதிப்பை ஏற்படுத்தியதை எவரும் மறுக்கமுடியாது.

தமிழன்னைக்கு நாம் நடத்திய ஆராதனையைத் திறந்த மனத்துடன் பார்க்க மனமில்லாத பரந்த மனம் படைத்தவர்கள் இந்த உலகத் தமிழ் மாநாடு ஒரு தேவையற்ற கொண்டாட்டம் என்றும் ஊதாரித்தனமான வீண் செலவு என்றும் வசை பாடினார்கள். நாங்கள் அரசியல் ஆதாயத்திற்காக இந்த மாநாட்டை நடத்தினோமோ இல்லையோ, நிச்சயமாக அவர்கள் அரசியல் ஆதாயத் திற்காகத் தான் வரட்டுப் புகார்களையும் வீண் வாதங்களையும் முன் வைத்தனர் என்பதைத் தமிழகம் நன்கறியும் தமிழ்த் தாய்க்கு ஆராதனை செய்ய மேற்கொண்ட இந்த மாநாட்டை நிறுத்துவதற்குப் பலர் மேற்கொண்ட முயற்சிகள் கானல் நீராகவும் கனவுக் கதைகளாகவும் முடிந்தன. தமிழ் அன்னைக்குத்துரோகம்செய்ய நினைப்பவர்கள் என்றும் வெற்றி பெற முடியாது என்பதை இந்த மாநாடு தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது.

இந்த மாநாடு என்ன சாதித்துவிட்டது? எதற்காக இத்தனைச் செலவு என்று வரட்டுக் கூச்சல் போட்டவர்கள் தஞ்சை மாநகரின் எழிலைக் கூட்டுவதற்கு நாம் மேற்கொண் முயற்சிகளை இருட்டடிப்புச் செய்ய முயல் வது ஏன்? பல கோடி ரூபாய் செலவில் புதிய சாலைகள், பாலங்கள், கட்டடங்கள், தங்கு மிடங்கள் நினைவுச் சின்னங்கள், புராதனக் கோயில்கள், புனரமைக்கும் பணிகள் ஆகியவற்றை இவர்கள் மறந்தது ஏன்? தஞ்சை மாநகர் முற்றிலும் புதிய வசதிகளைப் பெற்று புதிய எழிலுடன் விளங்குவதைத் தஞ்சை வாழ் மக்கள் இன்று எண்ணி எண்ணி மகிழ்ந்துகொண்டிருப்பதை மறைக்கப் பார்ப்பது ஏன்?

உண்மையில் மாநாட்டுச் செலவில் பெரும் பகுதி, தஞ்சை நகர மேம்பாட்டுப் பணி களுக்காகச் செலவிட வேண்டும் என்ற முடி வினை நாங்கள் தெளிந்த சிந்தனையோடு மேற்கொண்டோம் என்பதை எங்களைக் குறை கூறுபவர்கள் மறந்துவிட்டார்கள்.

"இன்றும் தமிழ் என்றும் தமிழ்" என்ற புதிய எழுச்சி முழக்கத்தை அந்த மாநாட்டில் வழங்கிய நான், இன்று புதிதாக "அறிவியலிலும் தமிழ், அனைத்திலும் தமிழ்" என்ற புதிய முழக்கத்தையும் சேர்த்து, இந்த மாமன்றத்தின் வாயிலாக எழுப்புவதில், நான் உண்மையில் பெருமிதம் அடைகிறேன்.

எதிர்காலச் சந்ததியினரின் நன்மையைக் கருத்தில் கொண்டு எழில்மிகு தமிழை ஏற்றம் பெறச் செய்வதற்கு மூன்று தமிழுடன் நான்காம் தமிழாம் "அறிவியல் தமிழை", அறிவியல் உணர்வுடன் வளர்க்க வேண்டும் என்று இந்த மாமன்றத்து உறுப்பினர்கள் சார்பில் தமிழக மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

## ஏழாவது தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள்

இந்த ஆண்டு டிசம்பர் மாத இறுதியில், சென்னை மாநகரில் SAF Games என்று அழைக்கப்படுகின்ற, 7வது தெற்காசியப் நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள், சீரோடும் சிறப்போடும் நடைபெற உள்ளன. இதற்காகத் தமிழக அரசு 120 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளது. இந்தியா உட்பட 9

தெற்காசிய நாடுகள் பங்கேற்கும் இந்த விளையாட்டுப் போட்டிகளை முதல்முறையாக ஒரு மாநிலத் தலைநகரில் நடத்த முடிவெடுத்துள்ளதும் அந்த அரிய பெருமை முதன் முறையாகத் தமிழ் நாட்டிற்குக் கிடைந்துள்ளதையும் இந்த மாமன்றத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்து எனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு 40 கோடி ரூபாய் மதிப்பில் ஏழரை மாதங்களில், சர்வதேசத் தரத்தில் கட்டி முடிக்கப்பட்ட சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம் தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியின் ஒரு வெளிப்பாடு ஆகும். எங்கள் ஆட்சியில் நடைபெற்ற சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகள், இனி சென்னை மாநகரம் அத்தகைய விளையாட்டுப் போட்டிகளைத் திறம்பட நடத்தும் முழுத் தகுதியைப் பெற்றுள்ளது என்பதையும் நிரூபித்துள்ளன.

பல்வேறு விளையாட்டுத் துறையைச் சேர்ந்த சுமார் 2000 விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் மற்றும் 1500 விளையாட்டு அலுவலர்களும் பங்கேற்கவிருக்கும் இந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்திட தேவையான விளையாட்டு அரங்கங்கள், கட்டடங்கள், தங்கும் விடுதிகள், மின் விளக்கு வசதிகள், தொலைத் தொடர்புச் சாதனங்கள், ஆகியவை அமைக்கப்பட்டு வருகின்றன. தடகளப் போட்டிகள் உட்பட சுமார் 14 முக்கிய விளையாட்டுகள், இடம்பெற உள்ள இந்தப் போட்டிகளை நடத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை Infrastructural facilities உருவாக்கித்தர எல்லா ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை ஒட்டி உருவாக்கப்பட்டு வரும் புதிய வசதிகளும், விளையாட்டுப் பூங்காக்களும் சென்னை மாநகரின் எழிலுக்கு, மேலும் பொலிவு சேர்க்கும். விளையாட்டு வீரர்கள் , மற்றும் வீராங்கனைகள் தங்குவதற்காகச் சென்னை அருகே உள்ள கோயம்பேடு பகுதியில் அமைக்கப்பட்டு வரும் 'விளையாட்டு நகரம்' Sports village சென்னை நகரின் வீட்டு வசதியை, வெகுவாக மேம்படுத்தும் என்பதிலும் ஐயமில்லை.

சர்வதேசத் தரத்தில் விளையாட்டு அரங்கங்கள், புதிய விளையாட்டுச் சாதனங்கள், சர்வதேச விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுடன் தமிழக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் போட்டியிடவும், பழகிப் பார்க்கவும் கிடைக்கின்ற வாய்ப்புகள், பொதுமக்கள் மத்தியில் விளையாட்டை ஊக்குவிக்க வேண்டும் என்று தோன்றியுள்ள ஒரு புதிய எழுச்சி, இவை அனைத்தும், தமிழக விளையாட்டு வளர்ச்சிக்கு வரப்பிரசாதமாக அமைய உள்ளன.

இந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கு முன்னரும், அவை முடிவுறும் போதும் கண்கவர் கலை நிகழ்ச்சிகள், பிரம்மாண்டமான முறையில் நடைபெற உள்ளன. ஏழாவது தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள், சென்னை நகரின் வரலாற்றுச் சிறப்புக்கும், விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கும், ஒரு புதிய மைல் கல்லாக அமையும் என்பதை, மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**அதிக அந்நியச் செலாவணியும் ஆபத்தே!**

இந்திய நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு 20 பில்லியன் டாலர் அளவை எட்டியுள்ளது என்று அண்மையில் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள் மத்திய வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ளார்கள். மிகக் குறுகிய காலகட்டத்தில் அந்நியச் செலாவணி இருப்பு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்க பெரும் சாதனை தான். நல்லதைப் பாராட்டும் மனம் படைத்த நாங்கள் இதை மனதாரப் பாராட்டும் அதே நேரத்தில், அதிகமான அந்நியச் செலாவணியினால் ஏற்படுகின்ற பின் விளைவுகளில் மத்திய அரசு கவனமாக இருக்க வேண்டும் என்பதையும் எடுத்துரைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இறக்குமதி செய்யாமல் எந்தவொரு நாடும் தனித்து இயங்க முடியாது என்கின்ற சூழ்நிலையில், பிற நாடுகளில் இருந்து பொருட்களையும், பணிகளையும், (Services) இறக்குமதி செய்ய, இந்த அந்நியச் செலாவணி நமக்குத் தேவைப்படுகிறது.

ஏற்றுமதியை அதிகப்படுத்துவதன் மூலமும், வெளிநாட்டவர்களின் முதலீடுகளை நம் நாட்டிற்குக் கொண்டு வருவதன் மூலமும், அந்நியச் செலாவணியை அதிகரிக்க இயலும், தற்போது இந்திய அரசிடம் உள்ள 20

பில்லியன் டாலர் அந்நியச் செலாவணி இருப்பு பெருமளவிற்கு அயல் நாட்டவர் நம் நாட்டில் செய்த முதலீடுகளால் கிடைத்த தாகும். இந்த வெளிநாட்டு முதலீடுகள் இரண்டு வகையாக நமக்குக் கிடைக்கின்றன. அயல் நாட்டவர் நேரிடையாகத் தொழில் களில் முதலீடு செய்வது அதாவது Foreign Direct Investment என்பது ஒரு வகை முதலீடு ஆகும். இந்த வகை முதலீடுகள், உற்பத்தி நோக்கங்களுக்காகக் குறிப்பிட்ட தொழில் திட்டங்களில் முதலீடு செய்யப்படுவதால், முழு மனதோடு வரவேற்கக்கூடிய முதலீடு ஆகும். இன்னொரு வகையான முதலீடு, இந்தியத் தொழில் நிறுவனங்களின் பங்குப் பத்திரங்கள், கடன் ஈட்டுப் பத்திரங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்வதாகும்.

நமது நாட்டிற்குள் வந்துள்ள முதலீடு களில், பெரும் பகுதிப் பங்குகள் மற்றும் கடன் ஈட்டுப் பத்திரங்களில் செய்யப்பட்ட முதலீடு களாக உள்ளன. எந்தவகையில் அந்நியச் செலாவணி கிடைத்தால் என்ன என்கின்ற கேள்வி மாண்புமிகு உறுப்பினர்கள் மனதில் எழலாம். இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இத்தகைய முதலீடுகள் செய்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எந்தவொரு காலகட்டத்தி லும் தங்களது முதலீடுகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியும். அத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்படும் போது, பெரிய அளவி லான அந்நியச் செலாவணிப் பிரச்சினை ஏற்பட்டுவிடும்.

Mexico நாட்டின் அனுபவமே அதற்கு ஒரு சான்றாகும். இதுபோன்று, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்குகளில் செய்த முதலீடு களை திடீரெனத் திருப்பப் பெற்றதால் ஒரு பொருளாதார நெருக்கடியே, ஒரு Financial, economical crisis Mexico நாட்டில் நேர்ந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இத்தகைய ஒரு சூழ்நிலை இங்கு ஏற்பட்டு விடாமல் பாதுகாக்க, முதலீடுகளைத் திரும் பப் பெற்றுக்கொள்வதில் சில கட்டுப் பாடுகளை விதிக்கவேண்டும். இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் இந்த விதிமுறைகளை அதிகப்படுத்தியுள்ளதாகத் தெரிகின்றது.

இந்தப் பிரச்சினை ஒருபுறம் இருக்க, கிடைத்திருக்கின்ற அந்நியச் செலாவணியை எப்படிப் பயனப்படுத்துகிறோம் என்பதும் ஒரு முக்கியமான அம்சம் ஆகும். அந்நியச் செலாவணியை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். இல்லையென்றால் புழக்கத்தில் உள்ள அதிகப் பணம், பண வீக்கத்தை Inflationஐ மேலும் அதிகரித்துவிடும்.

அந்நியச் செலாவணியை மிக அதிக அளவில் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்குத் தேவையான, உற்பத்தி நோக்கங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். பங்குகளில் மறைமுக முதலீடுகளாக உள்ள அந்நியச் செலாவணி, உற்பத்தி நோக்கத்திற்கு நேரடி முதலீடுகளாக மாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே Mexico நாட்டு அனுபவத்தின் அடிப்படையில் எழுகின்ற ஒரு கருத்தாகும்.

சமூக நலப் பாதுகாப்புத் திட்டங்களின் அவசியத்தை தற்போது மத்திய அரசு முழுமையாக உணர்ந்து, இத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் முன்னிலையில் இருக் கின்ற தமிழ்நாட்டைப் பின்பற்றி இத்தகைய திட்டங்கள் தமிழ்நாட்டில் ஏற்படுத்தி உள்ள சமுதாய முன்னேற்றங்களை மனதில் வைத்து இந்த ஆண்டு பல்வேறு சமூக நலத் திட்டங்களை அறிவித்துள்ளது, உண்மையில் வரவேற்கக் கூடியதாகும். குறைந்தபட்சம் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாகச் சமூக நலத் திட்டங்களில் மத்திய அரசு அதிகமான கவனம் செலுத்தவேண்டும். ஏழை எளிய மக்கள் சமூகப் பாதுகாப்பிற்காகத் திட்டங் களில் முதலீடு அதிகரிக்க வேண்டும் என்று நாங்கள் கூறிவந்த கருத்து, இன்றைக்கு முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதை எண்ணி மகிழ்கின்றேன். "We have proved again and again that Tamil Nadu is the trend-setter and the fore-funner in Social Welfare Schemes".

மாநில அரசுகள் வெளிநாட்டுக் கடன்கள் பெறுகின்ற வாய்ப்புகளை, மத்திய அரசு முற்றிலுமாகத் தடுத்து நிறுத்தியுள்ளது. கட்டுப்பாடற்ற வெளிநாட்டுக் கடன்கள் ஒரு மாநிலத்தின் பொருளாதாரத்தைச் சீரழித்து விடும் என்பது உண்மை என்றாலும், ஒரு குறிப்பிட்ட உச்ச வரம்பிற்குள் தனியார் நிறு வனங்கள் அனுமதிக்கப்படுவதைப் போல, மாநில அரசுகளுக்கும் மாநில அரசு நிறு வனங்களுக்கும் கடன்பெற அனுமதிக்கப் பட்டால், முன்னுரிமைத் திட்டங்களைச் செயல்படுத்தி, பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்க உதவிகரமாக இருக்கும் என்பதே எனது கருத்து, எனவே மாநில அரசுகளுக்கும், மாநில அரசு நிறுவனங்களுக்கும் இந்த அனுமதி வழங்க மத்திய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## சமூகத் துறைச் செலவு

**1995-96** வரவு செலவுத் திட்டத்தில், மத்திய அரசு, தேசிய சமூக உதவித் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. தமிழ்நாடு போன்ற சமூக நலத் துறையில் முன்னோடியாக இருக்கின்ற மாநிலங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. ஏனென்றால், 3 ஆண்டுகளுக்கு முன்னால், இதே மத்திய அரசு, உணவுக்கான மானியத் தொகை, உரங்களுக்கான மானியத்தொகை, கிராம வளர்ச்சி மற்றும் சமூகத் துறை ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகளையும் கணிசமாகக் குறைத்துவிட்டது. இன்று அந்தப் போக்கு முற்றிலுமாக மாறி உள்ளது வரவேற்கத்தக்க ஒரு மாறுதலாகும்.

அனைத்து இந்திய அளவில், சமூகத் துறையில் Social Sectorகளில் செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் வெகுவாகக் குறைக்கப்பட்ட போதும், சமூகத் துறைகளின் மீதான செலவினத்தை எத்தனை நிதி நெருக் கடியிலும் தொடர்ந்து உயர்த்திக் கொண்டே சென்ற வெகு சில மாநிலங்களில், தமிழ்நாடு எப்போதும் முன்னணியில் இருந்த மாநிலம் ஆகும். புரட்சித் தலைவர் டாக்டர் எம்ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த சத்துணவுத் திட்டம் உட்பட, நாம் செயல்படுத்திவருகின்ற பல்வேறு சமூகநலத் திட்டங்களை, மத்திய அரசு உட்பட பல்வேறு நிறுவனங்கள் குறை கூறி விமர்சனம் செய்த காலமும் உண்டு. இருந்தாலும் நாம் அவற்றையெல்லாம் துணிச்சலாக எதிர்கொண்டு வெற்றி கண்டோம்.

"காய்தல் உவத்தல் அகற்றி" நமது செயல்பாடுகளை, நடுநிலையொட்டி, சீர்தூக்கிப் பார்த்த பலரும், சமுதாய முன்னேற்றத்தில் நமது சாதனைகளை மனம் திறந்து பாராட்டியிருக்கிறார்கள். Economic and Political Weekly என்ற வார இதழ், மக்கள் தொகைப் பிறப்பு இறப்பு நோய்கள் முதலான புள்ளி விவரங்களை ஆராய்ந்து 1994-ஆம் ஆண்டு மே இதழில் வெளியிட்ட ஒரு கட்டுரையில், தமிழ்நாட்டின் சாதனைகளைப் பெரிதும் பாராட்டி உள்ளது. நாம் மேற்கொண்ட சமூக நலப் பணிகளின் விளைவாகத் தமிழ்நாட்டின் பிறப்பு விகிதங்கள், இறப்பு விகிதங்கள், உயிருடன் பிறந்த குழந்தைகளின் பிறப்பு விகிதங்கள் போன்றவை, அகில இந்தியச் சராசரியைக் காட்டிலும், தமிழ்நாட்டில் கணிசமான அளவு குறைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி உள்ளது.

சமூகத் துறைகளில் இத்தனை ஈடுபாட்டை நாம் காட்டி வருவதற்குக் காரணமே இதன் முக்கியத்துவத்தை அறிந்துதான். தமிழ்நாட்டின் வருவாய்க் கணக்கின் மீதான செல வினத்தில், அதாவது Revenueexpenditure-இல் 41 சதவிகிதம் Social Sector எனப்படும் சமூகத் துறைக்குச் செலவிடப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதிலும், இந்தச் செலவின அளவு, இந்திய நாட்டிலுள்ள மாநிலங்களில் சமூகத் துறைக்கு அதிக அளவு செய்யப்படும் மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது என்பதைத் தெரிவிப்பதிலும் பெருமிதம் அடைகின்றேன். இந்தக் கொள்கையால், சமூகத் துறையை மேம்படுத்த நாம் மேற்கொண்ட கொள்கை களும் செயல்பாடுகளும் உறுதியான ஆதாயங்களை நமக்குப் பெற்றுக் கொடுத் துள்ளன.

இத்தனை விளக்கமாக இங்கே இவற்றை நான் விவரிப்பதற்குக் காரணம், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்ஜி.ஆர். ஆகியோரின் அடியொற்றி நாம் மேற்கொண்டு வருகின்ற இலட்சியங்கள் மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இப்போதாவது மத்திய அரசு உணர்ந்து, ஏழை எளிய, வசதி வாய்ப்பற்ற மக்களின் நலனுக்காகச் சமூக நலத் திட்டங்களைக் கொண்டு வந்து இருக்கின்றதே என்பதை எண்ணித் தான்.

மத்திய அரசின் திட்டங்களையும் செயல்பாடுகளையும் விரிவாக எடுத்துரைத்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசு அறிவித்துள்ள பெரும்பாலான சமூக நலத் திட்டங்கள் அனைத்துமே பல ஆண்டுகளாகத் தமிழ்நாடு அரசால் செயல் படுத்தப்பட்டு வருபவை என்பதை எடுத் துக்கூற மறந்துவிட்டார் அல்லது, சொல்ல அவருக்கு மனம் வரவில்லை.

அவர் ஒப்புக்கொள்ள மறுத்தாலும், "மதிய உணவுத் திட்டம்" "முதியோர் உதவித் தொகைத் திட்டம்" "துயருற்ற குடும்பங்களுக்கு நிவாரண உதவித் திட்டம்", "கருவுற்ற தாய்மார்கள் பாலூட்டும் தாய்மார்கள் நலத் திட்டம்" அகிய திட்டங்கள் ஏற்கெனவே தமிழக அரசால் பல ஆண்டுகளாகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களாகும். Imitation is the highest form of praise என்பார்கள். "ஒருவரை அப்படியே

பின்பற்றுவது, அவருக்குச் சூட்டப்படும் மிக உயர்ந்த புகழாரம்" என்ற அடிப்படையில், மத்திய அரசு தமிழ்நாடு அரசின் சமூக நலத் திட்டங்களை அப்படியே பின்பற்றி இருப்பது, எங்களுக்குக் கிடைத்துள்ள மிக உயர்ந்த பாராட்டாகவே நாங்கள் கருதுகிறோம்.

### பொது விநியோகத் திட்டம்

பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அரிசி, கோதுமை, சர்க்கரை, மற்றும் மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கச் செய்வதில் நாங்கள் தனி ஆர்வம் காட்டி வருகின்றோம். கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகப் பொது விநியோகத் திட்டமானது, பட்டிதொட்டி எங்கும் நன் முறையில் நடத்தப் பெறுவதை, மற்ற மாநிலங்கள் அனைத்தும் வியந்து பாராட்டி, நமது முறையை அவர்களும் பின்பற்றி வருகின்றனர். தவறாமல் பெய்கின்ற பருவ மழையும், தட்டுப்பாடற்ற நதி நீர்ப் பாசனமும், கடந்த மூன்றே முக்கால் அண்டுகளாகத் தமிழ்நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் நலைமையை, குறிப்பாக, தாராளமாக அரிசி அனைவருக்கும் கிடைக்கக் கூடிய நிலைமையைத் தொடர்ந்து நன்முறையில் தக்க வைத்துக்கொள்ளும்படி செய்துள்ளன.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசி விலை உயர்த்தப் பட்டதற்கு, மத்திய அரசு வழங்கும் அரிசி விலையேற்றமும், கூடி வருகின்ற மானியச் சுமையும்தான், அடிப்படைக் காரணங்கள். எங்களைப் பொறுத்தவரையில் அரிசியின் விலையை ஏற்றக்கூடாது என்றே விரும்புகிறோம். அதனால்தான், ஏழை எளியவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, பல சமயங்களில் அறிவிக்கப்பட்ட அரிசி விலையேற்றத்தை, விலக்கிக்கொண்டதும் உண்டு. சில நேரங்களில் குறைத்துக் கொண்டதும் உண்டு.

பொதுவாகவே, தமிழ்நாட்டில் நெற் பயிர் அதிகம் விளையக்கூடிய பகுதிகளாக தஞ்சை, நாகை, திருச்சி போன்றப் பகுதிகளில் அரசு ஏகபோக நெல்கொள்முதல் முறையை மேற்கொண்டு வந்தது. இந்த முறையில் விவசாயிகளுக்கு விற்பனைச் சுதந்திரம் கிடைப்பதில்லை. எனவே விவசாயிகளின் தரப்பில் இருந்து பல ஆண்டுகளாகவே ஏகபோகக் கொள்முதல் முறையைக் கைவிட வேண்டும் என அரசுக்குக் கோரிக்கைகள் வந்த வண்ணம் இருந்தன. நான்கு ஆண்டு களாகத் தமிழகத்தில் நிகழ்ந்த அமோகமான உணவுத் தானியங்களின் விளைச்சலைக் கருத்தில் கொண்டும், டெல்டா பகுதி விவசாயிகளுக்கு, விற்பனைச் சுதந்தரம் பெற்றுத் தருவதற்கும், ஏகபோகக் கொள் முதல் முறையை நீக்கி, இணைக் கொள்முதல் முறையை எங்கள் அரசு நடைமுறைப் படுத்தியது.

Support Price Scheme அதாவது ஆதார விலைத் திட்டமும் இதனுடன் அமல்படுத்தப் படுவதால், ஒரு குறிப்பிட்ட விலைக்குக் குறைவாக விற்றால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கே, அவர்கள் விற்று விடலாம். கடந்த **1993**-ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டுவரும் இந்த இணைக் கொள்முதல் முறை, விவசாயிகள், மொத்த வணிகர்கள், மற்றும் அனைத்துத் தரப்பு மக்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெற்று, நன்முறையில் இயங்கி வருகின்றது.

ஏழை எளிய மக்களின் நலன் கருதி, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையை, மத்திய அரசு எந்தக் காரணத்தைக் கொண்டும் உயர்த்தக்கூடாது என்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி யுள்ளேன். மேலும், தேசிய வளர்ச்சிக் குழு, National Development Council கூட்டத்தை, விரைவில் கூட்டி, இதுகுறித்து ஒரு ஆக்கபூர்வமான முடிவு எடுக்க வேண்டும் என்பதே எனது கருத்து. அரிசி விலை உயராமல் பாதுகாக்க அனைத்து ஆக்கபூர்வ மான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தொழில் வளர்ச்சியின் புதிய பரிமாணங்கள்

சமீப காலமாகச் சட்டம் ஒழுங்கைக் குறைகூற முடியாத நிலையிலும், திட்டச் செலவுகளைக் குற்றம் சாட்ட முடியாத ஒரு நிலையிலும் எதிர்க்கட்சிகள் ஒரு புதிய உத்தியைக் கையாள ஆரம்பித்துவிட்டார்கள். யாரோ, ஒரு பகுதியில் நடத்திய Market Survey, Research போன்றவற்றைப் பயன்படுத்தி, தமிழகத் தொழில் துறையில் பின்னடைவு ஏற்பட்டுவிட்டது என்றும், தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டிற்கு உகந்த

சூழ்நிலைகள் இல்லை என்றும், மற்ற மாநிலங்களில் இருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் முதலீடு செய்ய வருகின்றவர்கள் இதனால் மனம் தளர்ந்து வேறு மாநிலங்களுக்குச் சென்று விடுகிறார்கள் என்றும் ஒரு தவறான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

*1966-ஆம்* ஆண்டு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், TIDCO துவங்கப்பட்ட நாளிலிருந்து, *1991-ஆம்* ஆண்டு, அதாவது நாங்கள் பதவி ஏற்ற நாள்வரை, *26* ஆண்டுகளில் மொத்தம் *49* தொழில்கள் *1431* கோடி ரூபாய் செலவில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, *1991* முதல் இன்று வரை மூன்றே மூக்கால் ஆண்டுகளில் *45* புதிய தொழில்கள் *10,936* கோடி ரூபாய் செலவில் துவக்கி இருக்கிறோம். இதை ஒப்பிட்டுப் பார்த்தால் கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகள் எத்தனை ஆதாரமற்றவை என்பதும், தமிழகம், தொழில் துறையில் விரைந்த முன்னேற்றம் அடைந்துவருகிறது என்பதும் தெளிவாகும் என்று கருதுகிறேன்.

Madras Aluminium Company Limited எனப்படும் MALCO *1965*-இல் ஆரம்பிக்கப்பட்டு *1987*-இல் உற்பத்தி நின்றுவிட்டது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் நலனைக் கருதியும், ஒரு நல்ல தொழில் வீணாகப் போய்விடக் கூடாது என்பதற்காகவும், தமிழக அரசு அதன் பிரச்சினைகளை ஆராய்ந்து, *26* கோடி ரூய் அளவிற்குப் பல்வேறு உதவிகளை வழங்கியதோடு, விற்பனை வரியை *5* ஆண்டுக் காலத்திற்குத் தள்ளிப் போடவும், சலுகை விலையில் மின்சாரத்தை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இத்தனைக்குப் பிறகும், இந்தக் கம்பெனியின் நிர்வாகத்தால், தொழிற்சாலையை மீண்டும் அதன் பழைய நிலைக்குக் கொண்டுவர முடியவில்லை. இருப்பினும் இங்குப் பணி புரியும் *1172* தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, பம்பாயைச் சேர்ந்த Sterlite Industries Ltd நிறுவனத்திடம் MALCO நிறுவனம் ஒப்படைக்கப்பட்டது. மீண்டும் இத்தொழிற்சாலை செயல்பட நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். எல்லாப் பணியாளர்களும் மீண்டும் வேலைக்குத் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுவார்கள். *1990-91* மற்று *1991-92* ஆகிய ஆண்டுகளில் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படாமல் நிலுவையில் இருநத ஊதியத் தொகை, இந்தக் கம்பெனியால் வழங்கப்பட்டுவிட்டது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு தொழில்களுக்கு ஊக்கமளிக்கின்ற அதே நேரத்தில், சில பெருந் தொழில்களையும், தமிழ்நாட்டில் அமைக்கவேண்டும் என்பதே எங்கள் எண்ணம். வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்தவும், பொருளாதார வளர்ச்சிக்குப் புதிய ஊக்கத்தை வழங்கவும், இந்தப் பெருந் தொழில்கள் உதவிகரமாக விளங்கும் என்பதை, நாங்கள் நன்கு அறிவோம். எனவேதான், தமிழ்நாட்டில் உள்ள கட்டமைப்புகள் Infrastructure, தொழில் நுட்ப அறிவு Technical Know how, திறமை வாய்ந்த தொழிலாளர்கள் Skilled Manpower ஆகியவற்றைச் சீர்தூக்கி, கார் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தமிழ்நாட்டில் கொண்டு வர முடியும் என்று கணிக்கப்பட்டுள்ளது. தானியங்கி வாகனங்கள் Automobiles தயாரிக்கின்ற பல தொழில் முனைவோர்கள். கார் போன்ற தானியங்கிகளைத் தயாரிக்கும், அயல்நாட்டுத் தொழில் நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்து, கார் தொழிற்சாலையை நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளார்கள். இத்திட்டங்கள் தமிழகத்திற்கு வரவேண்டும் என்பதற்காகத் தமிழக அரசு Mahindra & Mahindra, Telco, Eicher, Maruti Udyog ஆகிய தொழில் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. தொழிற்சாலை வைப்பதற்கான, தகுதியான இடமும் கவர்ச்சிகரமான ஊக்கங்களும், அடிப்படை வசதிகளும் இவர்களுக்கு வழங்குவாது குறித்தும், முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கார் தொழிற்சாலையை, சென்னையில் நிறுவுவதற்க முன் வரவேண்டுமென, நானே சில தொழில் நிறுவனங்களின் தலைவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

வல்லுநர்கள் குழுக்கள் சில, இத்திட்டம் தொடர்பாகத் தமிழகத்திற்கு வந்து பேச்சு வார்த்தை நடத்தியிருக்கின்றனர். எனவே, விரைவில் கார் தயாரிக்கும் திட்டம் ஒன்றைத் தமிழகத்தில் செயல்படுத்துவதற்கான ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொண்டு வருகிறோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்தங்கிய மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு, வேளாண்மையை வளர்ப்பதோடு, புதிய தொழில்களையும், உருவாக்க வேண்டும் என்பதே எங்கள் அரசின் நோக்க

மாகும்.

2.3.1994 அன்று நடைபெற்ற, திருவண்ணா மலை சம்புவராயர் மாவட்ட அரசு விழாவில், அப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு, இரும்பு எஃகுத் தொழிற்சாலை நிறுவுவதற் கான, சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, அதன் விளைவுகள் சாதகமாக இருந்தால், ஒரு மாபெரும் தொழிற்சாலை உருவாக்கப்படும் என்று அறிவித்தேன். திருவண்ணாமலைப் பகுதியிலும், சேலம் மாவட்டம் கஞ்சமலைப் பகுதியிலும், 450 மில்லியன் டன்கள் இரும்புத் தாது இருப்பதாக ஒரு ஆராய்ச்சியில் 1960-ஆம் ஆண்டிலேயே கண்டறியப்பட்டுள் ளது. ஆனால், இத்தனை ஆண்டுகளாக இந்த இரும்புத் தாது எடுப்பதற்கும், இரும்புத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவில்லை.

1992-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பூமியிலிருந்து இரும்புத் தாது எடுத்து ஸ்டீல் தயாரிக்கின்ற பணியை நாமே தமிழ்நாட்டில் மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரி களுக்கு ஆணை பிறப்பித்தேன். Dastur & Co மற்றும் Mecon நிறுவனங்கள் இரும்புத் தாது எடுப்பது குறித்தும், ஸ்டீல் தொழிற்சாலை அமைப்பது குறித்தும் நவீன தொழில்நுட்பத் தின் அடிப்படையில் மேற்கொள்ள இயலுமா என்று ஆராய்ச்சியை மேற்கொண்டனர். திருவண்ணாமலை மற்றும் கஞ்சமலைப் பகுதிகளில் 35 சதவிகிதம் இரும்புத் தாது கிடைத்தாலும் அவற்றை 67 சதவிகித இரும் பாக மாற்றுவதற்கும், அதை ஸ்டீலாகத் தயாரிப்பதற்கும் சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதை இந்நிறுவனத்தின் ஆய்வுகள் தெளிவுபடுத்தி உள்ளன.

Austriaவில் உள்ள Voest Alpine என்ற நிறுவனம் கண்டுபிடித்துள்ள Corex process என்ற தயாரிப்பு முறையைக் கடைப்பிடித்து, ஸ்டீல் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இரும்புத் தாதுவை எடுத்து, சிறிய குண்டு களாக உருக்கி, அவற்றை ஸ்டீல் பட்டை களாகத் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்த 3300 கோடி ரூபாய் செலவாகும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் TIDCO Austria நாட்டு நிறுவனத்துடன் தொழில்நுட்ப உதவிகளுக்காக ஒரு ஒப்பந்தமும் செய்து கொண்டுள்ளது. 3000 பேருக்கும் மேல் நேரடி வேலைவாய்ப்பும், கிட்டத்தட்ட 50,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் இந்தத் திட்டத்தினால் கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அது மட்டுமின்றி, இப்பகுதி யின் பொருளாதார வளர்ச்சிக்கும், தமிழகத் தின் ஒட்டுமொத்தத் தொழில் வளர்ச்சிக்கும் இந்தத் தொழிற்சாலை ஒரு திருப்புமுனையாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எப்படியேனும் இந்தத் தொழில் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்கின்ற எனது ஆணையின் பேரில் TIDCO நிறுவனம் Associate Sector இல் Grasim Industries என்ற Birla நிறுவனத்தை Co-promoter ஆகத் தேர்ந்தெடுத்து ஒப்பந்தத்திலும் கையெழுத் திட்டுள்ளது. அமைதியாக, ஆர்ப்பாட்டம் இன்றி இந்த அரசு ஆக்கபூர்வமான பணி களில் ஈடுபட்டு வருகின்றது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இத்திட்டம் விளங்கும் என்பதில் ஒரு எடுத்துக்காட்டாக இத்திட்டம் விளங்கும் என்பதில் ஐயமில்லை. இன்னும் 4,5 ஆண்டுகளில் இத்திட்டம் முழுமை பெறும் போது, பின்தங்கிய திருவண்ணாமலை சம்பு வராயர் மாவட்டம் ஒரு உறுதியான முன் னேற்றத்தினைப் பெறும் என்று நம்புகிறேன்.

**மின் உற்பத்தியே நமது இலக்கு!**

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத் திற்கு, விரைந்த அதன் தொழில் வளர்ச்சியும், அதற்கு அடிப்படையான மின் உற்பத்திப் பெருக்கமும், அவசியம் ஆகும். எங்கள் அரசு, இதை நன்கு உணர்ந்திருப்பதால்தான், பதவி ஏற்ற நான் முதல், மின் உற்பத்திப் பெருக் கத்தில் தீவிர ஈடுபாட்டினைக் காட்டி வருகின்றது.

எரிசக்தித் துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, புதியதாக "எரிசக்தித் துறை" Energy Department ஒன்றை உருவாக்கினோம்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், முறைசார்ந்த மற்றும் முறை சாரா மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு எங்கள் அரசு ஆழ்ந்த கவனம் செலுத்திவருகிறது. முறை சாரா மின் உற்பத்திப் பெருக்கத்தில், அகில இந்திய அளவிலே, இன்று தமிழகம், மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாக இருக்கின்றது என்றால், அது மிகையாகாது. சூரியஒளி வாயிலாக மின் உற்பத்தி, காற் றாலைகள் வாயிலாக மின் உற்பத்தி எரிவாயு வாயிலாக மின் உற்பத்தி கடல் அலைகளுக்கு இடையேயான வெப்பத்தின் வாயிலாக மின் உற்பத்தி என்று முறைசாரா மின் உற்பத்திப் பெருக்கத்தில், ஒரு முன்னோடி மாநிலமாகத்

தமிழகம் இன்று திகழ்ந்து கொண்டிருக்கிறது.

காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி செய்வதில் தமிழகம் இந்தியாவிலேயே முத லிடம் பெற்றுள்ளது. 100 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைப் பண்ணையில் தனியார் பங்கு மிகுதியாகப் பெறப்பட்டுள் ளது.

அதே சமயத்தில், அனல் மற்றும் புனல் மின் உற்பத்தியிலும், தமிழகம் கடந்த மூன்றே முக்கால் ஆண்டுக் காலத்தில், முன்னர் எப்பொழுதும் இல்லாத அளவிற்குச் சுமார் 9.220 மெகாவாட் அளவிலான மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு வலுவான ஒரு அடித்தளத்தை அமைத்துள்ளது.

இவற்றில் 5.020 மெகாவாட் மின்சாரம், தயாரிக்கும் திட்டங்களைப் பல்வேறு தனியார் நிறுவனங்கள் செயல்படுத்த உள்ளன. மின்சார நிலையங்கள் அமைக்கப்படும் பணி தொடங்கப்பட்டு, இன்று பல்வேறு நிலை களில் உள்ளன. மேலும், 5.200 மெகாவாட் திறன் கொண்ட புதிய மின்சார நிலையங் களைத் ·தொடங்குவதற்குத் தனியார் நிறு வனங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும், சில ஆண்டுகள் கழித்து, நான் குறிப்பிட்டுள்ள இந்த 9.220 மெகாவாட் திறனுள்ள மின் நிலையங்கள் உற்பத்தியைத் துவக்கும்போது, தமிழகம் மின் உற்பத்தியில், அகில இந்திய அளவிலே, முன்னணி மாநிலமாக மாறும். மேலும், மின்சாரத்தில் ஒரு உபரி மாநிலமாக மாறும் என்பதில் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை உள்ளது.

1991-ஆம் ஆண்டு 21.287 மில்லியன் யூனிட்டுகளாக இருந்த, தமிழகத்தின் வரு டாந்திர மின் உற்பத்தி, 1995-ஆம் ஆண்டு 29,956 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந் துள்ளது. நமது மாநிலத்தில் மின்வெட்டு என்பது கிடையாது என்ற உன்னதமான நிலையை உருவாக்குவதில் கடந்த மூன்றே முக்கால் ஆண்டுக் காலமாக எங்களது அரசு எந்த அளவுக்கு, தொலைநோக்குப் பார்வை யோடு, ஆழ்ந்த ஈடுபாட்டுடன் செயலாற்றி வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப் பினர்கள் நன்கு அறிவார்கள்.

எங்களது அரசு பதவியேற்ற பிறகு, தமிழகத்தின் மின் உற்பத்தி அதிகரித்துள்ளது. 1991-இல், ஒரு நாளைக்குத் தமிழ்நாட்டில், உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் சராசரி அளவு 5.8 கோடி யூனிட்டாகும். ஆனால், இன்று ஒரு நாளைக்கு 8.2 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, விநி யோகம் செய்யப்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுவதில் பெருமிதம் கொள்கிறேன்.

தனியார் துறையின் முதலீட்டோடு, துவங்கப்பட்ட மிகப்பெரிய மின் உற்பத்தித் திட்டங்கள், வெகு விரைவில் புதியதோர் சாதனையைப் படைத்திடும் என்பதில், எனக்கு எவ்வித ஐயமும் இல்லை. குறிப்பாக, 7,500 கோடி ரூபாய் மதிப்பில், 1,500 மெகாவாட் மின்சாம் உற்பத்தி செய்யும், ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம், 376 கோடி ரூபாய் மதிப்பில், 120 மெகாவாட் திறனுள்ள பேசின்பிரிட்ஜ் எரிவாயு மின் சுழலி மின் உற்பத்தித் திட்டம், உலக அளவிலே முதன் முதலாக, சிதம்பரனார் மாவட்டத்தில் குலசேகரப் பட்டினம் கடற்கரைப் பகுதியில், Sea Solar Incorporated என்ற அமெரிக்க நிறுவனத்தின் மூலமாக, 800 கோடி ரூபாய் செலவில், கடல் நீர் வெப்பத்திலிருந்து, 100 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தேவர் குளத்தில், 55 கோடி ரூபாய் மதிப்பில் காற்றாலைகளிலிருந்து 15 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம், ஆகியவை தமிழக மின்துறைக்கு ஒரு புதிய பரி மாணத்தை உருவாக்கித் தரும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். ஆக, எங்களது அரசு தற்போது மேற்கொண்டு வரும், அனைத்துப் புதிய மின் உற்பத்தித் திட்டங் களும், முழுத் திறனில் செயலாற்றத் துவங்கும்போது நிச்சயமாகத் தமிழகம் மின் உற்பத்தியில் ஒரு உபரி மாநிலமாக மாறும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்களின் முன்பு வைப்பதில், நான் மகிழ்ச்சி அடை கின்றேன்.

**வேளாண்மையில் புதிய சாதனைகள்**

1994-ஆம் ஆண்டிலேயே உணவுப் பொருட்கள் உற்பத்தியில் புதிய இலக்கான ஒரு கோடி டன் உற்பத்தி அளவை அடைந்து விட்டோம். இது ஒரு சாதனைச் சரித்திரம் ஆகும்.

இந்த ஆண்டு அரிசி உற்பத்தியில் 85 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்ததோடு, பஞ்சாப் மாநிலத்திற்கு அடுத்தபடியாக, அகில இந்திய அளவில் அரிசி உற்பத்தித் திறனில்

இரண்டாம் இடத்தை வகிக்கின்ற பெருமையைப் பெற்றுள்ளோம் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*1991*-ஆம் ஆண்டு *57.82* இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி, *1994-95*ஆம் ஆண்டில் *85* இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்து, அரிசி உற்பத்தியில் புதிய சிகரத்தைத் தொட்டிருக்கிறோம். அதே போல, *1991*-ஆம் ஆண்டில், *12.41* இலட்சம் டன்னாக இருந்த எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி *1993-94*ஆம் ஆண்டில் *20.32* இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்து, சாதனைச் சரித்திரம் படைத்து, எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறனில், நாம் அகில இந்திய அளவில் முதலிடத்தைப் பெற வழிவகுத்துள்ளது.

*1991-92*-ஆம் ஆண்டில் *242.30* இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவில் இருந்த கரும்பு உற்பத்தி, *1993-94*-ஆம் ஆண்டு *320.42* இலட்சம் மெட்ரிக் டன் உயர்ந்துள்ளது. கரும்பு உற்பத்தித் திறனில், இன்று நாம் அகில இந்திய அளவில் முதலிடத்தைப் பெற்றுள்ளோம்.

*1991-92*-ஆம் ஆண்டு *1.79* இலட்சம் எக்டேர் அளவில் மட்டும் இருந்த தென்னை, *1993-94*-ஆம் ஆண்டு, *2.40* இலட்சம் எக்டேர் நிலப்பரப்பாக உயர்ந்துள்ளது. தென்னைப் பயிர் உற்பத்தித் திறனில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளோம்.

தமிழக வேளாண்மைத்துறை எங்களது ஆட்சிக் காலத்தில், புதிய எல்லைகளைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. புதிய பரிமாணத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு எக்டேருக்கு *3* டன் அளவில் உள்ள அரிசி உற்பத்தித் திறனை, *4* டன்னாக உயர்த்தவேண்டும் என்பதுதான், எங்கள் அரசின் அடுத்த கட்ட இலட்சியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத்துறையில் ஒரு உன்னதமான சூழ்நிலையை அடைவதற்கு, எங்கள் அரசு திட்டமிட்டுச் செயல்பட்டு வருகின்றது.

**முன்னோடிச் சமூக நலத் திட்டங்கள்**

ஒரு சமுதாயமானது, வளர்ச்சியுற்ற சமுதாயம் என்ற பாராட்டினைப் பெற வேண்டும் என்றால், அதிலுள்ள மகளிரும், மழலையரும், நன்கு பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த உயரிய கொள்கையை முற்றிலும் கடைப்பிடித்துவரும் ஒரு முன்னோடி மாநிலம், தமிழ்நாடு என்பதைப் பல வெளிநாட்டு நிறுவனங்களே பாராட்டி மகிழ்ந்துள்ளன. மகளிர் மற்றும் குழந்தைகள், ஆதரவற்றோர், முதியோர் ஆகியோரது நலன்களைக் காத்து, சமுதாயத்தில் அவர்கள் தன்னம்பிக்கையோடு வாழ, தொலைநோக்குப் பார்வையோடு, திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதுதான் சமூக நலப் பணி என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இந்தத் தெளிந்த கருத்தின் அடிப்படையில் தான் சென்ற ஆண்டு *1994* மார்ச் மாதம் அன்னை தெரசா அவர்களின் தலைமையில் பன்னாட்டுச் சமூகவியல் அறிஞர்கள் முன்னிலையில் மகளிருக்கான கருத்தரங்கம் ஒன்றினை நான் நடத்தி, அதில் தமிழக அரசின் Vision 2000 என்ற தமிழக சமூக நலப் பணிக் கொள்கை விளக்கத்தினை வெளியிட்டேன். அகில இந்தியாவிலேயே, மற்ற மாநிலங்கள் அனைத்திற்கும் முன்னோடியாக அமைந்துள்ள இந்தத் திட்டமானது, UNESCO நிறுவனம் முதற்கொண்டு பல மாநிலங்கள் உட்பட, மத்திய சமூக நலத்துறை வரை, பல்வேறு அமைப்புகளின் மனமார்ந்த பாராட்டுக்களைப் பெற்றது.

இதேபோன்று, குழந்தைகள் நலத்தைப் பொறுத்தவரையில், எங்களது அரசு, *15* அம்சக் குழந்தைகள் நலத் திட்டம் ஒன்றினை உருவாக்கிச் செயல்படுத்தி வருகின்றது. ஒரு குழந்தை பிறக்கும்போது குறைந்தபட்சம், *3* கிலோ எடையாவது இருக்கவேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையில் இருந்து ஆரம்பித்து, தடுப்பு ஊசி, ஊட்டச் சத்துக் குறைவை அகற்றுதல், மருத்துவ வசதிகள், சத்துணவு வழங்குதல், கட்டாயத் தொடக்கக் கல்வி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளைப் பெற்றுத் தருதல், குழந்தைத் தொழிலாளர் முறையை நீக்குதல், பெண் குழந்தை சிசு வதையை ஒழித்தல் மற்றும் பிறப்பில் ஏற்படும் இருதயக் கோளாறுகளை நிவர்த்தி செய்தல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். எங்கள் ஆட்சிக் காலத்தில்தான் சமூக நலத்துறைப் பணிகளில், ஒரு புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

உடல் ஊனமுற்றவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில், எங்களது அரசு முதன் முறையாக *1993*-ஆம் ஆண்டு உடல்

ஊனமுற்றோர் நலத்துறை ஒன்றினை ஏற்படுத்தியது. உடல் ஊனமுற்றவர்களை அதிக அளவில், பணிக்கு அமர்த்திய நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகளை வழங்கும் திட்டத்தையும், கண்பார்வையற்ற, காது கேளாத மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்க பரிசுகள் வழங்கும் திட்டத்தையும் எங்களது அரசு நடைமுறைப்படுத்தி வருகின்றது. உடல் ஊனமுற்ற மாணவ மாணவியருக்குப் பணியிடங்களை வழங்குவதிலும், எங்களது அரசு முன்னணியில் இருக்கின்றது.

அகில இந்திய அளவிலே, முதன் முறையாகத் தமிழ்நாட்டில்தான் கடந்த **3.12.1994** அன்று உடல் ஊனமுற்றோருக்கான நலன் பற்றிய மாநிலக் கொள்கை விளக்கக் குறிப்பு ஒன்றினை நான் வெளியிட்டிருந்தேன். உடல் ஊனமுற்றவர்களின் நலனைப் பாதுகாக்கின்ற வகையில் நமது மாநிலத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் இனி இதற்கான கொள்கை விளக்கக் குறிப்பின் அடிப்படையில்தான் எடுக்கப்படும் என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களது அரசு சமூக நலப் பணிகளில் மனித நேயத்தை வெகுவாகப் புகுத்தி இருக்கின்றது என்பதற்கு இமாலயச் சான்று, நாங்கள் நடைமுறைப்படுத்தி வரும் 'அரசு தொட்டில் குழந்தைகள் திட்டம்'. பெண் சிசு வதை என்ற சமூகக் கொடுமைக்கு நிச்சயமாக முற்றுப்புள்ளி வைப்போம். இந்தப் புரட்சிகரமான திட்டமும், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டமும் நமது நாட்டில் மட்டுமன்றி, பல்வேறு மேலை நாடுகளிலும், வெகுவாகப் பாராட்டப்படுகின்ற ஒரு உன்னதமான திட்டமாகத் திகழ்கின்றது. Undoubtedly our Government is a Government with a Human face.

## ஊனமுற்றோருக்கான புதிய கொள்கை

மகளிரின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் புதிய கொள்கை ஒன்றையும், 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டத்தையும் அறிவித்தது போல, உடல் ஊனமுன்றோரின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காக முதன் முதலில் ஒரு புதிய கொள்கையினை, நாங்கள் இந்த ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வந்தோம், ஊனமுன்றோருக்குத் தேவை, உதட்டு அளவிலான பரிதாபமும் பச்சாதாபமும் அல்ல. உள்ளத்தில் இருந்து எழுகின்ற உண்மையான சகோதரப் பாசமும், மனிதாபிமானமும் தான் தேவை என்பதை உலகிற்கு வெளிப்படுத்தவே, இந்தக் கொள்கையை நாங்கள் கொண்டுவந்தோம்.

Disabled என்று குறிப்பிடுவதையே இன்று மாற்றி, Otherwise abled என்று, ஊனமுற்றவர்கள் தங்களால் முடிந்த வேறொரு துறையில் சிறப்புப் பெற்றுள்ளதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். வறுமை மற்றும் அறியாமையின் காரணமாகப் பிறப்பிலேயே ஊனங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும், குறைபாடுகளைக் குறைப்பதற்கும், ஊனமுற்றவர்களையும் சமுதாயத்தில் மதிப்பு மிக்க அங்கமாக ஏற்றுக் கொள்வதற்கும், நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் இந்தக் கொள்கையின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

ஊனமுன்றோர் நலன் காக்கும் நிறுவனங்களின் செயல்பாடுகளை மாநில அளவில் ஒருங்கிணைப்பதற்காக, மாநிலப்புனர் வாழ்வுக் குழு State Rehabilitation Council என்ற அமைப்பு முதன் முதலாக ஏற்படுத்தப்படுகிறது. ஊனமுற்றோர்களின் உரிமைகளைப் பாதுகாக்க சட்டபூர்வமான வடிவம் வழங்கப்படும் என்று நான் அறிவித்தேன். எங்கள் கொள்கையும் அதன் செயலாக்கமும், ஊனமுற்றோரின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக, புதிய மைல் கல்லாக விளங்கும் என்ற உறுதியாக நம்பிகிறேன்.

## இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம்

மக்கள் போற்றும் ஒரு அரசாங்கம், அதன் குடிமக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், பெற்றுத் தருவதைத் தன் தலையாய கடமையாகக் கொள்ளவேண்டும் என்பது, அறிஞர்களின் கூற்று. இந்த மனித நேயக் கொள்கையின் அடிப்படையில் தான், இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பள்ளிக் குழந்தைகளுக்காக இலவசச் சத்துணவுத் திட்டத்தினைக் கொண்டுவந்தார்கள். மேலும், பொங்கல் திருநாள் போன்ற முக்கியப் பண்டிகை தினங்களிலேனும், மற்றவர்களைப் போல, தாமும் உடுத்திக்கொள்ள புதிய ஆடைகள் இல்லையே என்று, எண்ணற்ற ஏழை எளியோர், நலிந்த பிரிவு மக்கள் மனம் வாடக்கூடாது. என்ற எண்ணத்தின் அடிப்படையில் அவர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தையும் கொண்டு

வந்தார்கள். அந்த இரண்டு திட்டங்களுமே தமிழகத்தில் உள்ள கோடிக் கணக்கான ஏழை எளியவர்களின் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டது என்றால், அது மிகையாகாது.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் இலட்சியங்களையே, எங்கள் பாதைகளாக்கி, வெற்றி நடை போட்டுவரும், எங்களது அரசு, இந்த இரண்டு திட்டங்களையுமே கண்ணெனக்காத்து, புதுப் பொலிவோடு செயல்படுத்தி வருகின்றது என்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். குறிப்பாக, *1992*-ஆம் ஆண்டு பொங்கல் நாளன்று தமிழகத்திலுள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும், ஏழை எளியவர்களுக்கும் *45* கோடி ரூபாய் செலவில் சுமார் *61* இலட்சம் ஆண்களுக்கு இலவச வேட்டிகளும், *61* இலட்சம் பெண்களுக்கு இலவசச் சேலைகளும் வழங்கப்பட்டு மக்கள் நலப்பணியில் ஒரு மகத்தான அத்தியாயம் துவங்கப்பட்டது. பின்னர், *1993*-ஆம் ஆண்டும் *56,25* கோடி ரூபாய் செலவில் *63* லட்சம் ஆண்கள், மற்றும் *63* இலட்சம் பெண்கள் ஆகியோருக்கு இலவச வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டன. *1994*-ஆம் ஆண்டு *65* கோடி ரூபாய் செலவில், அதைப் போலவே, இலவச வேட்டிகளும், சேலைகளும் வழங்கப்பட்டன. ஏழை, எளியோர் நலன் காக்கும் இத்தகைய பணிகளில் ஈடுபட்டுள்ள ஒரே மாநிலமாக அகில இந்திய அளவில் தமிழகம் திகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதைப் பெருமிதத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த மாபெரும் திட்டத்திற்கான வேட்டிகள் மற்றும் சேலைகள் ஆகியவை கோ-ஆப்டெக்ஸ் போன்ற கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து மட்டுமே பெறப்பட்டு, தனியார் நிறுவனங்களில் இருந்து, கொள்முதல் செய்யப்படுவது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது என்பதையும், ஆயிரக்கணக்கான கைத்தறித் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை இந்தத் திட்டம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆதிதிராவிடர்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகள்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சமுதாய இடர்ப்பாடுகளைக் களையவும், எங்கள் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் ஏராளம்.

கல்லாமையும், இல்லாமையும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின் மக்களின், வாழ்க்கையிலிருந்து விலகப் பல்வேறு திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கல்விக் கண்ணைத் திறந்து வைப்பதே மிகப்பெரிய பணி என்று கருதி எங்கள் அரசு, இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்குப் பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்தியதால், பொதுத் தேர்வுகளில் வெற்றி பெறுவோரின் எண்ணிக்கை, அதிகரித்துள்ளது. *1991- 92*-இல், பத்தாம் வகுப்பில் வெற்றி பெற்றவர்கள், *34* சதவிகிதம் மட்டுமே. ஆனால், *1992 -93*-இல், *70* சதவிகிதமாக உயர்ந்துள்ளது. அதே போலப் பன்னிரண்டாம் வகுப்பு- Plus two தேர்வில், வெற்றி பெற்றவர்களின் சதவிகிதம், *38* லிருந்து *56* ஆக, உயர்ந்துள்ளது. *110* புதிய விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. *3,500*க்கு மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். *8.30* கோடி ரூபாய் செலவில் *34* புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ஆதிதிரா்விடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியருக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை *8* இலட்சம் ரூபாயிலிருந்து *18* இலட்சம் ரூபாய்க்கு இன்று உயர்ந்துள்ளது. இவை போதாது என்பதால் தான், *6.12.1994* அன்று மாநகரத் தந்தையாக, இருந்த பெரியவர் சிவராஜ் அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைக்கும்போது, மேலும் பல புதிய திட்டங்களை அறிவித்தேன். அவை அனைத்திற்கும் ஆணைகளை வழங்கியுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில், அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் *2000* மாணவ மாணவியர்களுக்குத், தொடர்ந்து மேற்படிப்புப் படிக்க, மாதம் *150* ரூபாய் வழங்கப்படும். படிப்பை இடையிலேயே நிறுத்திவிடும் பழக்கத்தை, மாற்றும் முயற்சியாக *3,4,5*,வகுப்புகள் பயிலும் *30,000* மாணவியருக்கு ஆண்டுதோறும் *500* ரூபாய் உதவித் தொகையும், *6*-ஆம் வகுப்பில் படிக்கும் மாணவியருக்கு, மாதம் ஒன்றுக்கு *150* ரூபாய் வீதம், *30,000* பேருக்கு, உதவித் தொகையும் வழங்கப்படும். இவை இந்தச் சமுதாய மக்களின் கல்வித் தரத்தை உயர்த்த

உதவும் என்று நம்புகிறேன.

குடிநீர் வசதியைப் பொறுத்தவரை ஒரு குடிநீர் வசதி கூட இல்லாத, ஆதி திராவிட குடியிருப்புகளே, தமிழ்நாட்டில் ஏதும் இல்லை என்ற நிலை, இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்தான் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்கள் வாழ்வு வளம்பெற, ஒளி பெறப்பாடுபட்ட அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நினைவாக, ஒரு நினைவு மண்டபம் சென்னையில் கட்ட, எங்கள் அரசு 5 கோடி ரூபாய் அனுமதி அளித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகள் அனைத்திற்கும், எல்லா அடிப்படை வசதிகளையும் செய்து தருவதற்கு, 125 கோடி ரூபாய் செலவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2,754 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி, 2,085 குடியிருப்புகளுக்குத் தெருவிளக்கு, 3 இலட்சம் குடிசைகளுக்கு மின்விளக்கு வசதி, 2123 குடியிருப்புகளுக்கு இடுகாட்டு வசதி, 3076 குடியிருப்புகளுக்கு இடுகாட்டுக்குப் பாதை வசதி, 2,309 குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை ஆகியவை. 1995-96ஆம் ஆண்டு இறுதிக்குள் செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் செயலாக்கம், அமைச்சர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றினால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்தில், எங்களது அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்பதை, 1990-91ஆம் ஆண்டில் 37.05 கோடி ரூபாயாக இருந்த, நிதி ஒதுக்கீடு, 1994- 95-ஆம் ஆண்டில், 161.40 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது நன்கு விளக்கும். இந்த ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திற்காக, மேதகு ஆளுநரின் உரையில் எங்கள் அரசு அறிவித்த புதிய திட்டங்களும், உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீடும், அவர்களது வாழ்வில் புதியதோர் மலர்ச்சியை நிச்சயம் உருவாக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

**நெசவாளர்களின் துயர் துடைக்கும் அரசு!**

மிகப் பழமையான தொழில்களில் ஒன்றாகவும், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்வு அளிக்கும் தொழிலாகவும், கைத்தறித் தொழில் இன்று விளங்கி வருகிறது. தமிழ் நாட்டில் உள்ள சுமார் 4.2 இலட்சம் கைத்தறிகள், 1475 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு, கிராமப்புற மக்களின் பொருளாதர உயர்வுக்கு வழிவகுத்து வருகின்றது.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற சித்தாந்தத்தில் ஆழமான நம்பிக்கை வைத்து, கைத்தறிகளை அதிக அளவில் கூட்டுறவு அமைப்புகளின் கீழ் கொண்டுவரும் பணியில், தமிழ்நாடு அகில இந்திய அளவில், முன்னணியில் உள்ளது. குறிப்பாக, மகளிர் முன்னேற்றத்தில் புதிய இலக்குகளைத் தோற்றுவித்த தமிழ்நாட்டில், மகளிருக்காகப் புதியதாக 43 கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சமீபத்தில் பருத்தி விலை உயர்வினால், நெசவாளர் சமுதாயம் வெகுவாகப் பாதிக்கப்பட்ட போது, தமிழ் நாட்டு நெசவாளர் குடும்பங்களின் துயர் துடைக்க உறுதி பூண்டேன். டெல்லியில், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து, பருத்தி விலையைக் குறைக்கவும், துணிநூல் Yarn கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் வழங்கிட ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்தினேன். மாண்புமிகு பாரதப் பிரதமரின் ஆணைப்படி, மாண்புமிகு மத்திய கைத்தறித் துறை அமைச்சர், திரு.வெங்கடசாமி அவர்கள் என்னைச் சந்தித்து, நெசவாளர்களின் பிரச்சினைகள் குறித்து, என்னிடம் விவாதித்தார்கள்.

என்னுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு மாண்புமிகு மத்திய கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள், சிட்டா நூலுக்கான மானியத் தொகையை, ஒரு கிலோவிற்கு 15 ரூபாயிலிருந்து 20 ரூபாயாக உயர்த்தி உடனடியாக ஆணைகள் பிறப்பித்தார்கள். எனது வற்புறுத்தலின் பேரில், இந்தத் திட்டத்தை, மேலும் ஓராண்டுக் காலத்திற்கு அதாவது, 31.3.1996 வரை நீட்டித்துத் தர ஒப்புக் கொண்டார்கள்.

என்னுடைய ஆலோசனையின் பேரில், குறைந்த எண்ணிக்கை கொண்ட பருத்தித் துணி நூல்களின், அதாவது low count yarn - களின் ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்படும்

என்ற உறுதியையும் வழங்கினார். மேலும், கூட்டுறவு நூற்பாலைகளுக்கு NABARD நிறுவனத்தின் மூலம் சலுகைகளுடன் கூடிய நிதி உதவி வழங்குவதற்கும் வழிவகை செய்யப்படும் என மத்திய அரசின் சார்பில் உறுதி அளிக்கப்பட்டது. கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழங்கப்படும் சலுகைளின் பலன்கள், ஏழை நெசவாளிகளுக்கும் சென்றடையும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

நெசவாளர்களின் சார்பில் நான் முன் வைத்த பல கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், என்னுடைய வேண்டுகோளினை ஏற்று, தேசிய ஆடை அலங்காரத் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி - National Institute of Fashion Technology ஒன்றினைச் சென்னையில் நிறுவ, மத்திய அரசு ஒப்புக்கொண்டது. இந்த நிதி ஆண்டில், இந்த நிறுவனம் Cooptex நிறுவத்தின் கட்டடத்தில் செயல்படத் துவங்கும் என்பதையும், தரமணிப் பகுதியில் இந்த நிறுவனத்திற்கு நில ஒதுக்கீடு செய்து தரப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழை நெசவாளர்களின் சமூகப்பாதுகாப்பைக் கருதி, கைத்தறி நெசவாளர் குடும்ப ஒய்வூதியத் திட்டத்தை எங்களது அரசு 1993-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், 58 வயதிற்கு முன்பு இறக்க நேரிடும், நெசவாளர்களின் குடும்பத்திற்கு, 10 ஆண்டுக் காலத்திற்கு, மாதந்தோறும் 250 ரூபாய் வீதம் ஒய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த மனித நேய திட்டத்தில் 50,000 க்கும் மேலான நேசவாளர் குடும்பங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இவை மட்டுமின்றி, எங்களது அரசு நெசவாளர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 'ஒருங்கிணைந்த கைத்தறிக் கிராம மேம்பாட்டுத் திட்டம்' - Integrated Handloom Village Development Scheme. தொழில் கூடத்துடன் இணைந்த வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம், வறுமையில் வாடும் நெசவாளர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம். குழும ஆயுள் காப்பீட்டுத் திட்டம், அதாவது, Group Insurance Scheme ஆகியவற்றைச் செயல்படுத்தி வருகிறது.

நெசவாளிகள் வாழ்கின்ற பகுதிகளில் ஆழ் குழாய்க் கிணறுகள், நல்வாழ்வு மையங்கள் ஆகியவை அமைத்துத் தரப்படுகின்றன. நெசவாளப் பெருங்குடி மக்களின் வாழ்க்கையில் ஒரு புதிய பரிமாணத்தை உண்டாக்குவதற்கு எங்கள் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொடக்கக் கல்வியில் சில புதிய தொடக்கங்கள்**

மக்களின் கல்வி அறிவு உயர, உயரத்தான், நாட்டின் வளர்ச்சி முழுமை அடையும் என்பதை நன்கு உணர்ந்த எங்களது அரசு, கடந்த நான்கு ஆண்டுகளாகவே, கல்வித் துறையின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத் துவத்தை வழங்கி வந்துள்ளதை இந்த மாமன்றம் நன்கு அறியும். தமிழ்நாட்டின் மொத்த ஆண்டுச் செலவீட்டில் 22 சதவீதம், கல்வித் துறைக்காகவே செலவிடப்பட்டது என்பதும், அகில இந்திய அளவிலே எழுத்தறிவுத் தேர்ச்சியில் தமிழ்நாடு, கேரள மாநிலத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தை வகிக்கின்றது என்பதும், தமிழக மக்கள் ஒவ்வொருவரும் பெருமைப் படக்கூடிய செய்திகள் ஆகும்.

தொடக்கப்பள்ளி அளவில், முழுமையாகப் பெண் ஆசிரியைகளே பணிபுரிய வேண்டும் என்ற கொள்கையை முழுமையாகச் செயல்படுத்தி வருவதில் நமது மாநிலம் முன்னணியில் நிற்கின்றது. 6 வயதிலிருந்து 14 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும், கட்டாயத் தொடக்கக் கல்வியினை வழங்கிட, வழி வகை செய்யும் புதிய சட்டத்தை, இயற்றி, மற்ற மாநிலங்களுக்கு இன்று முன்னோடியாக இருந்துவருகிறோம் என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலவசச் சத்துணவுத் திட்டம், இலவசச் சீருடை, இலவசப் பாடப் புத்தகங்கள், இலவசப் பேருந்துப் பயணச் சீட்டு ஆகிய திட்டங்கள் எங்களது அரசால், மென்மேலும் மெருகூட்டப்பட்டு, செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நாளைய தமிழகம் கல்வியில் சிறந்து, பொருளாதாரத்தில் வளர்ந்து, வீர நடை போட அதற்கு இன்றைய இளைய தலைமுறைக்குச் சிறந்த அடிப்படையை உருவாக்கிட நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்.

கடந்த மூன்றரை ஆண்டுகளில், 431 புதிய தொடக்கப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. 710 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும்; 355 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும்; 225 உயர் நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக வும்; உயர்த்தப்பட்டுள்ளன.

85 இலட்சம் ரூபாய் செலவில், சென்னையில் புதிதாக அமைக்கப்படவுள்ள கல்வி, தொலைக்காட்சி நிறுவனம், பள்ளி மாணவ, மாணவியருக்கான கல்வித் தொடர்பான, வீடியோ கேசட்டுகளைத் தயாரித்து, அவற்றைத் தொலைக்காட்சி மூலம், ஒளிபரப்பத் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தின் அறிவியல் கல்வி மேலை நாடுகளுக்கு இணையாகப் புதிய எல்லை களைத் தொடும் என்று, உறுதியாக நம்புகிறேன்.

உலக வங்கியின் உதவியோடு 120 கோடி, ரூபாய் செலவில் திருவண்ணாமலை சம்புவராயர், தருமபுரி, தென்னார்க்காடு வள்ளலார் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் ஆகிய நான்கு மாவட்டங் களில் தொடக்கக் கல்வி வளர்ச்சித் திட்டம், செயல்படுத்தப்படும் போது, தமிழகத்தில் தொடக்கக் கல்வி, புதியதோர் பரிமாணத் தைப் பெறும் என்பதிலும், சந்தேகம் இல்லை.

மேலை நாடுகளுக்கு இணையாகத் தமிழகம் உயர்கல்வித் துறையிலும் வளர்ச் சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத் தமிழ்நாடு உயர்கல்விக் குழுமம் - Tamil Nadu State Council for Higher Educaiton என்ற அமைப்பினை ஏற்படுத்தினோம். இந்த Council தமிழகத்தில் உயர்கல்வி முறையை மேலும் சிறப்புடையதாக்க, செயல் திட்டங் களைத் தீட்டி வருகின்றது.

தமிழ்நாட்டினை முற்றிலும் எழுத்தறிவு பெற்ற ஒரு மாநிலமாக உருவாக்கும் பணியில், எங்களது அரசு, கடந்த 4 ஆண்டுகளாகவே மாவட்டங்களில் அறிவொளி இயக்கங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகின்றது. இதுவரை புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார், காமராஜர், வட ஆர்க்காடு அம்பேத்கர், மற்றும் கன்னியாகுமரி ஆகிய 5 மாவட்டங்கள் முழுமையான எழுத்தறிவு பெற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை, மிக்க பெருமையோடு தெரிவிக்க விரும்புகின்றேன். எஞ்சிய மாவட்டங்களிலும், அறிவொளி இயக்கம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு, அவை அனைத்தும் முற்றிலும் எழுத்தறிவு பெற்ற மாவட்டங் களாக மாறும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஒரு காலப் பூஜை திட்டம்

புராதன மற்றும் கலை அம்சங்கள் நிறைந்த தமிழகத்தின் திருக்கோயில்களைச் சீரழிவிலிருந்து காப்பாற்றுவதற்கும், தமிழ்ப் பண்பாட்டுக் கலாசாரப் பலகணிகளாக விளங்கும் திருக்கோயில்களை மீண்டும் புனரமைத்துப் பராமரிக்கவும், நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை நீங்களும் அறிவீர்கள், இந்த நாடும் அறியும்.

பாழடைந்த நிலையிலும், ஒரு காலப் பூஜை கூட நடைபெற இயலாத சூழ்நிலையிலும் இருந்த எண்ணற்ற திருக்கோயில்கள் பல்வேறு மன்னர்கள் காலத்தில் சிறப்புடன் விளங்கியவை என்பது பலருக்குத் தெரியாது. சக்தி வாய்ந்த இத்திருக்கோயில்கள், இருண்ட கோயில்களாக, ஒரு விளக்கு கூட ஏற்று வாரும் இன்றி, பாழடைந்து போனது கண்டு, பலரின் மனம் பரிதவித்ததை நான் நன்கு அறிவேன். எனவேதான் தமிழகத்தின் திருக்கோயில்களைப் புனரமைத்துப் பாது காத்து, குறைந்தபட்சம் ஒரு காலப் பூஜை யாவது, இந்த நாடும் நாமும் நலம் பெறுவதற்கு, நடத்தவேண்டும் என்கின்ற உயர்ந்த எண்ணத்தில் ஒரு காலப் பூஜைத் திட்டத்தை நான் கொண்டு வந்தேன். பலர் மனம் மகிழ்ந்தனர். சிலர் இதிலும் அரசியல் ஆதாயம் தேடப் பார்த்தனர். ஏற்றதொரு கருத்து என்று எங்கள் மனம் ஏற்றுக்கொண்ட பின்னர், அச்சமின்றிச் செயல்படுகின்ற திறமையும், தெளிவும் படைத்தவர்கள் நாங்கள். ஏனென்றால், நாங்கள் பேரறிஞர் அண்ணாவின் வழித்தோன்றல்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் போர்ப்படைத் தளபதிகள்.

கொண்ட கொள்கையில் உறுதியுடன். தமிழகத்தில் ஒரு காலப் பூஜை கூட நடைபெறாமல் இருந்த திருக்கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் 25000 ரூபாயில் ஒரு கட்டளையை ஏற்படுத்தி, அதன் மூலம் கிடைக்கின்ற வட்டியைக் கொண்டு பூஜை நடத்தும் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி இருக்கிறோம். தமிழ்நாட்டில் ஒரு

காலப் பூஜை நடைபெறாத கோயில்களே இல்லை என்கின்ற உன்னதமான சூழ்நிலை இன்று ஏற்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில்களில் உள்ள விலைமதிக்க முடியாத, கலை அம்சமும், வேலைப்பாடுகளும் நிறைந்த ஆபரணங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், காலத்தின் கோலத்தால் அழிந்துவிடாமல் இருப்பதற்காகத் - திருவாரூரில் உலோகத் திருமேனிகள் மையத்திற்குக் குளிர்ச்சாதன வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

திருக்கோயில்களைப் பாதுகாப்பதற்கும், *4000* பேர் கொண்ட திருக்கோயில் பாதுகாப்புப் படை - Temple Protection Force ஒன்றை, வாக்களித்தபடி ஏற்படுத்திக் காட்டினோம். கோயில்களின் புனரமைப்புப் பணிகளுக்கும், திருப்பணிகளுக்கும் நிதி உதவி வழங்கினோம். கோயில் சிலைகளையும் விக்கிரகங்களையும் திருடுபவர்களை இந்த ஆட்சிக் காலத்தில்தான் கண்டுபிடித்துக் கடுமையான தண்டனையையும் வழங்கி இருக்கிறோம். பத்தூர் நடராஜர் சிலை முதற்கொண்டு பாரம்பரியமிக்க கலையம்சம் மிகுந்த விலைமதிக்க முடியாத சிலைகளை மீளப் பெற்று இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறை, ஏழை எளிய மக்கள் மற்றும் நலிந்த பிரிவு மக்களுக்குச் சமூக பாதுகாப்பினைத் தர, எந்த அளவிற்கு இரக்கச் சிந்தனையுடனும் கருணை மனதுடனும் செயல்பட வேண்டும் என்று கருதுகிறோமோ அதே போலச் சட்ட விரோத செயல்களில் ஈடுபடும் சமூக விரோதச் சக்திகள் மீது, தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் விரும்புகிறோம்.

நல்லவர்களுக்கு நண்பர்களாகவும், கொடியவர்களுக்குச் சிம்ம சொப்பனமாகவும், காவல் துறையினர் விளங்கவேண்டும் என்பது தான் எங்கள் இலட்சியம். சட்டத்திற்கு உட்பட்டு இயங்கும் நல்ல மனம் படைத்தவர்களுக்கும், சட்டத்தின் துணையை நாடி வாழ்க்கையை அமைதியாக நடத்துபவர்களுக்கும், நாங்கள் நேசக்கரம் நீட்டுவோம். பாசக்கரம் காட்டுவோம். ஆனால், அதே நேரத்தில், சமூக விரோத சக்திகளையும், சட்டத்தை வளைப்பவர்களையும், இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவோம். இதில் நாங்கள் நிச்சயமாக எந்தவிதத்திலும் சமாதானம் செய்து கொள்ளவோ, பின்வாங்கவோ மாட்டோம்.

இயற்கை அன்னை வழங்குகின்ற விலை உயர்ந்த சந்தன மரங்களை வெட்டி, கடத்தல் தொழிலில் ஈடுபட்டு வந்த வீரப்பன், சட்ட ஒழுங்கிற்கு ஒரு சவாலாக முளைத்த போது, நாங்கள் கைகளைப் பிசைந்து கொண்டு நிற்கவில்லை. மாறாக எத்தனை இன்னல்கள், எத்தனை இடையூறுகள் வந்தாலும், சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணத்தில், காவல் துறையின் சிறப்பு அதிரடிப்படை - Special Task Force இடம், இந்தப் பணியை ஒப்படைத்ததும், தங்கள் உயிரைப் பணயம் வைத்து, இந்தப் பணியில் ஈடுபட்டதும், *1994*-ஆம் ஆண்டு இந்த அதிரடிப்படை வீரப்பனின் நடமாட்டத்தை ஒடுக்கி, அவனது கூட்டாளிகளைக் குறைத்தும், அதே நேரத்தில் காவல் துறையில் சிலர் தங்கள் உயிரைத் தியாகம் செய்ததும், தமிழக மக்களுக்கு நன்கு தெரியும்.

*3.12.1994* அன்று சிறுமுகைக் காட்டுப் பகுதியில் காவல்துறைத் துணை கண்காணிப்பாளர் திரு என். சிதம்பரநாதன் மற்றும் 2 பேரை, வீரப்பனும் அவனது சகாக்களும் வழிமறித்துக் கடத்திச் சென்றதும், அதற்குப் பின்னால் வீரப்பனுடன் நாங்கள் நடத்திய நாடகமும், பின்னர் கைதிகளாக வைத்திருந்தவர்களை உயிருடன் மீட்டதையும், தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். தமிழக அரசும், காவல் துறையும், இந்தச் சம்பவத்தில், எந்த அளவுக்கு விவேகத்துடனும், கட்டுப்பாட்டுடனும், நிதானம் தவறாமல் செயல்பட்டன என்பதை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குப் பாராட்ட மனமில்லை என்றாலும், தமிழகக் காவல் துறையை, இழிவு படுத்தும் வண்ணம், திரு சிதம்பரநாதனே தப்பித்து வந்ததாகவும், காவல் துறையினர் ஏதும் செய்யவில்லை என்பதைப் போலவும், இந்த அவையில் குறிப்பிட்டது உண்மையில் வேதனைக்குரியதாகும்.

எனவே, காவல் துறையினரின் தியாகத்தையும் வீரத்தையும், சிறுமைப்படுத்தியதால் சில விளக்கங்களை இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன். காவல் துறையினரின் அறிவுரைகளையும் மீறி, காட்டுப் பகுதிக்குத் திரு சிதம்பரநாதன் சென்றதால், அப்பகுதியில் ஒளிந்துகொண்டு, கோழைத்தனமான கொரில்லாப் போர் முறையைக் கையாண்டு, தனித்து வந்த அதிகாரிகளை, வீரப்பன்

கடத்திச் சென்று, தன்னிடம் பிணைக் கைதிகளாக வைத்துக்கொண்டு, அதிமேதா வித்தனமான சில செயல்களில் ஈடுபட ஆரம் பித்தான். முதன் முதலில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சி.வி. சங்கர் அவர் களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளான்.

வீரம் இருக்கும் இடத்தில் விவேகமும் இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த வீரத்தின் பலன்கள் நமக்குக் கிடைக்கும். வீரப்பனிடம் 3 உயிர்கள் சிக்கிக்கொண் டிருந்த சூழ்நிலையில், அந்த உயிர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படக்கூடாது என்கின்ற எண்ணத்தினால், நான் காவல் துறையின ரையும், மாவட்ட ஆட்சித் தலைவரையும் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினேன். நிதான மாகச் செயல்பட்டால் வெற்றி நிச்சயம் கிடைக்கும். காட்டுமிராண்டித்தனமாக வீரப்பன் நடந்து கொள்வதைப் போல நாம் நடக்கவேண்டியதில்லை நம் அறிவுக் கூர்மையை வைத்து சிந்தித்துச் செயல் பட்டால், நிச்சயமாக அவனைப் பிடித்து விடலாம். பிணைக் கைதிகளை உயிரோடு தப்பவைத்துவிடலாம் என்று அறிவுறுத் தினேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் எனது ஆணையின் பேரில், பேச்சு வார்த்தை நடத்த ஆரம்பித்தார். மூன்றாவது நாளில் வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த பேபி வீரப்பன், மாவட்ட ஆட்சித் தலைவரை வந்து சந்தித்துப் பேசினான். பேபி வீரப்பன் பின்னர் வீரப்பனின் மனைவியையும் வேறு சிலரையும் பாதுகாப்பாக வைத்துள்ள இடத்திற்குச் சென்று பார்த்துவிட்டு வந்தான். வீரப்பனின் தம்பி அர்ச்சுனன், 12.12.1994 அன்று, மருத்துவச் சிகிச்சை செய்து கொள்வதற்கும், வீரப்பனின் அடாவடித்தனமான நிபந்தனை களைத் தெரிவிப்பதற்கும், கோயம்புத்தூருக்கு வந்தான். சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்ற அவனது சகோதரன் மாதையனைப் பார்ப்பதற்கும், தனது காயத்திற்கு மருத்துவச் சிகிச்சை செய்து கொள்வதற்கும், அர்ச்சுன னுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஒருபுறம் மாவட்ட ஆட்சித் தலைவர் அமைதியான வழியில், வீரப்பன் நடத்திய அத்தனைக் கேலிக் கூத்துக்களையும் பொறுமையாகச் சமாளித்துக்கொண்டு, பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்த அதே நேரத்தில், அதிரடிபபடையினர், கடத்திச் செல்லப்பட்டவர்களை, உயிருடன் மீட்பதற் கான நடவடிக்கைகளில் இறங்கினார்கள். அன்றைய சூழ்நிலையில், இந்தச் செய்திகளை யெல்லாம் பொதுமக்களுக்குப் பத்திரிகைகள் வாயிலாக வெளிப்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருந்ததை, இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

நாம் வெளிப்படுத்துகின்ற எந்தச் செய்தியும், மேற்கொண்டுள்ள பணிக்கு இடையூறாகப்போவது மட்டுமின்றி, 3 பேர் களின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்கின்ற எச்சரிக்கை உணர்வும் தான், பல செய்திகளை நாங்கள் வெளியிட முடியாமல் போனதற்குக் காரணம். இன்று காவலர்கள் மேற்கொண்ட பணிகளை, வாய்க்கு வந்தபடி ஏசுபவர்கள் வீரப்பனைப் பிடிக்கமுடிய வில்லையா? தனி ஆள், இரட்டை ஆள் என்று வீரப்பனைக் கூறுகிறார்களே தவிர, இத்தனைப் பெரிய காவல்படை சென்று வீரப்பனையும், அவன் கூட்டத்தையும் பிடிக்க முடியவில்லையா? என்று நிதானமின்றி, இந் தப் பிரச்சினையை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறவர்களுக்குச் சில உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று கருதுகிறேன்.

பிணைக் கைதிகளாக வீரப்பனிடம் சிக்கிக் கொண்ட 3 பேர்களையும் எப்படியாவது காப்பாற்றி அழைத்து வருவதற்காக, National Security Guard (NSG) Brigadier ஒருவரின் தலைமையில், 180 பேர் கொண்ட ஒரு குழு, மீட்புப் பணியை மேற்கொள்ள டெல்லியில் இருந்து வந்தது. NSG என்பது மத்திய அரசின் அதிரடிப்படையாகும். கிட்டத்தட்ட 6000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள, அடர்த்தியான வனப்பகுதிகளை, நேரில் கண்ட பின்பு, இத்தகைய இடங்களில் மீட்புப் பணியை மேற்கொள்வது, மிகவும் கடினமான காரியம் என்று, கருத்துத் தெரிவித்து NSG குழுவினர் திரும்பிச் சென்றுவிட்டார்கள். இதைச் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், சாதாரண மனிதர்களின் முயற்சிகளுக்கும் திறமைகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு ஆபத் தான செயலில் நமது அதிரடிப்படையினர் ஈடுபட்டிருந்தார்கள் என்பதை உணர்த்து வதற்குத் தான்.

வீரப்பன் எங்கே ஒளிந்து இருக்கிறான்? கட்டாந்தரையிலோ அல்லது களத்து மேட்டிலோ அல்ல. அடர்த்தியான மரங்கள் வளர்ந்து, 6 அடிக்கு அப்பால் ஒரு யானை நின்றால் கூட, அது கண்ணுக்குத் தெரியாத,

ஒரு வனாந்தரப் பகுதியில் ஒளிந்து கொண்டிருக்கிறான். யானை நின்றாலே கண்ணுக்குத் தெரியாத அடர்த்தியான காட்டுப் பகுதியில், ஒரு ஒல்லியான மனிதன் மறைந்து நின்று, கொரில்லாத் தாக்குதலில் ஈடுபட்டால், அந்தச் சூழ்நிலையை எப்படிச் சமாளிக்க முடியும்?

மனைவி மக்களைப் பிரிந்து, மாதக்கணக்கில் ஓய்வு ஒழிச்சலின்றி, தங்களது உயிருக்கு எப்போது ஆபத்து வரும் என்று, தெரியாத நிலையில், பாடுபட்டு வரும் காவலர்களின் கடுமையான வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாமல், சிலர் வக்கணை பேசுகிறார்கள் வசைச்சொல் கூறுகிறார்கள். காவலர்கள் வீரப்பனின் கொட்டத்தை அடக்கி வைக்காமல் விட்டிருந்தால், நேற்று ஒரு காவல் துறை அதிகாரி, இன்று ஒரு அரசியல்வாதி, நாளை ஒரு பொதுவாழ்வில் முக்கியமானவர் என்று பல பேரை வீரப்பன் கடத்திச்சென்று அடிமுட்டாள் தனமான கோரிக்கைகளையெல்லாம் வைத்திருக்க மாட்டானா? இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல், காவல் துறையைக் களங்கப்படுத்திப் பேசுவது அறிவுடைமை ஆகாது.

பேச்சுவார்தை என்ற போர்வையில், சந்தனக் கடத்தல் வீரப்பன் அனுப்பிவைத்த கேசட்டுகளும், கடிதங்களும் எத்தனை? எங்கள் முன்வைத்த கோரிக்கைகள் எத்தனை? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 1000 கோடி ரூபாய் அரசாங்கம் பணம் தர வேண்டும் என்றும், மாதேஸ்வரன் மலைப்பகுதியில் கருங்கல் குவாரி கல் உடைத்து ஏற்றுமதி செய்ய 100 ஆண்டுகளுக்கு உரிமம் வழங்கவேண்டும் என்றும், துப்பாக்கிகளும், தோட்டாக்களும் வேண்டும் என்றும், காவல் துறை அதிகாரிகளைத் தடா சட்டத்தில் கைது செய்யவேண்டும் என்றும் கோரிக்கைகள் விடுத்ததை மக்கள் அறிவார்கள். அப்போது இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டு பேசியவர்கள்தான் ஏராளமே தவிர, இதன் வேதனைகளை உணர்ந்தவர்கள் ஒருசிலர் மட்டும்தான். தனக்கு வந்தால்தான தலைவலி என்று குறிப்பிடுவார்கள். இந்த விவகாரத்தின் மூலம் எழுகின்ற பிரச்சினைகளின் தீவிரத்தை எண்ணிப் பார்க்காதவர்களுக்கு, எதுவுமே வேடிக்கையாகத்தான் இருக்கும்.

பிணைக் கைதிகளாகக் கொண்டுசெல்லப் பட்ட 27-ஆவது நாளில் அடர்ந்த மலைப் பகுதிகளையும் காட்டுப் பகுதிகளையும் கடந்து, 4000 அடிக்கு மேலே உள்ள பகுதிக்குச் சென்று, ஆபத்தான ஒரு சாகசத்தை எந்தவிதமான உயிரிழப்பும் இன்றி நமது அதிரடிப்படையினர் செய்துகாட்டினர். அதன் விளைவாகப் பிணைக் கைதிகள் வைக்கப் பட்டிருந்த இடத்தைப் பாதுகாத்தவர்கள் பதறி ஓடினார்கள். பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டன வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த மிக முக்கியமானவர்களான ஐயந்துரை, ரங்கசாமி மற்றும் கடம்பூரான் ஆகியோர் காவல் துறையினரிடம் சரணடைந்தார்கள்.

வீரப்பன் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டாலும் வீரப்பன் தங்கியிருந்த இடத்தில் இருந்து, 8 மூட்டை அரிசி, சில எண்ணெய் டின்கள், சர்க்கரை, காப்பி மற்றும் டீத்தூள், டிரான்சிஸ்டர் பேட்டரிகள் மற்றும் காட்ரிட்ஜ் போடுவதற்கான இயந்திரம், இரண்டரை இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள 4 யானைத் தந்தங்கள் ஆகியவை அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டன. வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை என்பது உண்மைதான் ஆனால், அதற்காகக் காவல் துறையினர் அந்தக் காட்டுப் பகுதிக்குள்ளேயே செல்ல வில்லை என்று கூறுவதும், காவல் துறையினர் செய்த தியாகங்களையும், சாதித்த சாதனைகளையும் மறைக்க முயல்வதும், காவல் துறையினருக்கு நாம் செய்கின்ற துரோகம் என்றுதான் பொருள்.

அதிரடிப்படையினர் அங்கு செல்ல வில்லை என்றும், சிதம்பரநாதன் தானே தப்பிவந்தார் என்றும் அவருக்கு ஒரு பாராட்டுக் கூட தெரிவிக்கவில்லையே என்றும், சில உள் அர்த்தங்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் கூறிய கருத்து எத்தனை நியாயமற்றது எத்தனைக் குதர்க்கமானது என்பது விளங்கும். அதிரடிப்படையினர் அங்கு செல்லவில்லை என்றால், வீரப்பனின் ஆட்கள் ஏன் சிதறி ஓடினார்கள்? சிதம்பரநாதனும், மற்றவர்களும் எப்படி விடுவிக்கப்பட்டிருக்க முடியும்? ஐயந்துரை, ரங்கசாமி மற்றும் கடம்பூரான் சரணடைய ஏன் முடிவெடுத்தார்கள்? அரிசி மூட்டைகள், எண்ணெய் டின்கள், டீத் தூள், யானைத் தந்தங்கள் எப்படிப் பிடிபட்டன? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் திரு எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்களால் பதில் கூற முடியாது. இல்லாத

ஒன்றை இருப்பதாக ஜோடிப்பதும், உயிரைப் பணயம் வைத்துச் செயலாற்றி வரும், காவல் துறையினரின் தியாகத்தைக் கொச்சைப் படுத்துகின்ற ஒரு பாணியில் பேசுவதும் உள்ளபடியே வேதனைக்கு உரியதாகும் என்பதை, இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் மீதான பதிலுரை**

சட்டமன்ற உறுப்பினர் திரு பி.வி.ராஜேந் திரன் அவர்கள், வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஏன் இன்னமும் செயல் படுத்தவில்லை என்ற ஒரு வினாவை இங்கே எழுப்பினார்.

குடிநீர்த் திட்டங்களுக்கு எங்கள் அரசு கொடுத்துவருகின்ற முக்கியத்துவத்தையும், திட்டங்களைச் செயல்படுத்துவதில் காட்டு வருகின்ற அக்கறையையும் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். பட்டுக்கோட்டைப் பகுதி வாழ் மக்கள் இத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால்தான் இந்தக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்பது நன்கு தெரிந்திருந்தும், அந்த உண்மையை மறைத்துட்டு, ஏதோ இந்த அரசாங்கம் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அக்கரை காட்டவில்லை என்பதைப்போல ஒரு மாயத் தோற்றத்தை அவர் ஏற்படுத்த முனைந்திருக்க வேண்டாம். குடிநீர்த் திட்டங்களைக் குறிப்பிட்ட கால வரை யறைக்குள் அனைத்து நிபந்தனைகளின் படியும் நாங்கள் செயல்படுத்தி வருகிறோம் என்பதை இங்கு இருக்கின்ற காங்கிரஸ் காரர்கள் ஒப்புக்கொள்ள மறுத்தாலும், உலக வங்கி ஒப்புக் கொண்டிருக்கிறது.

மாவட்டங்களுக்கு நான் சென்றபோது, மக்கள் எனக்கு அளித்த வரவேற்பும், இதனை வெளிப்படுத்தி உள்ளது. கிராமப்புறங்களில் பெண்கள் தங்கள் குறைகளைத் தீர்க்க வந்த சகோதரியாக என்னை ஏற்றுக் கொண் டிருப்பதையும் இது வெளிப்படுத்தியுள்ளது. குடிநீர்த் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்த வேண்டும் என்பதால்தான் அதற்குத் தடைக் கற்களாக இருந்த பத்தாம்பசலித்தனமான வரைமுறைகளைக் கைவிட வேண்டும் என்று 23.9.1994 அன்று திண்டுக்கல் அண்ணா மாவட்ட அரசு விழாவில் நான் குறிப்பிட்டேன். செலவு பயன் விகிதாச்சாரம் அதாவது Cost Benefit Analysis அடிப்படையில், செலவு அளவிற்குப் பயன் இருக்கிறது என்பதைக் கண்டறிந்த பின்புதான் குடிநீர்த் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கின்ற இறுக்கமான விதிமுறைகளை, வறட்சிப் பகுதிகளுக்கும், நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்துவிட்ட பகுதிகளுக்கும் தளர்த்தப்படும் என்று அறிவித்தேன்.

கோவை, மதுரை மற்றும் சேலம் ஆகிய 3 மாநகராட்சிகளின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கவும், கூடுதல் குடிநீர் வசதிகளைச் செய்து தருவதற்கும், 85 நடுத்தர மற்றும் சிறிய பகுதிகளுக்கும், 966 வழியோரக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதியைப் பெற்றுத் தருவதற்கும், 325 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தியது. ஒரு காலகட்டத்தில், எங்களுக்கு முன்பு ஆட்சி புரிந்தவர்கள், இத்திட்டத்தைச் செயல் படுத்தாமல், கிடப்பிலே போட்டுவிட்ட காரணத்தினால், உலக வங்கி தனது நிதி உதவியை நிறுத்திக் கொள்கின்ற அளவிற்குப் போய்விட்டது. ஆனால், எங்கள் அரசு முனைப்புடன் செயல்படுவதைக் கண்ட பின்புதான், உலக வங்கி இத்திட்டத்தை நிறைவேற்ற 31.12.1994 வரை கால அவகாசம் தந்தது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே, முதன் முறையாக உலக வங்கி, தான் நிதி உதவி அளித்துவரும் குடிநீர்த் திட்டங் களுக்குக் கால நீட்டிப்பினைச் செய்து கொடுத்தது என்றால், அது நமது மாநிலத் திற்கு மட்டும்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உலக வங்கி விதித்த காலக் கெடுவிற்குள், அந்த 3 திட்டங்களும் செயல் படுத்தப்பட்டுவிட்டன தமிழ்நாட்டின் மானம் காப்பாற்றப்பட்டது.

இவ்வாறு எங்கள் ஆட்சிக் காலத்தில் நாங்கள் நிறைவேற்றிய குடிநீர்த் திட்டங்கள் ஏராளமாக உள்ளன. எனவே, திரு ராஜேந்தின் போன்றவர்கள் தனது தொகுதி வாழ் மக்களுக்காக இந்தக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுங்கள் என்று கேட்டிருந்தால் ஏற்புடையதாக இருக்கும். அதை விடுத்து, இந்தத் குடிநீர்த் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தாமல் விட்டு விட்டது என்ற ஒரு குற்றச்சாட்டைக் கூறி யிருக்க வேண்டாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு இலட்சுமணன் அவர்கள் உரையாற்றும் போது, கோயம்புத்தூர் மாநகராட்சியில் புலியகுளம் பகுதியில் காவல்துறையின் Boys Club-இன் அனுபவத்தில் இருக்கின்ற

இடத்தில், அந்தப் பகுதியில் வாழ்கின்ற ஆதி திராவிட பெருமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, திருமண மண்டபம் ஒன்றைக் கட்டுவதற்காகக் கோவை மாநகராட்சி திட்டமிட்டிருந்தது என்றும், ஆனால் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கும் காவல்துறை BoysClub-க்கும் இடையே இந்த நிலம் குறித்து எழுந்த கருத்து வேறுபாட்டினால் இந்தத் திருமண மண்டபம் கட்டும் பணி தடைபட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

*1963*-ஆம் ஆண்டு இந்த இடம், காவல் துறைக்கு Police Boys Club அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டாலும், முறைப்படி வகைபாடு மாற்றம் செய்யப்பட்டு இந்த நிலம் காவல் துறைக்கு இதுவரை பெயர் மாற்றம் செய்யப்படாமல் உள்ளது. காவல் துறையைப் பொறுத்தவரையில் இப்பகுதியைச் சுற்றி வாழுகின்ற சிறுவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, Police Boys Club ஒன்றை நடத்திவருகின்றது. மொத்தம் உள்ள ஒரு ஏக்கர் 23 சென்ட் நிலப்பரப்பில், ஆக்கிரமிப்புகள் நீங்கலாக உபயோகப் படுத்தும் நிலையில் 80 சென்ட் நிலம் மட்டுமே உள்ளது. இந்த நிலப்பரப்பில் சாலை ஒட்டி அமைந்துள்ள, 23 சென்ட் நிலம் கோயம் புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கோவை மாநகராட்சிக்குத் திருமண மண்டபம் கட்டுவதற்காக அனுமதி அளிக்கப்பட்டு, நுழைவு முன் அனுமதியும் அதாவது Entry Permissionனும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், கோயம்புத்தூர் மாநகரக் காவல் துறை, இந்த இடத்தில் தாங்களே ஒரு திருமண மண்டபத்தைக் கட்டி, அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தைக் போலீஸ் Boys Clubன் செயல்பாடுகளை மேம்படுத்து வதற்குத் திட்டமிட்டு இருந்தனர்.

இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க நான் தொடர்புடைய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, அதன் அடிப்படையில் சில முடிவுகளை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1. புலியகுளம் பகுதியில் ஆக்கிரமிப்புகள் நீங்கலாக அமைந்துள்ள 80 சென்ட் நிலப்பரப்பில், சாலையை ஒட்டி உள்ள 23 சென்ட் நிலம் கோயம்புத்தூர் மாநகராட்சிக் குத் திருமண மண்டபம் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

2. அந்த நிலத்தில் கோவை மாநகராட்சி, 25 இலட்சம் ரூபாய் செலவில் அப்பகுதி வாழ் மக்களின் குறிப்பாக, ஆதிதிராவிடப் பெருங் குடி மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு ஒரு திருமண மண்டபம் கட்டப்படும். இந்த கட்டுமானப் பணியை மாநகராட்சி இந்த ஆண்டே மேற்கொள்ளும்.

3. மீதம் உள்ள 57 சென்ட் நிலம், காவல் துறை Boys Club ஒதுக்கீடு செய்யப்பட்டு அவர்கள் பெயரில் பட்டா வழங்கப்படும். மேலும், இந்த நிலத்தில் பள்ளமாக உள்ள 27 சென்ட் நிலப்பரப்பைக் கோயம்புத்தூர் மாநகராட்சி தனது சொந்தப் பொறுப்பில் மணலைப் பரப்பிச் சமப்படுத்தித் தரும்.

4. இந்தத் திருமண மண்டபத்திலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கின்ற வருவாயில் 10 சதவிகிதம் இந்தப் போலீஸ் Boys Clubக்கு அதன் செயல்பாடுகளை மேம்படுத்த வழங்கப்படும். கிட்டத்தட்ட இதனால் இந்தச் சங்கத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு, குறைந்தபட்சம் 5000 ரூபாய் அளவிற்கு வருமானம் கிடைக்கும்.

பொதுமக்கள் நலனுக்காகத் திருமண மண்டபம் கட்டப்படும் Police Boys Clubக்கு ஒரு நிரந்தர வருவாயும் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு லட்சுமணன் அவர்கள் திருப்தியடைவார் என்று நம்புகிறேன்.

பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சுந்தரராஜ் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலில் சென்று வீணாகக் கலக்கும் மழை நீரைத் தேக்கிவைத்து, குடிநீருக்கும் பாசனத்திற்கும் பயன்படுத்தும் வகையில் திட்டம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாட்டில் புதிய நீர்த்தேக்கங்கள் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பில்லை என்கின்ற ஒரு சூழ்நிலையில், தற்போதுள்ள நீர்த் தேக்கங்களைச் செம்மையாகப் பராமரித்து நன்முறையில் பாசனநீரை விநியோகம் செய்தால், கூடுதல் உற்பத்தியை ஏற்படுத்த முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, எனது ஆணையின் பேரில், 1120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நீர் ஆதாரங்கள் மேம்பாட்டுத் திட்டம் - Water Resources Consolidation Project ஒன்று தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் நிதி உதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்

தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள நீர் ஆதாரங்கள் புனரமைக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, நீர்ப் பாசன முறைகளும் சீர்திருத்தப்படும். சென்ற ஆண்டு, இதே மாதத்தில், உலக வங்கி இத்திட்டத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது. உலக வங்கி கேட்டிருந்த அத்தனை விவரங்களும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. அடுத்த கட்டமாக உலக வங்கி அதிகாரிகளுடன், இறுதிச் சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்த நமது அதிகாரிகள் Washington-க்குச் சென்றுவர வேண்டி உள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நீர் ஆதாரங்களைச் சீரமைக்கவும், மேம்படுத்தவும் ஒரு பெரிய தொகை ஒதுக் கப்படும் என்பததைப் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு தம்புசாமி அவர்கள், நாகப்பட்டினம் நகரில் மஞ்சக்கொல்லை பகுதியில் குடியிருந்தவர் களைக் காவல் துறையினர் அநியாயமாகத் தாக்கினார்கள் என்றும், அவர்களது குடிசைகளைப் பிரித்துப் போட்டுவிட்டார்கள் என்றும், ஒரு குற்றச்சாட்டை வைத்தார். அவர் இந்த அவையில் பேசியபோது, மக்கள் மத்தியில் அச்சுறுத்தலை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற வகையில் காவலர்கள் அத்துமீறி நடந்துகொண்டதாகக் குற்றம் சாட்டினார். உண்மையில் நடைபெற்றது என்னவென்றால், உச்சநீதிமன்ற ஆணையின்பேரில் காவல் துறையினர் தனியார் நிலத்தில் இருந்த ஆக்கிரமிப்புக்களை அகற்றியிருக்கிறார்கள். நீதிமன்ற ஆணையை அமல்படுத்துவது, ஒருவேளை திரு தம்புசாமி சார்ந்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குக் காவல் துறையினரின் "அத்துமீறலாகவும்" "அநியாய மாகவும்" படலாம். ஆனால், நியாய உணர்வு கொண்ட எவரும் காவல் துறை தனது கடமை யைத்தான் செய்தது என்று ஒப்புக் கொள்வார்கள்.

நாகப்பட்டினம் நகரில் பெருமாயி அம்மாள் என்பவருக்குச் சொந்தமான 92 செண்ட் நிலத்தில், அப்துல் ரஹீம் மற்றும் 7 பேர் ஆக்கிரமிப்புச் செய்து, குடிசை போட்டு வசித்துவந்துள்ளார்கள். ஆக்கிரமிப்பை எதிர்த்து மாவட்ட Munsiff Court-இல் வழக்குத் தொடுத்து நில உரிமையாளர் வெற்றியும் பெற்றுள்ளார். ஆக்கிரமிப் பாளர்களை நிலத்தில் இருந்து அகற்றவும் Court உத்தரவிட்டுள்ளது. பின்னர் உயர்நீதி மன்றத்தில் Execution மனு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டு உயர்நீதிமன்றத்தின் ஆணையும் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், 10.3.1995 அன்று அவர் நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்திருந்த அப்துல் ரஹீம் மற்றும் 7 பேர் சுமுகமான முறையில் காவல் துறையினரால் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நாகப்பட்டினம் கோட்டாட்சி வருவாய் அலுவலர் மற்றும் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோரின் முன்னி லையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. திரு தம்புசாமி குறிப்பிட்டது போல, இதில் சட்ட ஒழுங்குப் பிரச்சினையோ, பொதுமக்கள் பிரச்சினையோ கிடையாது. உயர்நீதிமன்றத்தின் ஆணையை அமல்படுத் தியதைக் காவல் துறையினரின் அத்துமீறல் என்று குற்றம் சாட்டுவதைக் கண்டு மனம் நொந்துகொள்வதைத் தவிர, எனக்கு வேறு எந்த வழியும் தெரியவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு தம்புசாமி, அடித்தளத்து மக்களின் முன்னேற்றத்திற்கு, அடிப்படைத் திட்டங்கள் எதுவும் மேதகு ஆளுநர் உரையில் அறிவிக்கப்படவில்லை என்று, தனது கருத்தை இந்த அவையின் முன் வைத்தார்.

ஏழைகளின் நலன் காக்க எங்கள் அரசு செயல்படுத்தி வருகின்ற திட்டங்கள் எத்தனை என்று நன்கு அறிந்திருந்தும், திரு தம்புசாமி போன்றவர்கள், மக்களின் முன்னேற்றத் திற்குத் திட்டங்களே இல்லை என்று கூறியிருப்பது முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பதற்கு ஒப்பாகும். ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்ப தற்காக 450 கோடி ரூபாய் ஆண்டுதோறும் உணவு மானியமாக ஏற்றுக்கொண்டு வருகிறோம். விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்குவதற்கு ஆண்டுதோறும் 900 கோடி ரூபாய் மானியத்தையும் ஏற்று, வேறு எந்த மாநில அரசும் செயல்படுத்தாத அளவிற்குச் செயல்படுத்தவில்லையா? 65 கோடி ரூபாய் செலவில் இலவச வேட்டி, சேலைகள் ஏழை மக்களுக்கு வழங்கப்பட வில்லையா?

சட்டமன்ற உறுப்பினர் திரு பரிதி இளம்வழுதி அவர்கள், தான் சார்ந்திருக்கின்ற இயக்கம்தான், தமிழக மீனவர்களின் நலன் காப்பதற்காகவே, அவதாரம் எடுத்து வந்த தைப் போலவும், அவர்தம் துயர் துடைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதைப் போலவும் கூறியிருப்பது, 'பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுகின்ற



4

செயலுக்கு' ஒப்பானதாகும். இன்றைக்கு மீனவர்கள் வாழ்க்கைக்கு இத்தனைப் பிரச்சினைகள் ஏற்பட அவர் சார்ந்திருக்கின்ற இயக்கம்தான் காரணம் என்பதை மறந்துவிடக்கூடாது. பின்விளைவுகளைப் பற்றிச் சற்றும் சிந்திக்காமல், கச்சத் தீவினை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டு, இன்று போராட்டம் நடத்தலாம். போர்ப்படை அனுப்பலாம் என்றெல்லாம் இலவச ஆலோசனைகளை வாரி வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, தமிழக மீனவர்களின் நலன் காக்கப் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். ஆழ் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவப் பெருங்குடி மக்கள் நிம்மதியாகத் தங்கள் தொழிலை மேற்கொள்ளவும், இலங்கைக் கப்பற்படையின் அத்துமீறல்களுக்கு ஆளாகி உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் ஏற்படாமல் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஒருமுறை அல்ல, இருமுறை அல்ல, பல முறை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன். நேரில் சென்ற போதும் இதை வற்புறுத்தி உள்ளேன். இரண்டு நாடுகள் சம்பந்தப்பட்ட விஷயம் என்பதால், மாநில அளவில் நம்மால் எந்த அளவு செய்யமுடியுமோ, அவை அனைத்தையும் செய்துவிட்டோம். இன்னும் தமிழக மீனவர்கள்மீது இலங்கைக் கப்பற்படையின் அத்துமீறல்கள் தொடர்கதையாக இருக் கின்றன. அன்று கச்சத்தீவைத் தாரை வார்த்துக் கொடுக்காமல் இருந்திருந்தால், நமது மீனவர்களுக்குப் பாதிப்பு இன்றைக்கு இந்த அளவிற்கு இருக்காது என்பதை விவரம் புரிந்தவர்கள் ஒப்புக்கொள்வார்கள்.

என்றைக்கு இலங்கையில் இனப் பிரச்சினை பெரிதாக வெடித்ததோ அன்றி லிருந்தே மீன் பிடிக்கச் செல்லும் நமது மீனவர்களுக்குப் புதிய பிரச்சினைகள் தோன்றிவிட்டன. எத்தனைப் பேர் சுடப் பட்டார்கள். எத்தனைப் பேர் இறந்து போனார்கள் என்பதை நான் இங்கே விளக்க வேண்டியதில்லை. பலமுறை பாரதப் பிரதமருக்கு நான் கடிதம் எழுதியும் முழுமை யான பலன் கிடைக்கவில்லை. இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இதற்கு ஒரு இறுதியான தீர்வு கண்டாகவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டபடி, மத்திய அரசு இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தினாலும், உருப்படியான விஷயம் ஒன்றும் இதுவரை நடைபெறவில்லை. ஆனால், மீனவர்கள் மீது தாக்குதல் மட்டும் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

மீன்பிடி தொழில் என்பதே ஒரு ஆபத்தான தொழிலாகும். இலட்சக் கணக்கான தமிழக மீனவர்கள் கச்சத்தீவிற்கு அருகில் சென்று மீன் பிடித்தால்தான், ஓரளவிற்கேனும் பொருள் ஈட்டி நல்லதொரு வாழ்க்கையை மேற்கொள்ள முடியும். இயற்கையிலேயே மீன் பிடித்தொழிலில் இருக்கின்ற ஆபத்து ஒருபுறம் இருக்க, இலங்கைக் கப்பற்படையினரால் செயற்கை யான ஆபத்தும் மறுபுறம் உருவாகி உள்ளது. கடலுக்குச் செல்கின்ற மீனவர் திரும்பி வருவாரா என்ற உத்தரவாதம் இல்லாத நிலையிலும், பேச்சு வார்த்தைகளால் இனி பயனில்லை என்கின்ற நிலையிலும், இதற்கு ஒரு மாற்று முடிவை நாம் கண்டே ஆகவேண்டும்.

*1974*-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி கச்சத் தீவை இலங்கைக்குத் திரும்பக் கொடுக் கும்போது, தமிழக மீனவர்கள் இந்தத் தீவில் தங்களது மீன்பிடி வலைகளைக் காயவைப் பதற்கும், படகுகளை நிறுத்திக் கொள்வதற் கும், பயன்படுத்தலாம் என்பதையும், கச்சத் தீவைச் சுற்றி மீன் பிடித்துக்கொள்ளலாம் என்கின்ற பாரம்பரிய உரிமைகள் இன்று மறுக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தத்தின் நிபந் தனைகளை இலங்கை அரசு மீறிவிட்ட காரணத்தினால், இந்த ஒப்பந்தம் இலங்கை அரசால் மதிக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. என்றைக்கு இலங்கை அரசு ஒப்பந்த நிபந்தனைகளை மீறிவிட்டதோ, அன்றைக்குக் கச்சத் தீவினைத் தன்னிடம் வைத்துக்கொள்ளும் உரிமையையும் இலங்கை அரசு இழந்துவிட்டது என்றே கருதவேண்டும். Hence, India should take back Katcha Theevu from Sri lanka. எனவே, மத்திய அரசு கச்சத் தீவினைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று இம்மாமன்றத்தின் சார்பில் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு.எஸ்.ஆர்.பால சுப்ரமணியம் அவர்கள், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரின் வாரிசுகாளாகிய நாங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தொடங்கிவைத்த தெலுங்கு கங்கைத் திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்த வில்லை என்று குறை கூறினார்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின்

வாரிசுகள் நாங்கள் தான், என்பதில் நிச்சயமாகச் சந்தேகம் இல்லை. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் இலட்சியப் பாதையில் மக்கள் பணி ஆற்றி வருபவர்கள் நாங்கள். அவர் தொடங்கிவைத்த தெலுங்கு கங்கைத் திட்டத்தை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்க அனைத்து முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த இந்த 4 ஆண்டுக் காலகட்டத்தில் நான், 3 முறை ஐதராபாத் சென்று, ஆந்திர முதலமைச்சர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கின்றேன். இத்திட்டத்தின் காலதாமதத்திற்கு ஆந்திர மாநிலமும், மத்திய அரசும்தான் காரணமே தவிர, நிச்சயமாகத் தமிழ்நாடு அல்ல. ஆரம்பத்தில் இருந்தே ஆந்திர மாநிலம் ஒப்பந்தப்படிதான் செலவிட வேண்டிய பணத்தைச் செலவிடவில்லை, முடிக்க வேண்டியப் பணிகளையும் செய்து முடிக்கவில்லை. ஆனால், எங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு செலவிட வேண்டிய தொகையையும் செலவிட்டிருக்கிறோம். முடிக்கவேண்டிய பணியையும் முடித்திருக்கின்றோம். இன்னும் நாங்கள் முடிக்கவேண்டிய பணி, மிகமிகச் சொற்பமே.

ஆந்திர மாநிலம் வனப்பகுதிகளில் கால்வாய் வெட்ட மத்திய அரசிற்கு அனுமதி கோரி எழுதியபோது, மத்திய அரசு அனுமதியை எளிதில் வழங்கவில்லை. இதனாலும் இத்திட்டம் தாமதப்பட்டது. எனவே, தமிழ்நாடு அரசைக் குறைசொல்லி ஒரு பயனும் இல்லை. தெலுங்கு கங்கைத் திட்டத்தை எங்களிடம் இருக்கின்ற அனைத்துச் சக்திகளையும் பயன்படுத்தி விரைவில் முடிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.கு.தமிழரசன் அவர்கள், ஆதி திராவிட நலப் பள்ளிகளில், பாடப் புத்தகங்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதைச் சுட்டிக் காட்டினார்.

ஒவ்வொரு ஆண்டும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ், இயங்கிவரும் 1126 பள்ளிகளில் சுமார் 2,57,000 மாணவ மாணவிகளுக்குப் பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆதிதிராவிட நலத் துறையினால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு ஜுன் மாதத்திற்குள்ளாகப் பாடப் புத்தகங்களும், குறிப்பேடுகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் எந்தக் காலதாமதமும் ஏற்படாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீருடையைப் பொறுத்தவரையில், ஆண்டொன்றுக்கு 3.45 இலட்சம் மாணவ மாணவிகளுக்கு இலவசச் சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தேவையான அளவிற்குச் சில வகைத் துணிகள் கிடைக்காததாலும், சீருடைகளை அளவெடுத்துத் தைத்து வழங்க வேண்டி இருப்பதாலும், ஆண்டுத் தொடக்கத்திலேயே சீருடைகளை வழங்கமுடிவதில்லை. எனினும், ஆண்டுத் தொடக்கத்திலேயே சீருடைகளை வழங்குவதற்குச் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியவர் சிவராஜ் சிலைத் திறப்பு விழாவின்போது, ஆதிதிராவிட சமுதாயத்திற்குக் குறிப்பாக, மாணவ மாணவிகளுக்கும், இளைய தலைமுறையினருக்கும் நன்மை பயக்கும் 12 நலத்திட்டங்களுக்கான அரசாணைகளை நான் வழங்கியுள்ளேன் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள புத்த விஹாரங்களுக்கு நிதி உதவி அளிக்கவேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பினார்கள்.

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்து வரும் எங்கள் அரசு, அனைத்து மத வழிபாட்டுத் தலங்களையும் சமமாக மதிக்கின்றது. எனவே, புத்த விஹாரங்களிலிருந்து நிதி உதவி கோரி வேண்டுகோள்கள் அரசுக்கு வந்தால், நிச்சயமாக அவற்றைப் பரிசீலித்து நல்ல முடிவு எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தனது உரையில், மத்திய சிறைச்சாலையில் சிறைக் கைதிகள் காவலர்களால் தாக்கப்பட்டார்கள் என்ற குற்றம் சாட்டிப்பேசினார்கள்.

27 .2. 1995 அன்றுTADA சட்டத்தின் கீழ் வைக்கப்பட்டிருந்த, 9 LTTE போராளிகள் மத்திய சிறையிலிருந்து தப்பிச்சென்றதைத் தொடர்ந்து, எல்லாச் சிறைகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டன. 28.2.1995 அன்று, சென்னை மத்தியச் சிறைச்சாலையில், சிறைத் துறை அதிகாரிகள்

சிறைவாசிகளின் அறைகளைச் சோதனையிட முற்பட்டபோது, TADA கைதிகளும், இதரக் கைதிகளும், அதைத் தடுத்து நிறுத்தியதுடன், சிறை அதிகாரிகளுடன் தகராறும் செய் துள்ளனர். சிறை அதிகாரிகளைச் சில கைதிகள் தாக்கியுள்ளனர். இந்தத் தாக்குதலில் 12 காவலர்கள் காயம் அடைந்துள்ளனர்.

சிறைவாசிகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும், முறையான சோதனையை மேற்கொள்ளவும். காவலர்கள் குறைந்த பட்ச பலப்பிரயோகம் Mild Force உபயோ கிக்கவேண்டிய அவசியம் எழுந்ததாகத் தெரிகிறது. பின்னர், சிறைவாசிகளின் அறை களைச் சோதனையிட்ட சிறை அதிகாரிகள் 10,230 ரூபாய் ரொக்கப் பணம், சிறிய அடுப்புகள், காலி சாக்குகள், காலி பாட் டில்கள், விறகுக்கட்டைகள், சிறிய கயிறுகள் போன்ற பொருட்களைக் கைப்பற்றி உள்ளனர்.

28.2.1995 மற்றம் 1.3.1995 ஆகிய நாட்களில் TADA தனி நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட TADA கைதிகள், சிறை அதிகாரிகள் தங்களையும், இதரக் கைதிகளையும் தாக்கியதாகவும், அதனால் தங்களுக்குக் காயம் ஏற்பட்டதாகவும், நீதிபதி அவர்களிடம் புகார் கூறியுள்ளனர். நீதிபதி திரு. V. ராதாகிருஷ்ணன் அவர்கள் புகார் கொடுத்ததன் அடிப்படையில், 8 சிறை வாசிகளை, மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சிகிச்சை அளிக்கவேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளார்கள். எனவே, 8 சிறைவாசிகள் சிகிச்சைக்காக அரசுப் பொது மருத்துவமனைக்கு, 1.3.1995 அன்று அழைத்துச் செல்லப்பட்டனர். சிகிச்சை அளிக்கப்பட்ட பின்பு, அன்று இரவே அவர்கள் சிறைச்சாலைக்கு மீண்டும், கொண்டுசெல்லப்பட்டனர்.

மக்கள் நல உரிமைக் கழகத்தின் செயலாளர், சிறையில் கைதிகள் காவலர் களால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகச் சென்னை உயர்நீதிமன்றத்தில் 2.3.1995 அன்று ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவை விசாரணை செய்த மாண்புமிகு நீதிபதி Shivaraj Patil அவர்கள், TADA தனி நீதிமன்ற நீதிபதி, திரு V. இராதாகிருஷ்ணன் அவர்களை, சென்னை மத்தியச் சிறைச்சாலைக்குச் சென்று, TADA கைதிகளைப் பார்வையிட்டு, காயம் அடைந் தவர்களின் விவரங்களையும், காயங்களின் தன்மைகளையும் உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்குமாறு ஆணையிட்டார்கள்.

TADA தனி நீதிபதி அவர்கள், 2.3.1995 அன்று சிறைச்சாலையில் கிட்டத்தட்ட 250 சிறைவாசிகள்ள விசாரணை செய்து, 27 TADA கைதிகள், உட்பட, 87 சிறைவாசிகள் பலவகையான காயங்கள் அடைந்துள்ளதாக, உயர்நீதி மன்றத்திற்கு 6.3.1995 அன்று தனது அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்கள். உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் சிறை வாசிகளுக்குத் தேவையான மருத்துவச் சிகிச்சை அளிக்கவேண்டும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். சென்னை மத்திய சிறைச்சாலையின் கண்காணிப்பாளர் எதிர் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். இன்னும் நான்கு வாரத்திற்குள் சிறைத்துறை காவல் துறைத் தலைவரும், தமிழக அரசும் தங்களது எதிர் மனுவினைத் தாக்கல் செய்யவேண்டுமென உயர்நீதிமன்றம் ஆணையிட்டு வழக்கினை ஒத்திவைத்துள்ளது.

TADAகைதிகள் சிறை அதிகாரிகளின் கடமைகளைச் செய்ய விடாமல் தடுத்ததாலும், காவலர்களைக் கைதிகள் தாக்கியதாலும், நிலைமையைச் சமாளிக்க லேசான பலப் பரயோகம் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற் பட்டதாக, காவல்துறை தரப்பில் கூறப் பட்டுள்ளது. சிறைக் கைதிகள் தாக்கப்பட்ட தாகக் கொடுக்கப்பட்ட புகார் மீது சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையக் குற்ற எண். 376/95, 377/95 மற்றும் 385/95 ஆகியவற்றில் சிறைத்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் மீது, மூன்று வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. காவல் துறையினர் இது குறித்து மேல் விசாரணை செய்து வருகிறார்கள்.

சிறைக் கைதிகள் தாக்கப்பட்டது தொடர் பான வழக்கு, உயர்நீதிமன்ற விசாரணையில் இருந்துவருவதால், இந்த நிகழ்ச்சியைப் பற்றி, மேலும் கருத்துக்களைத் தெரிவிப்பது சரியான நடைமுறை ஆகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில், அடிப்படை மனித உரிமைகள் எவருக்கும் மறுக்கப்படக் கூடாது என்பதில் தீவிரமாக உள்ளது. அதே நேரத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் ஆபத்தான பணிகளில், ஈடுபடும் காவலர்களின் உயிருக்கே ஆபத்து ஏற்படுகின்ற சூழ்நிலைகளையும், நாம் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அறிவிப்புகள்

### திரைப்படப் பணியாளர்கள் ஓய்வூதியம் மற்றும் விபத்துக் காப்புறுதித் திட்டம்

3 மணி நேரம் திரைப்படம் காண்பவர்களுக்கு அந்தப் படத்தின் முக்கியக் கதாபாத்திரங்கள், இயக்குநர், இசை அமைப்பாளர் ஆகியோர் மட்டுமே நினைவுக்கு வருவார்கள், திரைப்படத்திற்குப் பின்னால் இருந்து பணியாற்றும் ஆயிரக்கணக்கான திரைப்படத் தொழிலாளர்களை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. தென்னிந்தியத் திரைப்பட உலகம், பல்லாயிரக் கணக்கானோருக்கு வேலைவாய்ப்புத் தருகின்ற ஒரு மாபெரும் தொழில் என்பதைப் பலர் மறந்துவிடுகிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள எத்தனையோ நலிந்த பிரிவினர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்குத் திட்டங்களை வகுத்து, வெற்றிகரமாகச் செயலாக்கிவருகிறது எங்கள் அரசு. அதன் அடிப்படையில் திரைப்படத் தொழிலாளர்களின் நலனுக்காக, "விபத்துக் காப்புறுதித் திட்டம்" மற்றும் "ஓய்வூதியத் திட்டம்" ஆகிய இரண்டு புதிய திட்டங்களை இன்று இந்த மாமன்றத்தின் வாயிலாக அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ், திரைப்படத் தயாரிப்பின் போது, விபத்து ஏற்படும் தொழிலாளருக்குக் காப்புறுதித் தொகையாக 50,000 ரூபாய் வரை வழங்கப்படும். ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், 60 வயதைக் கடந்த நலிவுற்ற திரைப்படத் தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் 300 ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படும். இத்திட்டத்தினால் ஆண்டு ஒன்றுக்கு 1000 முதல் 1500 தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள். திரைப்படத் தொழிலாளர்களிடம் இத்திட்டத்திற்காக மிகச்சிறிய பங்குத் தொகையும் வசூலிக்கப்படும். இந்த இரு திட்டங்களும், திரைப்படத் துறையில் உள்ள வசதியற்ற தொழிலாளர்களுக்கும், அவர்தம் குடும்பங்களுக்கும் வரப்பிரசாதமாக அமையும் என்று உறுதியாக நம்புகின்றேன்.

### 2. அரசு அலுவலர்களுக்கு வீட்டுக் கடன் உயர்வு

தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்குத் தற்போது வீடு கட்டுவதற்கும், புதிய வீட்டை வாங்குவதற்கும் அதிகபட்சம் 2,50,000 ரூபாய் வழங்கப்பட்டுவருகிறது. இந்த அதிகபட்சத் தொகை, 2,50,000 ரூபாயிலிருந்து 4,00,000 ரூபாயாக இன்று முதல் உயர்த்தி ஆணை வழங்கி உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல, கட்டிய வீட்டை விரிவாக்கம் செய்ய, தற்போது வழங்கப்பட்டுவருகின்ற கடன் உதவியை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து, இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கி ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயில்பவர்களுக்கு, மாதாந்திர உணவுச் செலவிற்கு 18 ரூபாயும், பள்ளி விடுதிகளில் பயில்பவர்களுக்கு, உணவுச் செலவிற்கு 15 ரூபாயும் கூடுதலாக வழங்க ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. குடிநீரில் Fluoride அதிகமாக இருந்தால், அது மனிதர்களின் உடல் நலத்தைப் பாதிக்கும். Fluoride அதிகமாக இருக்கின்ற 124 குடியிருப்புகளில் Fluoride குறைக்கும் திட்டம் ஏழரைக் கோடி ரூபாய் செலவில் தமிழ் நாட்டில் முதன் முதலாகச் செயல்படுத்தப்படும் என்பதையும், அதற்கான ஆணைகளை நான் பிறப்பித்துள்ளேன் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நிறைவுரை

சென்ற ஆண்டு இதே சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநரின் உரை மீதான விவாதத்திற்கு எனது பதிலுரையை அளிக்கும்போது, நான் குறிப்பிட்ட ஒரு கருத்தை நினைவுகூர்வது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

"ஒரு அரசாங்கத்தின் முக்கியமான கடமை, மற்றவர்கள் ஏற்கெனவே செய்துகொண்டிருக்கின்ற பணியை, அவர்களை விடச் சிறப்பாகவோ அல்லது மோசமாகவோ செய்வது அல்ல, ஆனால் இதுவரை யாருமே செய்யாத பணிகளை, மேற்கொண்டு செய்வதுதான், அரசாங்கத்தின் முக்கிய கடமை" என்று குறிப்பிட்டிருந்தேன்.

புதிய சிந்தனையுடன், புதிய பாதையை வகுத்து நல்ல பல திட்டங்களை Innovative Schemeகளை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த இடைப்பட்ட ஓராண்டுக்

காலத்திலும், யாரும் செய்யாத எத்தனையோ பணிகளை நாங்கள் ஆற்றியுள்ளோம். மகளிருக்கான முன்னேற்றக் கொள்கையை வகுத்துத் தந்தோம் குழந்தைகள் நல 15 அம்ச நலத் திட்டத்தையும் வகுத்துச் செயல்படுத்தி வருகிறோம். ஊனமுற்றோர் நலனைக் கவனிக்க ஒரு துறையைத் தனியே துவக்கிவைத்து, உடல் ஊனமுற்றோருக்கான வளர்ச்சிக்கு ஒரு கொள்கையை வகுத்துத் தந்தோம். ஒரு வேளை பூஜை கூட நடைபெறாத கோயில்களைக் கணக்கெடுத்து, அந்தக் கோயில்கள் ஒவ்வொன்றிற்கும் 25,000 ரூபாய் செலவில் நிதிக் கட்டளை ஒன்றை ஏற்படுத்தி, குறைந்தபட்சம் ஒரு காலப் பூஜையாவது நடைபெறச் செய்தோம். விளையாட்டு வீரர்களையும், வீராங்கனை களையும் ஊக்குவிக்கும் வண்ணம், அவர்கள் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ள நிதி உதவியும், பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டும், பரிசுகளும் வழங்கி ஊக்கப்படுத்தி உள்ளோம். உலக வங்கி நிர்ணயித்த காலக் கெடுவிற்குள் பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்திக் காட்டினோம். 1952-ஆம் ஆண்டிலிருந்தே கைதிகள் சிறைச்சாலைகளில் இருந்து, தப்பிச் செல்வது ஒரு சாதாரண சம்பவமாக மாறிவிட்ட சூழ்நிலையை, இனி மாற்றிக்காட்ட வேண்டும் என்பதற்காக, இதுவரை யாரும் மேற்கொள்ளாத அதிரடிப் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் சிறைகளில் மேற்கொண்டு வருகிறோம். இன்னும் சொல்லிக்கொண்டே போனால், இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகும். ஒன்று மட்டும் நிச்சயம். இதுவரை யாருமே செய்யாத பல பணிகளை, எங்கள் அரசு செய்து வருகிறது என்பதை, நான் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய பல சந்தேகங்களுக்கு, எனது பதில்கள் தெளிவான விளக்கங்களை அளித்திருக்கும் என்று நம்புகிறேன். தமிழக அரசின் செயல்பாடு களைப் புள்ளி விவரங்களோடு எடுத்து விளக்கி உள்ளேன். மக்கள் மனம் அறிந்து நடக்கின்ற அரசு இது. எனவே, மக்களின் நலனும், அவர்களின் முன்னேற்றமும் தான், எங்களை இயக்குகின்ற மாபெரும் சக்திகளாக உள்ளன. மக்கள் சக்தியை மட்டுமே மதிப்பவர்கள் நாங்கள். எனவே தான், மக்கள் சக்தியின் துணையுடன் சோதனைகளை எல்லாம் எதிர்கொண்டு, சாதனைகளாக்கிக் கொண்டு வருகிறோம்.

"சோதனை மேல் சோதனை
போதுமடா சாமி"

என்று நாங்கள் இடிந்து போய் ஒப்பாரி வைக்கமாட்டோம்.

எத்தனை சோதனைகள் வேண்டுமானா லும், கொடுங்கள் சாமி அவற்றையும் எதிர்கொண்டு வென்று காட்டுவோம், என்று தான் நாங்கள் கூறுவோம்.

அரசியலிலே .மனமாச்சர்யங்கள் இருந்தா லும், கொள்கையிலே வேறுபாடுகள் இருந் தாலும், சிந்தனைகளிலே மாறுபாடுகள் இருந் தாலும், நமது நோக்கம் எல்லாம் மக்களின் நலன் என்ற ஒன்றைத் தான் சுற்றி வர வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. பாரம்பரியம் படைத்த இந்த மாபெரும் சபையில் நாம் செலவிடுகின்ற ஒவ்வொரு மணித் துளியும் மக்களின் நல்வாழ்விற்காக, மக்களின் முன்னேற்றத்திற்காக, தமிழகத்தின் வளர்ச்சிக்காகச் செலவிடப்பட வேண்டும் என்பதே எனது பேரவா.

"இயற்றலும் ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும், வல்லது அரசு"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க, எங்கள அரசு தொடர்ந்து மக்கள் நலனை முன் வைத்துப் பணியாற்றும். அரசியல் கட்சிகளிடையே உள்ள மனமாச்சர்யங்களும், காழ்ப்புணர்ச்சிகளும், மக்களுக்கு அவர்கள் ஆற்ற வேண்டிய பணிகளுக்குக் குந்தகமாக மாறி விடக் கூடாது என்ற கருத்தையும் இந்தப் பேரவையின் முன் வைக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"

என்பதை எடுத்துரைத்து,

"இன்றும் தமிழ், என்றும் தமிழ்".

"அறிவியலிலும் தமிழ், அனைத்திலும் தமிழ்" என்ற புதிய எழுச்சி முழக்கத்தை உங்கள் அனைவரின் சார்பிலும் இந்த மாமன்றத்தின் முன் வைத்து, அமைகின்றேன்.

**(மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு, 20.3.1995 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரை)**

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்

## செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்








### சி ற ப் பு அ ம் ச ங் க ள்

- 5 $^{1}/_{2}$ ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

DIRP/DIS/95

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.



# வளர்ச்சிக்கும் வளமைக்கும் எடுத்துக்காட்டாய் ஒளிவீசித் திகழும் தமிழகம்!

## மாண்புமிகு நிதியமைச்சர்

## டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உரை

**தமிழ்நாடு அரசு நிதி அமைச்சர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள், 1995-96ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப்பேரவையில் வைத்து, 1995ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 22ஆம் நாள் அன்று ஆற்றிய உரை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

1994-95ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1995-96ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இந்தப் பேரவையின் மேலான ஒப்புதலுக்கு வைப்பதில் நான் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் கொள்கிறேன்.

**"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"**

உண்மையான ஆட்சித் தலைவர், அரசுக்குப் பொருள் வருகின்ற வழிகளை இயற்றிப் பொருள்களைத் திரட்டுதல், அவ்வாறு திரட்டப்படும் பொருள்களை ஒருங்கு சேர்த்தல், அப்படிச் சேர்த்த பொருள்களைப் பாதுகாத்தல், பின்பு அவற்றை நாட்டு மக்களின் நலனுக்காக மதிநுட்பத்தோடு பயன்படுத்துதல் ஆகியவற்றில் வல்லவராக இருக்க வேண்டும். இவை, தமிழ்மறை கண்ட சான்றோர் திருவள்ளுவர் மேற்காணும் தமது குறட்பாவில் தொகுத்துரைத்துள்ள, எக்காலத்திற்கும் பொருந்துகின்ற ஆட்சி நெறியின் அடிப்படைத் தத்துவங்களாகும். இவை இன்றைக்கும் கூட அப்படியே பொருந்தி நிற்கின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நாள் முதல், பெரும்புலவர் திருவள்ளுவர் வகுத்தளித்துள்ள நெறியைத் திண்மையாகப் பின்பற்றி வருகிறார். தமிழ்நாட்டிற்கென்று சிறப்பான நிருவாகத்தை வழங்கிட, ஓய்வு ஒழிவின்றிப் பாடுபட்டு வந்துள்ள அவர்களுக்குத் தமிழக மக்கள் முழு ஆதரவளித்து அவர் பின்னே நிற்கின்றார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக அரிய முன்னோக்குடனும், பேராற்றலுடனும் பெருந்திறலுடனும் ஆற்றிவரும் பணிகளால் இந்நாட்டின் மிகப்பெரும், தன்னிகரற்ற ஆட்சித் தலைவராக உயர்ந்து விளங்குகின்றார். பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த சனநாயக ஆட்சிமுறைத் தத்துவங்களையும், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மனித நேயத்துடன், மக்கள் நலன் நோக்கில் வகுத்துச் செயல்படுத்திய திட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்ற, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, இந்நாடு முழுவதும் பின்பற்றத்தக்க மிகச் சிறந்த ஆட்சியை உருவாக்கியுள்ளது.

2. தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கை மிகச் செம்மையாகப் பேணிப்பாதுகாத்தல் என்கிற உறுதியான அடித்தளத்தின் மீது எழுந்த 'வளர்ச்சி-மேம்பாடு' என்ற அழகிய கண்கவர் மண்டபத்தைப் பாங்குற அமைத்துள்ளது இவ்வரசு. இங்கு வெளிநாட்டுப் போராளிகளாலும், தீவிரவாதிகளாலும் எழுந்த அச்சுறுத்தல்கள் அறவே ஒழிக்கப்பட்டு விட்டன. ஆக்க நிறைவாகவும், குறிப்பிட்ட நன்மை விளையும் நோக்கிலும் இவ்வரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவால், இம்மாநிலம், சமுதாய நல்லிணக்கத்திற்கும், சமூகத்தின் பல தரப்பினரும் ஒற்றுமையாகக் கலந்து வாழும் இயல்புக்கும் தனிச் சிறப்புடைய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இத்தகைய உறுதியான அடிப்படையின் பேரில்தான், விரைந்த பொருளாதார வளர்ச்சியை எட்ட முடிந்தது. தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு செம்மையாகப் பேணி வரப்படுவதன் காரணமாக, இம் மாநிலம் நாட்டிலேயே மிகச் சிறப்பாக ஆட்சி செலுத்தப்படும் மாநிலங்களில் ஒன்று என எளிதில் கூற முடிகிறது என்னும் உண்மையை நான் வலியுறுத்த விழைகிறேன்.

3. வரலாறு காணாத அளவுக்குப் பொருளாதாரச் சிக்கலில் நாடு இருந்தபோது இந்த அரசு 1991 ஜூன் திங்களில் பதவி ஏற்றுக் கொண்டது. நாட்டின் மொத்தப் பொருளாதார நிலைமை இப்பொழுது சீரடைந்துள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால், அதனைப் பாதிக்கும் அறிகுறிகள் தென்படுகின்றன. இதற்கு ஏற்றவாறு மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாகப் பெரும் பொருளாதார நிருவாகத்திற்கான வழிவகைகள் அனைத்தும் மத்திய அரசிடமே உள்ளன என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. எனவே, விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை உறுதி செய்வது மத்திய அரசின் தலையாய கடமையாகும். விலை ஏற்றத்தைத் தடுக்க மத்திய அரசு போதுமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதில் நாங்கள் மிகவும் அக்கறை கொண்டுள்ளோம்.

வரும் ஆண்டில் கோதுமை. அரிசி. சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் உயராமல் இருப்பதை உறுதி செய்யக் கிடைக்கக் கூடிய வழிவகைகள் அனைத்தையும் மத்திய அரசு பயன்படுத்தும் என்று மத்திய நிதி அமைச்சர் தனது அண்மைய நிதி நிலை அறிக்கையில் தெரிவித்துள்ளார். இன்றியமையாப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க. தாமதமின்றி அந்நியச் செலாவணிச் சேம நிதிகளைச் செவ்விய முறையில் பயன்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்துவோம். **பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் பணியில் மத்திய அரசு தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.**

4. ஒரு பக்கம் வளர்ச்சி. முதலீடு. நவீனப்படுத்தல் ஆகியவற்றை விரைவுபடுத்தவும். மற்றொரு பக்கம் வறுமை ஒழிப்புத் திட்டங்களை வலுப்படுத்தவுமான இருவழிப் பொருளாதாரச் செயல் திட்டங்களைக் குறித்து மத்திய நிதி அமைச்சர் தனது நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டார். வறியோர் வாழ்வில் வளமை சேர்க்கும் பணியைப் பொருளாதார நிகழ்ச்சி நிரலின் முக்கிய இனமாக வைக்க வேண்டிய அவசியத்தை மத்திய அரசு இப்போதாவது உணர்ந்துள்ளது பற்றி நாம் மகிழ்ச்சி அடைகிறோம். புதிய பொருளாதாரக் கொள்கையினால். ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து இந்த அரசு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்துள்ளது. பொது விநியோக முறையில் அரிசி விலைகளை உயர்த்தக் கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் ஒவ்வொன்றிலும் மத்திய அரசுக்கு எடுத்துரைத்துள்ளார். பொது விநியோக முறையில் வழங்கல் விலைகள் மேலும் உயராமல் இருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். அண்மையில் அறிவிக்கப்பட்ட மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் கூட. பொது விநியோக முறையிலான வழங்கல் விலை உயர்த்தப்பட மாட்டாது என்று திட்டவட்டமான உறுதிமொழி ஏதும் இல்லை. **பொது விநியோக முறையில் அரிசியின் விலையை மத்திய அரசு மேற்கொண்டும் உயர்த்தக் கூடாது என்று வலியுறுத்த இந்த அரசு விழைகிறது.** கடும் நிதி இடர்ப்பாடுகள் இருந்த போதிலும்கூட. ஏழை. எளியோரைப் பாதுகாக்க நாங்கள் பெரு முயற்சி எடுத்து வந்துள்ளோம். உணவுப் பொருள் உதவித் தொகைக்கான நிதி ஒதுக்கீடு 1990-91ஆம் ஆண்டில் ரூ.105 கோடியாக இருந்தது. அது படிப்படியாக உயர்ந்து 1994-95ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ.440 கோடி என்ற அளவை அடைந்துள்ளது. மேலும். 1994-95இல். முந்தைய ஆண்டுகள் தொடர்பான உணவுப் பொருளுக்கான உதவித் தொகை நிலுவையைச் சரிக்கட்ட ரூ.75 கோடியை ஒதுக்கியுள்ளோம். இந்த அரசு. உணவுப் பொருளுக்கான உதவித் தொகைக்காக ஒதுக்கியுள்ள தொகை 1995-96 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.450 கோடியாக இருக்கும். **ஏழை மக்களுக்கு நலனளிக்கும் நோக்குடன். பொது விநியோக முறையில் அரிசியின் வழங்கல் விலையைப் பற்றிப் பரிசீலிக்க. தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டம் ஒன்றினைக் கூட்டுமாறு நாங்கள் கேட்டுள்ளோம். ஆனால். அக்கூட்டத்திற்காகக் காத்திராமல். பொது விநியோக முறையில் அரிசியின் விலையை அனைத்து ரகங்களுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.1 வீதம் குறைக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். எனவே. 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து சாதாரண ரக அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 இலிருந்து. ரூ.2.50 ஆகக் குறைக்கப்படும். சன்ன ரக மற்றும் மிகச் சன்ன ரக அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ .4.75 இலிருந்து ரூ.3.75 ஆக குறைக்கப்படும். இதன் காரணமாக உணவுப் பொருள்களுக்காக வழங்கப்படும் உதவித்தொகை மேலும் ரூ.150 கோடி அதிகரித்து. மொத்தம் ரூ.600 கோடியாக இருக்கும். விலைவாசி உயர்வுக் கொடுமையிலிருந்து ஏழை. எளிய மக்களைப் பாதுகாப்பதில் இந்த அரசு எந்த அளவிற்குத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது என்பதற்கு இது ஒரு தெளிவான சான்றாகும்.**

**★ ரேஷன் அரிசி விலை கிலோவுக்கு ஒரு ரூபாய் குறைப்பு. (ரூ. 3.50-க்குப் பதில் ரூ. 2.50)**

**★ உணவு விடுதிகளில் பண்டங்கள் மீதான விற்பனை வரி ரத்து.**

5. மத்தியில் வலுவான கூட்டாட்சி. மாநிலத்தில் வளமான சுயாட்சி என்ற எங்கள் கொள்கைக்கேற்ப. நாட்டின் இறையாண்மையைப் பேணிக் காக்க வேண்டியதற்கான அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடமும். வளர்ச்சிப்பணி. நலப்பணி குறித்த பொறுப்புகள் மாநில அரசுகளிடமும்

நிலை பெறும் வகையில், அரசமைப்புச் சட்டத்தைத் தகுந்தவாறு திருத்த வேண்டுமென நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். இதே நிலையை நாங்கள் தொடர்ந்து கடைப்பிடித்துவருவோம். அண்மைக்காலப் பொருளாதார நிலை, தேசிய மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு தவிர, சமூகத் துறையில் அரசின் பங்கு இன்னும் அதிக முக்கியமானதாக ஆகியுள்ளது என்பதைக் காட்டுகிறது. இந்நிலைக்கேற்ப, நிதிவள வாய்ப்புகள் மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும்.

## பத்தாம் நிதிக் குழு

6. பத்தாம் நிதிக் குழுவின் அறிக்கை மத்திய அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய விளக்கக் குறிப்புடன், அண்மையில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த அறிக்கை, மாநிலங்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவில் பொறுப்புகள் வந்து சேர்ந்துள்ள நிலைமைக்கேற்ப, மத்திய-மாநில அரசுகளுக்கிடையேயான நிதி உறவுகள் இன்னும் அதிக அளவில் நியாயமான முறையில் இருக்கும் என்கிற எங்களுடைய எதிர்பார்ப்பைப் பொய்யாக்கி விட்டது என்பது நல்வாய்ப்பற்ற நிலையாகும். மாநிலங்களின் ஒட்டு மொத்த நிதி ஆதாரங்களை உயர்த்துவதற்குப் பத்தாவது நிதிக் குழு கிட்டத்தட்ட ஒன்றுமே செய்யவில்லை. மத்திய ஆயத் தீர்வைகளில் மாநிலங்களின் ஒட்டு மொத்தப் பங்கு 45 சதவீதத்திலிருந்து 47.5 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. அதே சமயத்தில், வருமான வரியில் மாநிலங்களின் பங்கு 85 சதவீதத்திலிருந்து 77.5 சதவீதமாகக் குறைந்துள்ளது. மொத்தத்தில், மாநிலங்களின் ஒட்டு மொத்தப் பங்கில் கிட்டத்தட்ட எவ்வித உயர்வும் இல்லை. இது உண்மையில் மிகவும் ஏமாற்றம் தருவதாகும்.

7. பத்தாம் நிதிக் குழு 1994 மே திங்களில் மாநிலத்திற்கு வந்தபோது, வருமான வரியில் மாநிலங்களின் பங்கை 85 சதவீதமாகவே தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம் என்கிற அதே சமயம், மத்திய ஆயத்தீர்வையில் மாநிலங்களின் பங்கைத் தற்போதைய அளவான 45 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தினார். மத்திய ஆயத்தீர்வையில் மாநிலங்களின் பங்கை 45 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்துவது படிப்படியாகச் செய்யப்படலாம் என்று, அதாவது, 1995–97இல் 45 சதவீதத்திலிருந்து 52.5 சதவீதமாகவும், 1997 முதல் 2000 வரையிலான இறுதி மூன்றாண்டுகளில் இதனை 60 சதவீதமாகவும் உயர்த்தலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பொறுப்பு வாய்ந்த கருத்து ஒன்றைத் தெரிவித்தார். மத்திய ஆயத் தீர்வையின் கீழ் நிதிகளைப் பற்றாக்குறை மாநிலங்களுக்கு மாற்றுவதில் தனிப்பட்ட ஒதுக்கீடு எதுவும் இருக்கக் கூடாது என்றும், 275(1) பிரிவின் கீழ் மானியங்கள் வழங்குவதன் மூலம் பற்றாக்குறை மாநிலங்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கருத்து தெரிவித்துள்ளார். மத்திய ஆயத்தீர்வையின் கீழ் உள்ள மொத்தம் 47.5 சதவீதத்தில், 7.5 சதவீதத்தைப் பற்றாக்குறை மாநிலங்களுக்குப் பத்தாம் நிதிக் குழு ஒதுக்கியுள்ளது. பத்தாம் நிதிக் குழு மாநிலங்களுக்கு மொத்தத்தில் நிதிகளை மாற்றுவதில் அதே நிலைமை தொடரும் வகையில் பரிந்துரை அளித்தது வேதனை அளிப்பதாகும். மாநிலங்களுக்குப் பத்தாம் நிதிக் குழு ஏதேனும் நியாயம் வழங்கியுள்ளதா என்பது எங்களைப் பெரும் ஐயப்பாட்டிற்குள் ஆழ்த்துகிறது.

8. 1996 ஏப்ரல் 1ஆம் நாள் முதல் செயல் வடிவம் பெறும்வகையில் நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிக்கும் ஒரு மாற்றுத் திட்டத்தையும் பத்தாம் நிதிக் குழு தெரிவித்துள்ளது. அதன்படி, மத்திய வரிகளின் மொத்த வரவினத்தில் மாநிலங்களின் பங்கு 26 சதவீதமாக இருக்கும் என்று பரிந்துரைத்துள்ளது. இதனுடன், அடிப்படை ஆயத்தீர்வையுடன் கூடுதல் ஆயத்தீர்வை சேர்க்கப்பட வேண்டும் என்றும், அதன்பின்னர், மேலும் 3 சதவீதம் சேர்க்கப்பட்டு, 29 சதவீதத் தொகையை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கலாமென்றும் பரிந்துரை செய்துள்ளது. மாநிலங்களுக்கு இது போன்று 26 சதவீதம், 3 சதவீதம் என்ற வகையில், நிதிகளைப் பகிர்ந்தளிப்பதற்கு அரசமைப்புத் திட்டத்தில் தக்கவாறு வகை செய்யப்பட வேண்டுமென்றும், 15

**★ கர்ப்பிணிகளுக்குச் சத்துணவு.**

**★ மின்னணுச் சாதனம் மீது வரிக் குறைப்பு.**

ஆண்டுகளுக்கொரு முறை இது ஆய்வு செய்யப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்துள்ளது. நிதிகளைப் பகிர்ந்தளிக்கும் இந்த மாற்றுத் திட்டம் குறித்து, மத்திய அரசு எந்தவிதமான உறுதியும் அளிக்கவில்லை. பத்தாம் நிதிக் குழு தெரிவித்த இந்தக் கருத்துரையைச் செயல்படுத்த அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியுள்ளன. மாநிலங்களின் பங்கு 1980–81இல் 26 சதவீத அளவை எட்டியது. 1994–95இல் அது 25.15 சதவீதமாக உள்ளது என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும். இரண்டாவது பகுதியான 3 சதவீதப் பகிர்வைப் பொறுத்தவரையில், 1980-81இல் மாநிலப் பங்கு 2.94 சதவீதமாக இருந்தது. இது 1994–95இல் 3.02 சதவீதமாக உள்ளது. பிரிவு 269இல் கீழ் வரும் சில வரிகளும், பகிர்ந்தளிக்கத் தக்க தொகுப்பில் கொண்டுவரப்பட வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டால், இந்த மாற்றுத் திட்டத்தில் தற்போதைய நிதிப் பகிர்வு எந்தவித மாற்றமுமின்றிக் கிட்டத்தட்ட அப்படியே வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது விளங்கும். இப்பரிந்துரை, மாநிலங்களுக்கு நிறுவன வரியில் ஒரு பங்கு அளிக்கப்பட வேண்டுமென்று மாநிலங்கள் எழுப்பிய பிரச்சினையை விட்டு விட்டு வேறு திசையில் கவனத்தைத் திருப்பி விடும். நிறுவன வரியில்தான் தங்களுக்கு ஒரு பங்கு அளிக்க வேண்டுமென்று மாநிலங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இதுபற்றிப் பத்தாம் நிதிக் குழுவிடம் எடுத்துரைத்து நிறுவன வரியில் 20 சதவீதம் மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று திட்டவட்டமான பரிந்துரையை நிதிக் குழு செய்யலாமெனக் கேட்டுக் கொண்டார்.

9. பத்தாம் நிதிக் குழு தெரிவித்த மாற்றுத் திட்டம் பரந்த செயல் விளைவுடையது. அதற்கு அரசமைப்புச் சட்டத்தில் பல திருத்தங்கள் செய்ய வேண்டியுள்ளது. எனவே, அது நிறைவேறுமென்று தோன்றவில்லை. சரக்கு ஒப்படை வரியைப் பொறுத்தவரையில், அரசமைப்புச் சட்டத் திருத்தம் செய்த பின்னருங்கூட, மத்திய அரசு அதனைச் செயல்படுத்தவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மைய-மாநில உறவுகள் தொடர்பாகச் சர்க்காரியா குழு தெரிவித்த கருத்துப்படி, நிறுவன வரியில் மாநிலங்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டுமென்ற நியாயமான கோரிக்கை, மாற்றுத் திட்டத்தில் இணைக்கப்பட்டதன் மூலம், பத்தாம் நிதிக் குழுவால் ஓசையின்றி ஒதுக்கிவிடப்பட்டு விட்டது. நிதியைப் பகிர்ந்தளிக்கும் மாற்றுத் திட்டம் குறித்து தனது கருத்தைத் தெரிவிக்குமாறு, அல்லது, மாநிலங்களுக்கு உடனடியாகக் நிறுவன வரியில் பங்கு கொடுக்குமாறு நாம் மத்திய அரசை

★ அரசு ஊழியருக்குக் கூடுதல் சலுகைகள்.

★ ஏழைகளுக்கு மருத்துவ வசதி.

வலியுறுத்துவோம்.

10. மாநிலங்களுக்கு அளிக்கப்படும் மொத்தப் பங்கு குறித்து பத்தாம் நிதிக் குழு பயனுள்ள எதையும் செய்யத் தவறி விட்டது என்று நான் இதுவரை குறிப்பிட்டிருந்தேன். இனி, மாநிலங்களிடையே நிதியைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான பிரச்சினை குறித்து நான் குறிப்பிட விரும்புகிறேன். நன்கு செயல்பட்டு வருகிற சில மாநிலங்களைப் பத்தாம் நிதிக் குழு தண்டித்துள்ளது. இதனால், மகாராஷ்டிரம், தமிழ்நாடு, குஜராத், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நன்கு நிருவகிக்கப்பட்ட, நல்ல முறையில் செயல்படுகின்ற சில மாநிலங்கள் கடுமையாக நடத்தப்பட்டுள்ளன. நன்கு நிருவகிக்கப்படுகின்ற மாநிலங்கள் அடுத்தடுத்து வரும் நிதிக் குழுக்களால் தண்டிக்கப்படும் இந்தவழக்கத்தை நிறுத்த வேண்டும்.

11. பத்தாம் நிதிக் குழு, மாநிலங்களிடையே வருமான வரியையும், ஆயத்திர்வையையும் பகிர்ந்தளிப்பதற்கு ஒரு பொதுவான விதிமுறையைப் (Formula) பின்பற்றியுள்ளது. தமிழ்நாடு மத்திய ஆயத் திர்வையைவிட வருமான வரியில்தான் எப்போதும் அதிகப் பங்கு பெற்றுவந்துள்ளது. வருமானவரியையும், மத்திய ஆயத்திர்வையையும் பகிர்ந்தளிக்கும் ஒரு பொதுவான விதிமுறையைப் பின்பற்றுவதானது, தமிழ்நாடு வருமான வரியில் பெறுவதற்குரிய அதிகப் பங்கு, மத்திய ஆயத் திர்வையில் உள்ளது போன்ற அதே அளவிற்குத் தற்போது குறைக்கப்பட்டுவிட்டது என்று பொருள்படுகிறது. பகிர்ந்தளிக்கும் புதிய பொதுவான விதிமுறையின்படி,

1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 20 சதவீதமும், மாநில நபர்வாரி வருமானம், அதிகபட்ச மாநில நபர்வாரி வருமான அளவைவிட எந்த அளவிற்குக் குறைவாக உள்ளது என்ற அடிப்படையில் 60 சதவீதமும்,"பரப்பளவு" குறித்த புதிய கோட்பாட்டின் அடிப்படையில் 5 சதவீதமும், அடிப்படை வசதிக் குறியீட்டு எண் அடிப்படையில் 5 சதவீதமும், வரி வசூலிப்பு முயற்சி அடிப்படையில் 10 சதவீதமும் நிதி பிரித்தளிக்கப்படுகிறது. இந்த புதிய விதிமுறை, மாநில நபர்வாரி வருமானம் அதிகபட்ச மாநில நபர்வாரி வருமானத்தைக் காட்டிலும் குறைந்திருப்பதை குறிக்கும் விதிமுறைக்கு (criterion) அதிகப்பங்கை ஒதுக்குகிறது. மத்திய புள்ளிவிவர நிறுவனம் கணக்கிட்டுத் தந்தவாறு பத்தாம் நிதிக்குழு பயன்படுத்திய மதிப்பீடுகள், தமிழ்நாட்டின் நபர்வாரி வருமானம் தேசிய சராசரி நபர்வாரி வருமானத்தை விட அதிகமாகவுள்ளது என்று தெரிவிக்கின்றன. நபர்வாரி வருமானம் குறைவாக இருக்கின்ற அடிப்படை விதிமுறைக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்ததன் காரணமாக, மத்திய புள்ளிவிவர நிறுவனம் கணக்கிட்டவாறு தேசிய சராசரிக்கு மேல் அதிக நபர்வாரி வருமானம் இருப்பதாகக் காட்டப்பட்டுள்ள தமிழ் நாடு குறைந்த பங்கினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய புள்ளிவிவர நிறுவனம் ஒப்பு நோக்கு அடிப்படையில் நபர்வாரி வருமானத்தை மதிப்பிட்டதில் குறைபாடுகள் உள்ளன என்றும், நடப்பு மக்கள் தொகைக் கணக்கு பின்பற்றப்பட்டது என்றும், ஆய்வு வரம்பில் சொல்லியுள்ளவாறு 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு பின்பற்றப்படவில்லை என்றும் நாங்கள் பத்தாம் நிதிக்குழுவிடம் தெள்ளத் தெளிவாக எடுத்துரைள்ளோம். இச் செயல் மக்கள் தொகையை வரம்பிற்குள் வைத்திருக்கும் பணியை நன்கு நிறைவேற்றிய மாநிலங்களைத் தண்டிப்பதாகவே அமையும். ஏழ்மை சதவீதம் குறித்த மத்திய திட்டக் குழுவின் 1992 ஆம் ஆண்டு அறிக்கையைப் பத்தாம் நிதிக் குழு பரிசீலித்திருந்தால், அது மேலும் அறிவார்ந்த முற்போக்குடைய செயலாக இருந்திருக்கும். தமிழ்நாட்டின் நபர்வாரி வருமானம், தேசிய சராசரியைக் காட்டிலும் உயர்வாகக் காட்டப்பட்டிருந்தபோதிலும், மத்திய திட்டக் குழுவின் வல்லுநர் குழுவின் மதிப்பீடுகளின்படி, 1987-88 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் ஏழை மக்களின் எண்ணிக்கை சதவீதம் தேசிய சராசரிஅளவைவிட அதிகமாகவே இருந்தது. இதனைப் பத்தாம் நிதிக் குழு கவனிக்கத் தவறியுள்ளது. பொருளாதாரத்தில் பின் தங்கிய குறியீடுபோன்ற வலுவான அளவுகோல்களைக் கருத்தில்கொள்ளாமல் விட்டுவிட்டு, பரப்பளவு, அடிப்படை வசதி மேம்பாடு போன்ற புதிய அளவு கோல்களை பத்தாம் நிதிக்குழு தெரிந்தெடுத்திருப்பது குறித்து நாங்கள் வியப்படைகிறோம். புதுமை செய்ய விழைந்த இம்முயற்சி, அதிக மக்கள் தொகை நெருக்கத்தைப் பெற்றுள்ள, அடிப்படை வசதி மேம்பாட்டிற்கு ஏற்கெனவே முதலீடு செய்துள்ள மாநிலங்களை தண்டித்துள்ளது. மொத்தத்தில், பத்தாம் நிதிக்குழு வகுத்துள்ள இந்தப் புதிய நிதிப் பகிர்வு அடிப்படை விதிமுறை மிகவும் ஏமாற்றமளிப்பதாகவுள்ளது.

12. மத்திய அரசுக்கு மாநில அரசுகள் அளித்துள்ள வரி வசூலிப்பு அதிகார (tax-rental) அடிப்படையில் வசூலிக்கப்படும் கூடுதல் ஆயத்தீர்வையைப் பகிர்ந்தளிப்பதைப் பொறுத்த மட்டில், 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையிலான மக்கள் தொகை அளவைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஒன்பதாம் நிதிக்குழுவைப் போலவே பத்தாம் நிதிக்குழுவும் மீண்டும் பிழை செய்துள்ளது. இது ஆய்வு வரம்பிற்கு உட்பட்டதல்ல என்பது எங்கள் கருத்தாகும்.

13. 1995-2000 ஆம் ஆண்டு கால அளவிற்குப் பல்வேறு மாநிலங்களின் நிதி நிலைமையைப் பத்தாம் நிதிக் குழு மதிப்பீடு செய்து, அதன்பிறகு, வரித் தொகையைப் பிரித்துக் கொடுத்த பின், பற்றாக்குறை ஏதேனும் இருந்தால் அதனைச் சரிக்கட்ட, அரசமைப்புச் சட்டத்தின் 275(1) பிரிவின் கீழ் அவற்றுக்குத் தனி மானியம் வழங்குவது தேவையா என்பது குறித்துத் தீர்மானித்துள்ளது. சிறப்பு வகைப்பாட்டின் கீழ்வராத, ஆந்திரப் பிரதேசம், பீகார், கோவா, ஒரிசா, இராஜஸ்தான் மற்றும் உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் மட்டுமே, பற்றாக்குறை மானியத்தைப் (deficit grant) பெறுவதற்குத் தகுதியுடையனவாக்கப் பட்டுள்ளன. 30.5.1994 ஆம் நாளன்று பத்தாம் நிதிக்குழு தமிழ் நாட்டிற்கு வந்தபோது, குழுவின் தலைவர், வரித் தொகையைப் பகிர்ந்தளித்த பின் தமிழ்நாட்டின் வருவாய்க் கணக்கின் கீழ்வரும், திட்டத்தில் சேராத பணிகளின் கணக்கு பற்றாக்குறையைக் காட்டுகிறது என்று தெரிவித்தார். ஆனால், நிதிக் குழு 1995-2000 ஆம் ஆண்டு கால அளவிற்கான தனது முன்கணிப்பில், தமிழ்நாட்டின், திட்டத்தில் சேராத பணிகள் குறித்த வருவாய்க் கணக்கில் உபரி உள்ளது என்று தெரிவித்துள்ளது. 1995-2000 ஆண்டு கால அளவிற்கு மாநிலங்களின் நிதி நிலைமையை மதிப்பீடு செய்கையில், பத்தாம் நிதிக்குழு, மிகவும் கடுமையாக இருந்துள்ளது. மிக உயர்வான அளவில் வருவாய்க் கணக்கு வரவுகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளன. அதே நேரத்தில், செலவை மதிப்பிடுகையில், பத்தாம் நிதிக் குழு முற்றிலும் நடப்புக்குப் புறம்பாக மதிப்பிட்டுள்ளது. அரசுப் பணியாளர்களுக்கு எதிர்காலத்தில் செய்யப்பட

★ முதியோர், விதவைப் பெண்கள், ஊனமுற்றோர் உதவித் தொகை ரூ. 100 ஆக உயர்வு.

★ வயதான விவசாயிகளுக்கு மாதம் ரூ. 100.

வேண்டிய சம்பளத் திருத்தங்களைச் செயற்படுத்துகையில் ஏற்படும் செலவு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. மாநில அரசுகள் வழங்கிவரும் உணவு உதவித் தொகைகளை, 1995–96 ஆம் ஆண்டு முதற்கொண்டு படிப்படியாகக் குறைத்து விட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளது. விவசாய பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதற்காகத் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு அரசு வழங்கும் ரொக்க உதவித் தொகையைப் பத்தாம் நிதிக்குழு முழுமையாக ஏற்கவில்லை என்பது மற்றொரு பாதகமான அம்சமாகும். மேலும், பாசன வரவுகள், செயல்பாட்டு-பராமரிப்புச் செலவைத் திரும்பப் பெறும் வகையில் மட்டும் இல்லாமல், முதலீடு செய்துள்ள மூலதனத்திற்கு ஆண்டொன்றுக்கு 1 சதவீதம் ஆதாயம் கிடைக்கும் வகையிலும் இருக்க வேண்டும் என்று பத்தாம் நிதிக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது. இவ்வாறு மதிப்பிட்டதன் விளைவாக, திருத்த அடிப்படையில் மத்திய வரிகளைப் பகிர்ந்தளித்த பிறகு, தமிழ்நாடு உபரி நிலையில் உள்ளது என்று காட்டப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாடு 275(1) பிரிவின் கீழ் அளிக்கப்படும் மானியத்தையும், பற்றாக்குறை உள்ள மாநிலங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஆயத் தீர்வைகளின் 7.5 சதவீதத் தொகையிலிருந்து ஒரு பங்கையும் பெறத் தகுதியற்றதாகிறது.

14. பத்தாம் நிதிக்குழு, தன்னிச்சையாக, உணவு உதவித் தொகையை ஒதுக்கித் தள்ளிவிட்டும், விவசாய பம்புச் செட்டுகளுக்கான உதவித் தொகையை முழுமையாக அகற்றிவிட்டும், 1995–2000 ஆம் ஆண்டு கால அளவிற்கான இம்மாநிலத்தின் செலவுத் தேவைகளை மிகவும் குறைத்து மதிப்பிட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு இக்குழு நம் மாநிலத்தை மிக இடர்ப்பாடான நிலையில் வைத்துள்ளது.

15. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்றதும், கடுமையான நிதிப் பற்றாக்குறை இருந்தும் மதுவிலக்கைச் செயற்படுத்தியது. மதுவிலக்கு காரணமாக ஏற்படும் வருவாய் இழப்பில் 50 சதவீதம் வரையிலான இழப்பை மாநிலங்களுக்கு ஈடு செய்வது குறித்து நாங்கள் மத்திய அரசிடம் முறையிட்டோம். எனினும், மதுவிலக்கினால் ஏற்படும் இழப்பை ஈடுசெய்யும் முந்தைய திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டதாக மத்திய அரசு சுட்டிக்காட்டியது. இப்பிரச்சினையை நாங்கள் பத்தாம் நிதிக் குழுவிடம் தெரிவித்தோம். மேலும், அரசமைப்புச் சட்டத்தின் கீழ் மாநில அரசின் நெறிமுறைக் கோட்பாடாக விளங்கும் மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்துவதால் ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுசெய்ய, மானியமொன்றை வழங்கக் குறிப்பிட்டுப் பரிந்துரைக்குமாறும் கேட்டுக் கொண்டோம். மாநில ஆயத்தீர்வை வருமானத்தின் மீது மாநிலத்தின் மதுவிலக்குக் கொள்கை எந்த அளவிற்கு விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை, ஏற்கெனவே தான் கருத்திற் கொண்டு வருவாய் மதிப்பீடுகளைச் செய்துள்ளதாகத் தெரிவித்து, பத்தாம் நிதிக் குழு இந்த வேண்டுகோளை ஒதுக்கிவிட்டது நல்வாய்ப்பற்ற நிலையாகும். பத்தாம் நிதிக் குழு இது போன்றதொரு வாதத்தைத் தெரிவித்துள்ளது முற்றிலும் வியப்பாக இருக்கிறது. மதுவிலக்கு செயலில் இல்லாதபோது நாம் வருவாயாக எவ்வளவு தொகையைப் பெற்றிருப்போம் என்பதற்கும், உண்மையில் எவ்வளவு தொகை கிடைத்துள்ளது என்பதற்குமிடையே உள்ள வேறுபாட்டுத் தொகையை ஈடுசெய்ய நாம் குறிப்பிட்ட கோரிக்கை விடுவித்துள்ளோம். குறைந்த வருவாய் கிடைக்கும் தற்போதைய நிலையைப் பற்றித்தான் அது கருத்திற்கொள்ள முடியும் என்றும் ஈடுசெய்யும் பிரச்சினையைக் கருதிப்பார்க்க இயலாது என்றும் மத்திய நிதிக்குழு குறிப்பிட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 1995–96 ஆம் ஆண்டிற்கு மாநில ஆயத்தீர்வையிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கிடைக்கக் கூடிய வருவாய் என்று பத்தாம் நிதிக்குழுவில் மதிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ.687.84 கோடியாகும். ஆனால், இன்றும்கூட நாம் இதற்குக் குறைவாகவே வருவாய் பெற்று வருகிறோம். இது மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்தும் மாநிலங்களை உண்மையில் மிகவும் கடுமையாக நடத்துவதற்கு ஒப்பாகும்.

16. அடிக்கடி புயல், வெள்ளம் ஏற்பட்டு, அவற்றால் இம்மாநில

அரசுக்குப் பிரச்சினைகள் உருவாகின என்பதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் அறிவர். மாநில இடர் நிவாரண நிதிக்குத் தற்போது வழங்கப்படும் ஆண்டுக்கு ரூ.39 கோடி என்ற தொகை அளவு போதுமானதல்ல என்பதையும், தேசிய இடர் நிவாரண நிதியை ஏற்படுத்த வேண்டும் என்பதையும், தேசிய இயற்கைச் சீற்றங்களாக வகைப்படுத்தப்படக்கூடிய கடும் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது இந்த நிதியை அணுகலாம் என்பதையும் நாங்கள் பத்தாம் நிதிக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம். தேசிய இடர் நிவாரண நிதியை ஏற்படுத்த மத்திய அரசு தொகை வழங்க வேண்டும் என்று நாங்கள் கருத்து தெரிவித்திருந்தோம். தமிழ்நாட்டில், அண்மையில் இயற்கைச் சீற்றத் துயர்தணிப்புச் செலவு தொடர்பாக ஏற்பட்ட அனுபவத்தின் பேரில், தமிழ்நாடு இடர் நிவாரண நிதியின் அளவை ஆண்டொன்றுக்கு ரூ.235 கோடி அளவிற்கு உயர்த்த வேண்டும் என்றும், அதில் 80 சதவீதத்தை மத்திய அரசும், 20 சதவீதத்தை மாநில அரசும் அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தோம். தேசிய நிதி குறித்த கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது பற்றி நாம் மகிழ்ச்சி அடையும் அதே நேரத்தில், தமிழ்நாடு இடர் நிவாரண நிதியின் அளவை 1995-96இல் ரூ.39 கோடியிலிருந்து, வெறும் ரூ.56.02 கோடிக்கும், 1999 - 2000 ஆம் ஆண்டில் படிப்படியாக ரூ.68.63 கோடிக்கு மட்டும் உயர்த்தியுள்ளது குறித்து நாம் ஏமாற்றம் அடைந்துள்ளோம். இடர் நிவாரணப் பணிகளுக்கு 1992-93 ஆம் ஆண்டில் ரூ.94.97 கோடி அளவிற்கும், 1993-94 ஆம் ஆண்டில் ரூ.147.28 கோடி அளவிற்கும் நாம் செலவு செய்திருக்கும் போது, பத்தாம் நிதிக்குழு வெறும் ரூ.56.02 கோடியை மட்டும் அனுமதித்துள்ளது வியப்பளிப்பதாக உள்ளது. தேசிய இடர் நிவாரண நிதியை ஏற்படுத்தியிருப்பதும், இந்நிதியின் செயல்பாடுகளை மேற்பார்வையிட, ஐந்து முதலமைச்சர்கள் உள்பட தேசிய வளர்ச்சி மன்றத்தின் துணைக் குழு பரிந்துரைந்திருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாக இருந்தபோதிலும், தேசிய நிதிக்கு மாநிலங்களும் தொகை அளிக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்ததைத் தவிர்த்திருக்கலாம்.

17. மாநிலத்தின் கடன்சுமை அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு, கடன் சுமையிலிருந்து கணிசமான அளவுக்கு நிவாரணம் பெற வேண்டிய அவசியம் குறித்து நாங்கள் விளக்கமான கருத்துரைகளைத் தெரிவித்திருந்தோம். 1995ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31ஆம் நாளன்று, தமிழ்நாட்டின் மொத்தக் கடன் ரூ.13,396.57 கோடியாகி இருக்கும் என்று பத்தாம் நிதிக் குழு மதிப்பீடு செய்துள்ளது. 30 : 70 என்ற

**★ ஊராட்சிகளுக்கு கலர் டி.வி.**

**★ கேபிள் டி.வி.க்குப் பாதி வரி.**

விகிதத்தில் உள்ள மானியம், கடன் வடிவிலான மத்திய நிதியுதவி, 50 : 50 என்ற விகித அளவில் இருக்கும்படி திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று நாங்கள் கருத்துத் தெரிவித்திருந்தோம். சிறுசேமிப்புக் கடன்கள் நிலைத்த கடன்களாகக் கருதப்பட வேண்டுமென்றும் நாங்கள் கருத்துத் தெரிவித்திருந்தோம். சிறுசேமிப்பு நிகர வசூலில் 90 சதவீதத்திற்குச் சமமான சிறுசேமிப்புக் கடன்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், சிறுசேமிப்புக் கடனுக்கான வட்டி வீதம் குறைக்கப்பட வேண்டுமென்றும் நாங்கள் கேட்டிருந்தோம். 1989-90ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்களில் 50 சதவீதம் 1995ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31ஆம் நாளன்றுள்ளபடி தொகுக்கப்பட்டுக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்படலாம் என்றும், எஞ்சியுள்ள தொகுக்கப்பட்ட கடனுக்குப் புதிதாக 8 சதவீத வட்டி விதிக்கப்படலாம் என்றும், அது, 2000 ஆம் ஆண்டிற்குப் பின்னர் திருப்பிச் செலுத்தப்படலாம் என்றும் நாங்கள் குறிப்பாகக் கேட்டிருந்தோம்.

18. பத்தாம் நிதிக் குழு இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. சிறு சேமிப்புக் கடன்களை நிலைத்த கடன்களாகக் கருத வேண்டும் என்ற மாநிலங்களின் கோரிக்கையை அது நிராகரித்து விட்டது. மாநிலங்களின் நிதிச் செயல்பாட்டுடன் இணைந்த பொதுவான கடன் நிவாரணத் திட்டம் ஒன்றைப் பத்தாம் நிதிக் குழு பரிந்துரைத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ்த் தமிழ்நாட்டின் நிதிச் சாதனையைப் பொறுத்துத் தமிழ்நாட்டிற்கு 1995ஆம் ஆண்டிலிருந்து 2000 வரையிலான 5 ஆண்டுகளுக்கு ரூ.31.17 கோடியிலிருந்து ரூ.62.34 கோடி வரையில் கடன்

நிவாரணத் தொகை கிடைக்குமென்று எதிர்பார்க்க இயலும். பத்தாம் நிதிக் குழு, மிகுந்த நிதிநெருக்கடி நிலையில் உள்ள, சிறப்பு வகையின் கீழ் வராத மூன்று மாநிலங்களுக்கும், சிறப்பு வகையின் கீழ்வரும் மாநிலங்களுக்கும் மட்டுமே சிறப்புக் கடன் நிவாரணம் அளித்துள்ளது. இந்தப் பட்டியலில் தமிழ்நாடு சேர்க்கப்படவில்லை. கடன் நிவாரணத் திட்டம் மொத்தத்தில் போதுமானதாக இல்லை என்பது வெளிப்படை. நெருக்கடியை ஏற்படுத்திக்கொண்டே இருக்கின்ற ஒரு பிரச்சினைக்குப் பத்தாம் நிதிக் குழு போதிய தீர்வு காணவில்லை என்பதில் நாம் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

19. ஒரு மாநிலம் அதனுடைய பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடு செய்துள்ள மூலதனத்தைப் பங்குகளை விற்பதன் மூலம் திரும்பப் பெறுவதன் வாயிலாகக் (disinvestment) கடன் நிவாரணம் பெறும் புதிய திட்டமொன்றையும் பத்தாம் நிதிக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது. அனைத்து மாநிலங்களும் அவற்றின் பொதுத்துறை நிறுவனங்களில் செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெறும் கோட்பாட்டை உருவாக்க வேண்டியது அவசியம் என்று பத்தாம் நிதிக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது. அத்தகைய நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்ட ஒட்டுமொத்த மூலதனப்பங்கில் 20 சதவீதம் திரும்பப் பெறப்பட வேண்டும் என்றும், அவ்வாறு திரும்பப்பெறப்பட்ட முதலீட்டின் வரவு, மத்திய அரசிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் இக்குழு பரிந்துரை செய்துள்ளது. ஒரு மாநில அரசு அவ்வாறு செய்தால், அதனை ஊக்குவிக்கும் வகையில், அந்த மாநிலம் முதலீட்டைத் திரும்பப் பெற்று மத்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்திய தொகைக்குச் சமமான கடன் தொகையை மத்திய அரசு கணக்கிலிருந்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளது. இது புதிய கருத்துரையாகும். ஆனால், பத்தாம் நிதிக்குழு மாநிலங்களுக்கு மட்டும் கடுமையான வரையறையை விதித்துள்ளது எனத் தோன்றும். ஏனெனில், மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து திரும்பப் பெறப்பட்ட முதலீட்டிலிருந்து கிடைக்கின்ற வரவுக் கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படுத்தப்படுவதில்லை. அத்தொகை, மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிரப்பப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், மாநிலங்களைப் பொறுத்த வரையில், திரும்பப் பெறப்பட்ட முதலீட்டிலிருந்து கிடைக்கின்ற வரவு மத்திய அரசிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தப் பயன்படுத்தப்பட வேண்டுமென்று பத்தாம் நிதிக்குழு விரும்புகிறது. இது நியாயமற்றது என்பது தெளிவு. கடன் நிவாரணத் திட்டம், திரும்பப் பெறப்பட்ட முதலீட்டு அளவிற்கே பொருந்தக் கூடியதாகவும், அத்தொகையை மத்திய அரசுக்குத் திரும்பச் செலுத்த வேண்டுமென்று வலியுறுத்தாமலும் இருக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்வோம்.

20. மாவட்ட நிருவாகத்தை நிலை உயர்த்துவதற்கான மொத்த மானியம் ரூ.858.32 கோடியாகும். இதில், தமிழ் நாட்டிற்கு ரூ.29.91 கோடி மட்டுமே வழங்கப் பத்தாம் நிதிக் குழு வகை செய்துள்ளது. தொடக்கக் கல்வியை நிலையுயர்த்த, 1995ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆண்டு வரையிலான கால அளவிற்கு மானியமாக ரூ.755.75 கோடியை பத்தாம் நிதிக் குழு அனுமதித்துள்ளது. இந்த மானியத்தில் ரூ.10.94 கோடி மட்டுமே தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட்டுள்ளது. தனிப் பிரச்சினைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ.1246 கோடியில், குடிசைப் பகுதி மேம்பாட்டுக்காகத் தமிழ்நாடு ரூ.60 கோடியைப் பெற்றுள்ளது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், மொத்தம் ரூ.2608.50 கோடியில் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த தொகை ரூ.100.85 கோடி மட்டுமேயாகும். நிருவாகத்தின் அனைத்துக் கூறுகளிலும் தமிழ்நாடு செயற்கரிய சாதனை புரிந்துள்ள காரணத்தால், தமிழ்நாடு மீண்டும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளது.

21. பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளின் சிறந்த அம்சங்களில் ஒன்று, உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியம் வழங்குவது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட குறிப்பான பரிந்துரையாகும். அரசமைப்புச் சட்டத்தின் 73வது, 74வது திருத்தங்களின் கீழ் மாநிலங்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அளவு நிதி ஆதாரங்களை மாற்றி அளிக்க வேண்டியது அவசியம் என்பதால், 1994ஆம் ஆண்டு மே திங்கள் 30ஆம் நாள் பத்தாம் நிதிக் குழு சென்னைக்கு வருகை தந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கூடுதலாக மானியம் அளிக்கும்படி குழுவிடம் குறிப்பாகக் கேட்டிருந்தார். 1996–97ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி, 1999–2000ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்கு மொத்தம் ரூ.402.86 கோடி கிடைக்க வகை செய்கின்ற பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளை நாங்கள் வரவேற்கின்றோம். உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றி அளிப்பதற்காக அனைத்து மாநிலங்களுக்குமாகப் பத்தாம் நிதிக் குழு ஒதுக்கீடு செய்த மொத்தத் தொகை ரூ.5380.93 கோடியாகும். இந்தப் பரிந்துரைகளின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, மாநிலத் திட்டங்களுக்கான தொகையின் ஒரு பகுதியாகக்

கருதப்படவிருப்பதுடன், உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட வேண்டியது என ஒதுக்கப்படவுள்ளது. இது, உள்ளாட்சி மன்றங்களின் நிதியைப் பெருமளவுக்கு அதிகரிக்கச் செய்யும். எனவே, இது வரவேற்கப்படத்தக்க மிகச் சிறந்த பரிந்துரையாகும்.

22. மத்திய அரசு ஏற்றுக் கொண்ட பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக நம்முடைய முக்கியமான கவலைகளை நான் விரிவாக விளக்கியுள்ளேன். மாநிலங்களின் மொத்தப் பங்கினை முறையாக மாற்றுவதில் மாநிலங்களின் பங்கு அதிகரிக்கவே இல்லை என்பதைக் கண்டு நாம் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளோம். 1995–2000 வரையிலான கால அளவில் மாநிலங்களின் நிதி நிலைமை உபரியான / பற்றாக்குறையான நிலையில் இருக்கும் என்ற மதிப்பீடு மிகவும் கடுமையானதாகும். அது ஒரு போதும் உண்மை நிலையைக் காட்டவில்லை. நன்கு நிருவகிக்கப்பட்டு வருகின்ற மாநிலங்களுக்குத் தண்டனையாக அமைகிற பகிர்ந்தளிப்பு விதிமுறையும் நமக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. மாநில இடர் நிவாரண நிதிக்காக அனுமதிக்கப்படுகின்ற மானியங்கள் போதுமானவையல்ல. கடன் நிவாரணத் திட்டமும் அறவே போதுமானதன்று. நிருவாகத்தை நிலை உயர்த்தவும், தனிப் பிரச்சினைகளைச் சமாளிக்கவும் மானியங்களை ஒதுக்கீடு செய்வதில், நன்கு நிருவகிக்கப்பட்டு வருகின்ற மாநிலங்கள் மீண்டும் பாதிப்பை அடைகின்றன. நமக்குச் சற்று ஆறுதல் தரும் அம்சம், உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியம் அளிப்பதாகும். எனவே, பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் நமக்கு ஏமாற்றம் அளிப்பவையாக இருக்கின்றன எனக் கருதுவதற்கு அனைத்துக் காரணங்களும் உள்ளன.

## ஆண்டுத் திட்டம்

23. தமிழ்நாடு ஒவ்வோர் ஆண்டும் ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவைத் தொடர்ந்து அதிகரித்து வந்து சாதனை புரிந்துள்ளது. அதைக் காட்டிலும், 1991–92 முதல் ஒவ்வோர் ஆண்டிலும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டிற்கு மேலும் அதிக அளவில் திட்டச் செலவை எய்தியதன் மூலம் குறிப்பிடத்தக்க சிறப்பான சாதனை புரிந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 1992–93 மற்றும் 1993–94 ஆகிய இரு ஆண்டுகளிலும் 15 பெரிய மாநிலங்களில் 8 மாநிலங்கள், அவற்றின் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவை எய்த முடியாமல் இருந்துள்ள சூழலில் இதனைக் காணும்போது, தமிழ்நாடு தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றிக் காட்டிய அருஞ்சாதனை இன்னும் பெருமளவில் பாராட்டத் தக்கதாகும். இந்தச் சாதனைக்காக, மத்திய திட்டக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள், 20-1-1995 அன்று நடைபெற்ற கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பெரிதும் பாராட்டியுள்ளார். 1991–92இல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.1605 கோடி என்றிருக்க, அடைந்துள்ள சாதனை ரூ.1725.98 கோடியாகும். 1992–93இல் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.1766 கோடி என்றிருக்க, அடைந்துள்ள சாதனை ரூ.1935.14 கோடியாகும். மீண்டும், 1993–94இல் இந்தச் சாதனை தொடர்ந்து எய்தப்பட்டு, ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.2101 கோடி என்றிருக்க, அடைந்த சாதனை ரூ.2234.79 கோடி ஆகும்.

24. 1994–95ஆம் ஆண்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாநிலத்திற்குக் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகமான, அதாவது, ரூ.2750 கோடி அளவிற்குத் திட்ட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்தார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 1994–95இல் இந்த மிகப் பெரிய உயர்வு, மாநிலத்தின் நபர்வாரி திட்ட ஒதுக்கீட்டை தேசிய சராசரிக்குமேல் உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய பெரிய அளவிலான திட்ட ஒதுக்கீட்டை மாநில அரசு உண்மையில் நிறைவேற்ற முடியுமா என்றுகூட சில பேரிடமிருந்து ஐயப்பாடு தெரிவிக்கப்பட்டது. நடப்பாண்டில், ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவை மாநிலம் முழுமையாக எய்தும் வகையில் உள்ளது என்பதையும், 1994–95ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ.2771.26 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

25. 1995–96ஆம் ஆண்டிற்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ரூ.3200 கோடி அளவிற்கு மாநிலத்தின் திட்ட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்துள்ளார்கள். இது நடப்பாண்டு ஒதுக்கீட்டைவிட 16.36 சதவீதம் உயர்வாக உள்ளது. வரும் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடு, 1994–95இல் அடைந்த வளர்ச்சியை நிலைப்படுத்தும் வகையில் உள்ளது. மேலும், இது தமிழ்நாட்டிற்கான எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டான ரூ.10,200 கோடி என்ற குறித்த தொகையளவால் மட்டுமின்றி, பணவீக்கத்தை உள்ளடக்கிவரும் உண்மையான தொகையளவாலும் எய்தப்படும் என்பதை உறுதிப்படுத்தும். 1995–96இல், மாநில அரசு இந்தத் திட்ட ஒதுக்கீட்டை முழுமையாக எய்துவதற்கு உறுதிபூண்டுள்ளது. இதன் காரணமாகத்தான், ரூ.3,200 கோடி என்ற திட்ட ஒதுக்கீட்டிற்கு, 1995–96 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3,250.58 கோடி அளவு ஒதுக்கப்பட்டுள்ளது.

★ திரி ஸ்டவ்வுக்கு வரி விலக்கு.

★ லாட்டரிச் சீட்டு விற்பனை வரியில் மாற்றம்.

## காவல்

26. தமிழ்நாடு காவல்படையை நாட்டிலேயே மிகச் சிறந்த காவல் படையாக ஆக்குவதற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மிகக் குறுகிய காலத்தில் ஆற்றியுள்ளதைப் போலவேறு எந்த முதலமைச்சரும் செய்யவில்லை. அவருடைய திறமையான நெறிப்படுத்துதலின் கீழ், மாநிலக் காவல் துறை புதிய இலட்சிய உணர்வுடனும் எழுச்சியுடனும் செயல்பட்டு வருகிறது. விரைவான வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும் அமைதியும் நல்லிணக்கமும் நிலவ உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு சூழ்நிலையிலும் மாநிலக் காவல் படை விரைந்து செயல்பட்டுப் பிரச்சினைகள் அனைத்தையும் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் சமாளித்தது.

27. காவல்துறைக்கு 1994–95இல் ரூ.387.22 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதற்கு நிகராக, 1995–96 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.420.07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. காவல் படையை நவீனப்படுத்த நாம் மத்திய அரசிடம் ரூ.80.45 கோடி கேட்டிருந்தோம். 1991–92இல் மத்திய அரசு கொடுத்த ரூ.10 கோடி தவிர வேறு நிதிகள் எதுவும் வழங்கப்படாதபோதிலும், நாம் மனம் தளர்ந்துவிடவில்லை. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பணியை நாம் தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளோம். ஒவ்வொரு வரவு–செலவுத் திட்டத்திலும் இதற்காக நாம் தொகை ஒதுக்கியுள்ளோம். காவல்துறை நிருவாகத்தை நவீனப் படுத்துவதற்கு ரூ.668 கோடியை நிலையுயர்த்தும் மானியமாக வழங்கவேண்டும் என்று நாங்கள் பத்தாம் நிதிக் குழுவைக் கேட்டிருந்தோம். ஆனால், பத்தாம் நிதிக் குழு ரூ.12.13 கோடி மட்டுமே மானியமாக அனுமதித்தது. ஆனால், இதுவும் 1996 முதல் 2000 வரையிலான கால அளவிற்கு 1996–97ஆம் ஆண்டிலிருந்து மட்டுமே வழங்கப்படும். இவ்வாறு, நாம் மாநிலக் காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டங்களுக்குச் செலவிட நம் சொந்த வருவாய் ஆதாரங்களையே சார்ந்திருக்கும் நிலைக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளோம். மாநிலக் காவல்படையை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு 1995–96 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் தனி ஒதுக்கமாக ரூ.12.50 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. காவல்துறை மானியக் கோரிக்கையின் விவாதத்தின்போது, புதிய திட்டங்களைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவிப்பார்.

28. காவல்துறை வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நாம் உயரிய முக்கியத்துவம் கொடுத்துள்ளோம். இதுவரை 2002 காவலர் குடியிருப்புகள் ரூ.28.50 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. காவலர் வீட்டுவசதிக்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.10.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 'ஹட்கோ'விடமிருந்து திரட்டப்படும் நிறுவன நிதியுடன் சேர்த்து, 1995–96 இல் 1500 குடியிருப்புகளைக் கட்ட நாம் திட்டமிட்டுள்ளோம். சென்னையில் காவல் துறை நகரத்தைப் படிப்படியாகக் கட்டுவதற்கான நிதி ஒதுக்கமும் இதில் அடங்கும். சென்னை அருகே வீராபுரத்தில் காவலர் பயிற்சிக் கல்லூரி ஏற்படுத்துவதற்குரிய அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே வெளியிட்டுள்ளார். விரிவான திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பணி 1995–96 இல் தொடங்கும். சீருடைப் படையினர் தேர்வு வாரியம் 10,000 புதிய காவலர்களை சுமுகமான, திறமையான முறையில் தெரிந்தெடுத்தது என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவர். புதிய காவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுத் துறையில் நியமிக்கப்பட்டு வருகின்றனர். காவல்படையின் திறமையை மேம்படுத்த இது மிக இன்றியமையாதது ஆகும்.

## விரைவு படுத்தப்பட்ட தொழில் வளர்ச்சிக்கான செயல் திட்டம்.

29. மத்திய அரசு அண்மையில் புதிய பொருளாதாரக் கொள்கையைத் தொடங்கி வைத்துள்ளது. இதில், உரிமம் வழங்கும் முறை மற்றும் ஒழுங்குபடுத்தும் விதிமுறைகளை நீக்குதல் போன்றவை இடம் பெற்றுள்ளன. இதைத் தொடர்ந்து, தொழில் வளர்ச்சியில் புதிய போட்டிச் சூழல்

உருவாகியுள்ளது. புதிய முதலீடுகளை ஈர்ப்பதில் மாநிலங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட வேண்டியுள்ளன. தொழில் வளர்ச்சி வங்கியின் 1993-94 ஆம் ஆண்டறிக்கையில் கண்டுள்ளபடி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் மிகச் சிறப்பான பணிபுரிந்துள்ள போதிலும், நாம் நமக்கான இப்புகழ் [illegible]லைகளில் மயங்கலாகாது. இதன் காரணமாகவே, மாண்புகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் விரைந்த தொழில் வளர்ச்சிக்காகப் புதிய மாநிலத்தின் குறிப்பான செயல்திட்டம் ஒன்றை வகுக்க வேண்டுமெனச் சுட்டிக்காட்டியுள்ளார். 1992 ஆம் ஆண்டில் இவ்வரசு வெளியிட்ட புதிய தொழில் கொள்கையின் தொடர்ச்சியாகவே இச்செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

30. அரசு, தொழில் வளர்ச்சிக்குப் பொருத்தமான நடவடிக்கையைத் தொடங்கி வைக்க வேண்டிய முக்கியமான பகுதிகள் பலவற்றை நாங்கள் கண்டறிந்துள்ளோம். இவற்றில் பின்வருவன அடங்கும்:-

* திறமையான மற்றும் தரமான அடிப்படை வசதிகளைச் செய்துதருதல்.
* விரைந்து தொழில் அனுமதிகளை வழங்க உரிய அமைப்பு ஒன்றை உருவாக்குதல்.
* நிலம், நீர், மின்சக்தி ஆகியவற்றை எளிதில் பெறச் செய்தல்.
* குறிப்பாக எந்தெந்தத் தொழில் தொகுதிகளைத் தொடங்குவதற்கு, இம்மாநிலத்தில் மற்ற மாநிலங்களைவிட அனுகூலமான நிலை உள்ளதோ அவற்றுக்கு ஊக்கம் அளித்தல்.
* தொழில் நல்லுறவுக்கு உகந்த சூழல் நிலவச் செய்தல்.
* தொழில் நுட்ப மனித வளத்தை மேம்படுத்துதல்.
* நிலையான நிதிக் கொள்கையைக் கடைப்பிடித்தல், மற்றும்
* நகர்ப்பகுதி அடிப்படைக் கட்டமைப்பு வசதியையும் வீட்டு வசதியையும், உருவாக்குதல்.

31. விரைவான தொழில் வளர்ச்சிக்கு உதவ இந்த முக்கியப் பகுதிகளில் ஒருங்கிணைந்த நடவடிக்கை குறித்து இவ்வரசு நாட்டம் செலுத்தும். அரசு ஏற்கெனவே எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகள் பற்றி ஆளுநர் உரையில் விரிவாக ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செயல் திட்டத்தில் பல்வேறு இனங்களுக்கு 1995-96 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. புதிய போட்டி மிகுந்த சூழ்நிலையில் தமிழ்நாட்டில் விரைவான தொழில் வளர்ச்சிக்கு உறுதி செய்யப் பெரும்

* ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகள்
* தமிழ்நாட்டில் கடல்வழிப் போக்கு வரத்து வாரியம் அமைப்பு.

முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை அறிந்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

## ஏழை மக்களுக்கான சமூகப்பாதுகாப்புத் திட்டம்

32. மத்திய அரசு, புதிய பொருளாதாரக் கொள்கைகளை அறிவித்ததையடுத்து, நிலைப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கை, பொருளாதாரக் கட்டமைப்புச் சரிக்கட்டல் நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கிடையே, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக விரிவான சமூகப் பாதுகாப்பிற்கு வகைசெய்வதில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உறுதிபடக் கூறியிருந்தார். அதற்கிணங்க, இவ்வரசு, 1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புக் கொள்கையைச் செயல்படுத்தத் தொடங்கியிருந்தது. இந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை நடப்பாண்டில் நாங்கள் வலுப்படுத்தியுள்ளோம். சமூகப் பாதுகாப்பைப் பற்றிக் கூறுகையில், நாடு முழுவதிலும் தமிழ்நாடு மாநிலமே முதலிடம் வகிக்கிறது என்பதை உணரவேண்டும். பொருளாதார நிச்சயமற்ற தன்மை நிலவுவதற்கிடையே, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதில் தமிழ்நாடு மேற்கொண்ட முயற்சிகள் பெரிதும் பாராட்டைப் பெற்றுள்ளன. ஏழை மக்களின் நலன், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றுக்கு நாங்கள் அளித்துள்ள ஆதரவை, நிதி இடர்ப்பாடுகள் எந்த விதத்திலும் பாதிக்க நாங்கள் அனுமதிக்கவில்லை. நிதிப் பிரச்சனைகளும்,

இடர்ப்பாடுகளும் தொடர்ந்து நிலவிய சூழ்நிலையில், ஏழை மக்களுக்கு விரிவான சமூகப் பாதுகாப்பு அளிப்பதில் நாங்கள் எக்காரணம் கொண்டும் பின்வாங்க மாட்டோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

33. மிக அண்மையில்தான், அதுவும் கூட, 1995 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 15 ஆம் நாள் தாக்கல் செய்யப்பட்ட மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில்தான், செவ்விய சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றின் அவசியத்தை மத்திய அரசு உணர்ந்துள்ளது. நிதி இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், மத்திய அரசின் நிதியுதவியை எதிர்நோக்காமல் நாம் இத்திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். மத்திய அரசின் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள புதிய நெறியினை வரவேற்கின்ற அதே சமயத்தில், ஏழை மக்களின் நலனுக்கான இத்திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு முற்றிலும் மாநில அரசுகளிடம் விட்டுவிடப்படவேண்டும் என்பதை நாங்கள் உறுதிபடக் கூற விழைகிறோம். பெரும்பாலான திட்டங்களில், மாநிலங்களை ஒதுக்கிவிட்டு மத்திய அரசே நேரடியாகத் தலையிடும் போக்கினை நாங்கள் ஏற்கெனவே கண்டு வருகிறோம். புதிய சமூக உதவித் திட்டம், மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றுக்கான நிதி, மாநிலங்களுக்குக் கிடைக்கும்படி செய்யப்பட வேண்டும் என்றும், எவ்விதக் குறுக்கீடுமின்றி மாநில அரசுகள் இத்திட்டங்களைச் செயல்படுத்த அனுமதிக்கப்படவேண்டும் என்றும் நாங்கள் வலியுறுத்த விழைகிறோம். இத் திட்டங்களை நேரடியாகச் செயல்படுத்த மத்திய அரசு முயற்சி செய்தால் அது நன்மை பயக்காது.

34. **கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கிய ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு 1995–96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ.1960.93 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது** என்பதை அறிந்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்:

* உணவுக்கு உத்தரவாதம்.
* முதியோர், கருவுற்ற தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோருக்குச் சத்துணவு வழங்குதல்.
* ஏழை மக்களுக்குத் தொடக்கச் சுகாதார வசதி மற்றும் மருத்துவப் பணிகள்.
* அனைவருக்கும் தொடக்கக் கல்வி.
* ஏழை மக்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டங்கள்.
* இன்றியமையாக் குடிநீர் வசதி.
* வீடில்லாதவர்களுக்குப் புகலிடமளித்தல்.
* சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்.
* நலிவடைந்த பிரிவினருக்கான சிறப்புத் திட்டங்கள்.

35. ஏழை மக்களின் விரிவான சமூகப் பாதுகாப்பிற்கான இத்திட்டம் பெரிய அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைப் பேணுவதில் தமிழ்நாட்டைச் சிறந்த மாநிலமாகவும் ஆக்கியுள்ளது. ஏழை மக்களின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மேலும் மேம்படுத்த நாம் தீர்மானித்துள்ளோம்.

**36. முதியோர்கள், நலிவுற்ற வேளாண் தொழிலாளர்கள், விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், ஊனமுற்றோர் ஆகியோருக்குத் தமிழக அரசு மாதமொன்றுக்கு உதவித் தொகையாக ரூ.75 வழங்கிவருகிறது என்பதை இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இத்திட்டங்களினால் 6 இலட்சம் பேர் பயன் பெறுகிறார்கள். இந்தத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையை மாதமொன்றுக்கு ரூ.75–லிருந்து ரூ.100 ஆக உயர்த்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.18 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.**

37. தற்போது குறு விவசாயிகளுக்கு உதவித் தொகைவழங்கும் திட்டம் ஏதும் இல்லை. **65 வயதைக் கடந்த குறுவிவசாயிகள் பயன்பெறும் புதிய உதவித் தொகைத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். இப்புதிய திட்டத்தின் கீழ் மாதமொன்றுக்கு ரூ.100 உதவித் தொகையாக வழங்கப்படும்.** இத்திட்டத்தில் பயன்பெற, நிலவுடைமை விதியைத் தவிர ஏனைய அனைத்து விதிகளும் முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் விதிகளைப் போலவே இருக்கும். **இத்திட்டத்தினால் 1 இலட்சம் குறு விவசாயிகள் பயன் பெறுவர் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இத்திட்டத்தினால் ஏற்படும் கூடுதல் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.12 கோடியாக அமையும்.**

**38., உழைத்து ஊதியம் பெற்றுக் குடும்பத்தைக் காப்பாற்றும் குடும்பத் தலைவர் / தலைவி இறக்க நேரிட்டால், குடும்ப இடருதவித் திட்டத்தின் கீழ், அக்குடும்பத்திற்கு நிவாரணத் தொகையாக நாம் ரூ.5000 வழங்கிவருகிறோம். ஆண்டுதோறும் சுமார் 50,000 குடும்பங்களுக்கு இவ்வுதவி அளிக்கப்படுகிறது.**

இதுபோன்ற குடும்பங்களின் 'குழந்தை ஆதரவுத் திட்டம்' ஒன்றைப் புதிதாகச் செயல்படுத்த நாங்கள் முடிவெடுத்துள்ளோம். நிவாரணத் தொகையான ரூ.5,000 வழங்கப்பட்டவுடன், இதுபோன்ற குடும்பத்திலுள்ள ஒரு குழந்தைக்கு எட்டாம் வகுப்பு வரையாவது படிப்பதற்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.50 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்படும். குடும்பத் தலைவர்/தலைவி இறக்கும்பட்சத்தில், வீட்டிலுள்ள குழந்தை கல்வியறிவு இல்லாமல் பாதிக்கப்படாமலிருக்க இத்திட்டம் உறுதி செய்யும்.

39. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள கருவுற்ற பெண்களுக்கு மாதமொன்றிற்கு ரூ.75 வீதம் நான்கு மாதங்களுக்கு ரூ.300 உதவித் தொகையாக அரசு வழங்கிவருகிறது. இக்கால கட்டத்தில் இவர்களின் வருமான இழப்பை இது ஈடு செய்த போதிலும், இவர்களுக்குத் தேவையான சத்துணவை வழங்க இந்த உதவித் தொகை போதுமானதாக இல்லை. எனவே, இதுபோன்ற கருவுற்ற பெண்களுக்கு அருகிலுள்ள மதிய சத்துணவு மையத்தின் மூலம் சத்துணவு வழங்க நாம் முடிவு செய்துள்ளோம். இப்புதிய திட்டத்தின் கீழ் உதவித் தொகையாக ரூ.300 பெறும் கருவுற்ற பெண்கள் அனைவருக்கும் நான்கு மாதங்களுக்கு, சத்துணவு மையத்தில் தினமும் ஒருமுறை சத்துணவு இலவசமாக வழங்க வழி செய்யப்படும். இத்திட்டம் கருவுற்ற பெண்களில் சுமார் 2 இலட்சம் பேருக்குப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

40. நமது மாநிலத்தில் உள்ள நலிந்த ஏழை மக்களுக்குப் பயன் தரக்கூடிய பல புதிய முயற்சிகளை மேற்கொள்ளுவதைப் பேரவை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்பர் என்று நான் நம்புகிறேன். இத்துடன், நலிந்த ஏழை மக்களுக்குப் பயனளிப்பதில் தமிழகம் தொடர்ந்து இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக அமையும்.

## வளர்ச்சிப் பணித் திட்டங்கள்

41. இதுவரை, 1995-96 ஆம் ஆண்டில் நாம் தீவிர கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான கொள்கைப் பிரச்சனைகள் குறித்து எடுத்துக் கூறியுள்ளேன். இதில் அதிக நேரத்தைச் செலவிடாமலிருக்கவேண்டி, வெவ்வேறு துறைகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள், பணிகள் என் உரையின் பகுதி -"B" ல் விரிவாக விளக்கப்பட்டுள்ளன; இவை என்னால் படிக்கப்பட்டனவாகக் கருதப்படலாம். எனினும், உதவி தேவைப்படுகிற வெவ்வேறு தொகுதியினரின் பயனுக்காக, வெவ்வேறு துறைகளில் பல புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இப்புதிய திட்டங்கள் சிலவற்றைச் சுருக்கமாக விவரிக்க நான் கருதியுள்ளேன். அவை வருமாறு:

* 1994-95இல் உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் டன்களைத் தாண்டிவிடும். உழவர்களுக்கு ஆதாயமுள்ள விலையை உறுதி செய்வதே மாநில வேளாண்மைக் கொள்கையின் நோக்கமாகும். ரூ.94.56 கோடி செலவிலான வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டம், 1995-96 இல் ரூ.10 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்திற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ.73.43 கோடிக்கு உயர்த்தப்படும். கூட்டுத் துறையிலும், இணைத் துறையிலும் உணவுப் பொருள் பதப்படுத்தும் பிரிவுகளை ரூ.1 கோடி ஒதுக்கீட்டில் ஏற்படுத்தும் புதிய திட்டம் ஒன்று 1995-96இல் தொடங்கப்படும்.

* பம்பை-அச்சன் கோவில்-வைகை இணைப்பை உடனடியாகச் செயல்படுத்த நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம். 40 இலட்சம் உழவர்கள் பயனடையும் ரூ.1140 கோடி செலவிலான நீர் வள ஆதாரங்கள் நிலைப்படுத்தும் திட்டம், ரூ.68.57 கோடி வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டுடன் 1995-96இல் செயல்படுத்தப்பட உள்ளது. வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் மலட்டாற்றின் குறுக்கே புதிய நீர்த் தேக்கம் ஒன்று ரூ.16 கோடி செலவில் கட்டப்படும். மாநில ஏரிப் பாசனத் திட்டம் 1995-96இல் ரூ.10 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும். வெள்ளத்தால் பாசன ஏற்பாட்டுக்கு ஏற்பட்ட

**★ அனைத்துத் தொழில்களும் வெளி மாநிலங்களுடன் போட்டியிட அரசு சலுகை.**

**★ மெழுகுவர்த்தி, ரப்பர் பந்து, அரிக்கேன் விளக்கு, மண்ணெண்ணெய் விளக்குகளுக்கு விற்பனை வரி ரத்து.**

சேதத்தைப் பழுதுபார்க்கும் பணி ரூ.10 கோடி சிறப்பு நிதி ஒதுக்கத்துடன் 1995-96இல் மேற்கொள்ளப்படும்.

* அதிகாரப்பரவல் முறையில் மாவட்ட அளவில் வகுக்கப்படும் திட்டம் குறித்த ஒதுக்கீடு ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளைப் பராமரித்தல், சொத்துக்களை மேம்படுத்தல் ஆகியவை முற்றிலும் சீரமைக்கப்படும். மாநிலத்தில் உள்ள ஊராட்சிகள் அனைத்துக்கும் 1995 ஜூன் மாதத்திற்குள் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்.

* வெறிநாய்க்கடி மருந்து தயாரிப்பை மும்மடங்கு அதிகரிக்க, இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி நிலையம் வலுப்படுத்தப்படும்.

* செயற்கைக் கட்டுமரங்களைப் பிரபலப்படுத்தும் புதிய திட்டம் ஒன்று ரூ.25 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

* புதிய வன வள ஆராய்ச்சிக் கல்வி-விரிவாக்க திட்டம் ரூ.7.54 கோடி செலவில் 1995-96இல் ரூ.1.50 கோடி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்படும். காடுகள் அல்லாத பகுதிகளில் காடுவளர்க்கும் புதிய திட்டம் (Operation Greening) 1995-96இல் ரூ.50 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

* திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் செய்யாற்றில் 600 ஏக்கர் பரப்பில் ரூ.17.80 கோடி செலவில் புதிய தொழிற்பேட்டையை "சிப்காட்" நிறுவும். 1995-96இல் மொத்தம் ரூ.5805.93 கோடி திட்டச் செலவில் "டிட்கோ" 19 திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கும். தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் ரூ.525 கோடி செலவிலான விரிவாக்கத் திட்டம் 1995 ஜூனுக்குள் முடிக்கப்படும். மகளிர் தொழில் முனைவோர்களுக்கென்றே 1995-96இல் சென்னைக்கு அருகே தொழிற்பேட்டை ஒன்றை "சிட்கோ" ஏற்படுத்தும்.

* மின்சக்தித் துறைக்கான திட்ட ஒதுக்கீடு 1994-95இல் ரூ.624.38 கோடி என்பதிலிருந்து 1995-96இல் ரூ.750 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. நாட்டில் காற்றாலை மின் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. அனைத்திந்திய உற்பத்தித் திறனளவான 180 மெகாவாட்டில், தமிழ்நாட்டின் மொத்த நிறுவுதிறன் 132 மெகாவாட் ஆகும்.

* சாலைகள் குறித்த திட்ட ஒதுக்கீடு ரூ.153.16 கோடியாக உயர்த்தப்படும். இது, 1994-95 ஆம் ஆண்டை விட 19 சதவீதம் அதிகமாகும். ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கு ரூ.10 கோடி செலவில் தார் சாலை போடும் புதிய திட்டமொன்று 1995-96 இல் மேற்கொள்ளப்படும். கடற்கரைச் சாலை மேம்பாட்டுப் புதிய திட்டமொன்று 1995-96இல் ரூ.6.50 கோடி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்படும். மலைப்பகுதி சாலை மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டமொன்று 1995-96இல் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்படும். தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புயலால் பாதிக்கப்பட்ட 9 மாவட்டங்களில் 39 பாலங்களைப் புதுப்பிக்கும் பணி மொத்தம் ரூ.21 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். தொழிற்சாலைப் பகுதிகளிலுள்ள சாலைகளுக்கு மேம்பாடுகள் செய்யும் புதிய சிறப்புத் திட்டம் 1995-96இல் ரூ.2.50 கோடி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும்.

* நடுத்தர மற்றும் சிறிய துறைமுகங்கள் மேம்பாட்டை விரைவுபடுத்த, தமிழ்நாடு கடல்வழிப் போக்குவரத்து வாரியம் ஏற்படுத்த கருதப்பட்டுள்ளது. கடலூர், நாகப்பட்டினம் துறைமுகங்களை மேம்படுத்துவதற்கான விரிவான திட்டங்கள் மேற்கொள்ளப்படும். தூத்துக்குடி, எண்ணூர் துறைமுகங்களை மேம்படுத்தும் பணியை மேற்கொள்ளுமாறு மத்திய அரசிடம் கோரிக்கொள்ளப்பட்டுள்ளது.

* நகராட்சிப் பகுதிகளில் அடிப்படை வசதிக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு நகர்ப்பகுதி அடிப்படை வசதி நிதியுதவி நிறுவனம் ஒன்று புதிதாக ஏற்படுத்தப்படும். திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை ரூ.653.20 கோடி செலவில் மேற்கொள்ள புதிய திருப்பூர் பகுதி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

* 'எழில்மிகு சென்னை 2000' திட்டத்தின் கீழ்ப் பல்வேறு பிரிவுகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சென்னை மாநகரில் மொத்தம் ரூ.4,000 கோடி முதலீடு செய்ய இது வகை செய்கிறது.

* 1995-96இல் ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 40,000 வீடுகள் ரூ.6.40 கோடி ஒதுக்கீட்டில் கட்டப்படும்.

* குடிநீர் வழங்கலுக்கான திட்ட ஒதுக்கீடு 1995-96இல் ரூ.419.97

கோடியாக உயர்த்தப்படும். புதிய வீராணம் திட்டம் உலகவங்கி உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.159.74 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்தின் (ஜப்பான்) உதவியுடன் ரூ.572 கோடி செலவில் கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நகர்ப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க, புதிதாக நிதி வழங்கும் ஏற்பாடு 1995-96 இல் ரூ.25 கோடி நிறுவன நிதி பெறும் வகையில் வகுக்கப்படும். இது வரை குடிநீர் வசதியைப் பெற்றிராத எஞ்சிய 1037 குடியிருப்புகள் அனைத்திற்கும் 1995 டிசம்பருக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். திருத்தியமைக்கப்பட்ட ரூ.894 கோடி செலவிலான தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டம் நிதியுதவிக்காக உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மொத்தத்தில் 1183 ஆதி திராவிடர் குடியிருப்புகள் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ், 1994-95 மற்றும், 1995-96 ஆம் ஆண்டுகளில் மொத்தம் ரூ.22 கோடி ஒதுக்கீட்டுடன் எடுத்துக் கொள்ளப்படும். தருமபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி, பெரியார் ஆகிய மாவட்டங்களில் குடிநீரில் புளோரைடு மிகுதியாகக் கலந்து விட்டதால் பாதிக்கப்பட்ட 458 குடியிருப்புகள் மொத்தம் ரூ.42.27 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். குடிநீரில் அதிக உவர்த்தன்மை காரணமாகப் பாதிக்கப்பட்ட 100 கடலோர மீனவக் குடியிருப்புகளுக்கு 1995-96இல் ரூ.6.40 கோடி செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

சுற்றுச் சூழல் துறை ஒன்று புதிதாக 1995-96இல் ஏற்படுத்தப்படும். தோல் தொழிலுக்கும் துணிகளுக்குச் சாயம் தோய்க்கும் தொழிலுக்கும் பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தாலும் தமிழ்நாடு தோல்பொருள் வளர்ச்சிக் கழகத்தாலும் நிறுவப்படும்.

கல்வி குறித்த மொத்த ஒதுக்கீடு 1995-96இல் ரூ.2233.17 கோடியாக இருக்கும். மூன்றாண்டுக் கல்வி அடிப்படை வசதித் திட்டம் ஒன்று 1995-96இல் ரூ.160.24 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். ஏழாவது தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடத்தப்படும். ரூ.125 கோடி செலவிலான போட்டி விளையாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

* 1995-96 இல் ரூ.1.75 கோடி ஒதுக்கீட்டில் 70 தொடக்கச் சுகாதார நிலையங்கள் புதிதாகக் கட்டப்படும். ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும், மகளிர் நோயியல், சிறார் மருத்துவம், கண் நோயியல் ஆகிய துறைகளில் உரிய குறைந்த அளவு வசதிகள் செய்து கொடுக்கப்படும். 20 வட்ட மருத்துவமனைகளில் எக்ஸ் கதிர் இயந்திரங்களுக்கு வகை செய்யப்படும். மருந்துப் பொருட்கள், மருந்துகள் ஆகியவற்றுக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.96 கோடியாகும்.

* 1995-96 ஆம் ஆண்டில், பல்வேறு சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ் 1.5 இலட்சம் மகளிர் தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள உதவியளிக்கப்படும். குழந்தை நலத் துணைத் திட்டம், 1995-96 ஆம் ஆண்டில் ரூ.768.62 கோடி ஒதுக்கீட்டைப் பெறும். உடலூனமுற்றோரின் நலனுக்காக விரிவான கொள்கை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

* ஆதி திராவிடர் பெண் குழந்தைகளை ஆதரிக்கும் திட்டம், செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., வட ஆர்க்காடு-அம்பேத்தார், சேலம், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம்-காயிதேமில்லத் ஆகிய மேலும் 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். 5 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைகளை வழங்கும் திட்ட இலக்கு 1995-96ஆம் ஆண்டில் எய்தப்படும். இதற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ.10.50 கோடியாகும். 1995-96 ஆம் ஆண்டில் 2000 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். ஆதி திராவிடர்களுக்கான மாணவரில்லக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான ஒதுக்கீடு ரூ.4 கோடியாக உயர்த்தப்படும். 1995-96 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.105 கோடி செலவில் ஆதி திராவிடர்களுக்காக 50,000 காங்கிரீட் தள வீடுகள் கட்டப்படும். ஆதி திராவிடர்களுக்கான 30,000 வீடுகள் ரூ.15 கோடி செலவில் நிலையுயர்த்தும் புதிய திட்டம் 1995-96 இல் செயல்படுத்தப்படும்.

* 1995-96 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.13.81 கோடி செலவில், 6577 வீடுகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஊரக ஏழைமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

★ குடும்பத் தலைவர் இறந்தால், ஒரு குழந்தையின் படிப்புக்கு 4 ஆண்டுக்கு மாதம் ரூ. 50 உதவி.

★ 1,300 மீனவர்களுக்கு ரூ. 13 கோடியே 12 இலட்சம் செலவில் படகு, வலை, செயற்கைக் கட்டுமரம்.

- கூட்டுறவு நூற்பாலை இணையம் ஒன்று, ரூ.25 கோடி தொடக்க மூலதனப்பங்குடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டில் ரூ.1.90 கோடி ஒதுக்கீட்டில் கைத்தறி நெசவாளர்களுக்காக 1000 தறிக்கூடம் இணைந்த வீடுகள் கட்டப்படும். **1995-96 ஆம் ஆண்டில் இலவச சேலை, வேட்டி வழங்கும் திட்டத்திற்கு, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள 60 இலட்சம் மகளிர், மற்றும் 60 இலட்சம் ஆடவர் பயன் பெறுவர்.**

- ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு 1995-96 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடு ரூ.311.64 கோடியாக இருக்கும். இது 1994-95 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டைக் காட்டிலும் 40 சதவீதத்திற்கு மேல் உயர்ந்துள்ளது என்பதைக் காட்டும். **பல்வேறு வேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ், 1995-96 ஆம் ஆண்டில் 10.20 கோடி மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்படும்.**

## நிதி நிலைமை

42. 1995-96இல் இந்த அரசு பெரும் இலட்சிய வேட்கையுடன் வகுத்துக் கொண்டு எய்த விழைந்துள்ள திட்டங்களையும், திட்டப் பணிகளையும் கருத்தில் கொண்டு, வரவினங்களிலிருந்து செலவினங்களுக்கு நிதி ஒதுக்கும் மிகக் கடினமான பணியைப் பற்றி நான் கூற விழைகிறேன். இந்த அரசு பதவியேற்றபோது உள்ள கடுமையான நிதி நிலைமையை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். தமிழ்நாடு அரசு, தன்னுடைய திட்ட ஒதுக்கீட்டில் அதிகமான அளவுக்குக் குறைக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது என்றும், தன்னுடைய பணியாளர்களின் சம்பளத்தைக் கூடக் கொடுக்க முடியாத அளவுக்கு அதற்கு இடர்ப்பாடு ஏற்பட்டது என்றும் அப்போது உணரப்பட்டது. தனிப்பட்ட நிறுவனங்களிடமிருந்து மறைமுகமாகக் கடன் வாங்கும் ஒரு அவல நிலை பல மாநிலங்களில் நிலவியது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். நாம் இந்நிலை ஏற்பட இடம் கொடுக்கவில்லை. 1991-92 முதல் ஒவ்வோராண்டும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை விட நாம் அதிகமாகவே செலவிட்டுள்ளோம். 1994-95ஆம் ஆண்டிலும் நாம் அதே போலச் செயற்பட்டுச் சாதனை நிகழ்த்த முனைப்புக் காட்டியுள்ளோம். 1995-96ஆம் ஆண்டில் நாம் ரூ.3,200 கோடி திட்ட ஒதுக்கீட்டை இலக்காகக் கொண்டுள்ளோம். நமக்குப் பெரிதும் தேவைப்படும் நிதி நிவாரணத்தை அளிக்கும் என்று ஆவலோடு எதிர்பார்த்த பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் நமது நம்பிக்கையை முற்றிலும் பொய்யாக்கி விட்டன என்பது நல்வாய்ப்பற்ற நிலையாகும். அவ்வாறிருந்தும், தமிழ் நாட்டை வளமையை நோக்கி இட்டுச் செல்லும் பணிக்கு நம்மையே நாம் மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

## வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்

43. 1994-95ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கில் மொத்த வரவு ரூ.7844.37 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் மொத்த செலவு ரூ.9083.53கோடியாகவும் இருந்தது. இறுதியில் இதன் விளைவாக ஏற்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை (–)ரூ.1239.16 கோடியாகும். நாம் மதிப்பீடு செய்தபடியான தொடக்கப் பற்றாக்குறைத் தொகை (–)ரூ.196.82 கோடியுடன், எல்லாக் கணக்குகளிலும் உள்ள பற்று வரவுகளின் நிகர விளைவு (–)ரூ.201.23 கோடி, சிக்கன நடவடிக்கைகளின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நிகர மிச்சம் ரூ.95 கோடி, புதிய வரிகள் மூலம் எதிர்பார்க்கபட்ட நிகர வருமானம் ரூ.48 கோடி ஆகிய அனைத்தையும் சேர்த்து, 1994-95ஆம் ஆண்டுக்கான மொத்தப் பற்றாக்குறை ரூ.(–)255.05 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. திட்ட ஒதுக்கீட்டைக் கைவிடாமல் நிலைமையைச் சமாளிக்க நாம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

44. 1994-95ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு வருவாய்க் கணக்கில் மொத்த வரவு ரூ.8135.44 கோடி எனவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.9187.16 கோடி எனவும், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ.1051.72 கோடி எனவும் காட்டுகிறது. வருவாய்ப் பற்றாக்குறையை நாம் குறைத்துள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளலாம். 1993-94ஆம் ஆண்டின் இறுதி இருப்பான ரூ.69.79 கோடியுடன், எல்லாக்கணக்குகளிலும் உள்ள பற்றுவரவுகளின் நிகர விளைவான (-)ரூ.93.89 கோடியுடன் சேர்த்து, 1994-95ஆம் ஆண்டின் முடிவில் இறுதிப் பற்றாக்குறை (-)ரூ.24.10 கோடி ஆக இருக்கும் என்று தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிலைமையில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் காண உறுதி செய்ததுடன், திட்ட ஒதுக்கீடு ரூ.2771.26 கோடிக்கு வகை செய்ய நாம் முயற்சி எடுத்துள்ளோம் என்பதையும் இங்கு குறிப்பிடலாம்.

45. 1995-96ஆம் ஆண்டுவரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள், வருவாய்க் கணக்கில் வரவு ரூ.8985.07 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.9910.62 கோடியாகவும், இதனால் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை (-)ரூ.925.55 கோடியாகவும் இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. 1995-96ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அனைத்துக் கணக்குகளின் கீழ் வரும் பற்று வரவுகளின் நிகர விளைவு (-)ரூ.1.40 கோடி பற்றாக்குறையாக இருக்கும். 1994-95ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் இறுதிப் பற்றாக்குறை (-)ரூ.24.10 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. 1995-96ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தப் பற்றாக்குறை (-)ரூ.25.50 கோடியாக இருக்கும் என்று தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

46. வருவாய்ப் பற்றாக்குறையைக் கணிசமான அளவு குறைக்க, நாம் குறிப்பிடத்தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் என்பதை இங்கு குறிப்பிடலாம். மொத்தப் பற்றாக்குறை பெருமளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலைமையை இவ்வாறு சீர் செய்ய நாம் எடுத்துள்ள திறமையான நிதி நிருவாகத்தை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் பாராட்டுவர். மொத்தப் பற்றாக்குறையையும், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறையையும் குறைத்துள்ளது பற்றி நாம் உரிமையோடு பெருமைப்படலாம். எனினும், கூடுதலாக நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு நமக்கு அவ்வளவாக வாய்ப்பு இல்லாததால், மொத்த நிதி நிலைமையைக் குறித்து நாம் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

★ 74,100 ஏக்கர் நிலப்பரப்பில் காகிதக்கூழ் மரங்கள்.

★ குழந்தைகள் நலனுக்கான 15 அம்சத் திட்டத்துக்கு ரூ. 770 கோடி ஒதுக்கீடு.

எனவே, செலவைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

## செலவுக் கொள்கை

47. கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில், இவ்வரசு செயல்படுத்தவுள்ள செலவுக் கொள்கையின் அடிப்படை விதிகளைக் குறித்து ஏற்கெனவே நான் குறிப்பிட்டிருந்தேன். மற்றவர்கள் திறம்பட்ட வகையில் செயல்படுத்தக் கூடிய பல்வேறு நடவடிக்கைகள் குறித்த செலவை, அரசு மேற்கொள்வது உகந்ததாக இராது. அரசு சில முக்கியமான பணிகள் மீது, குறிப்பாக ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைப் பேணுவதில் கவனம் செலுத்த வேண்டும். நம்முடைய செலவுக் கொள்கையை உருவாக்குவதில் இதனை முக்கியமான வழிகாட்டும் விதியாக நாம் வைத்துள்ளோம். பத்தாம் நிதிக் குழு, அரசின் செலவு குறித்த தேவைகளை மதிப்பீடு செய்வதில் மிகக் கடுமையாக இருந்துள்ளதுடன், மாநிலங்கள் தேவையற்ற நிதிப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதையும் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளது. எனவே, நம்முடைய செலவுக் கொள்கையை வகுப்பதில் நாம் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியுள்ளது.

48. நான் கடந்த ஆண்டு குறிப்பிட்டிருந்த கொள்கையை, அதாவது விரைந்த வளர்ச்சிக்காகத் தொடக்க நிலையிலிருந்து வரவு-செலவுத் திட்டமிடும் முறையைத் தொடர்ந்து பின்பற்றுவதன் மூலம், அரசுத்

துறைகளில் மேம்படுத்தப்பட்ட உற்பத்தித் திறனைப் பெறுதல். திட்டங்கள் அனைத்தின் பயன்களும் இயன்றவரை தகுதியுள்ள, தேவைப்படும் ஏழை மக்களுக்கு மட்டுமே கிடைக்குமாறு செயற்படுத்துதல், ஏழை மக்கள் அல்லாத பிறருக்கு அளிக்கப்படும் பல்வேறு பணிகளுக்கான செலவைப் போதுமான அளவிற்கு வசூலித்தல், 1995-96 முதல் பொதுத் துறை நிறுவனங்கள் அடைந்து வரும் இழப்புக்கு அளிக்கப்படும் நிதியுதவியை நிறுத்தி விடுதல். இறுதியாக சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றைத் தொடர்ந்து ஆர்வத்துடன் பின்பற்றுவோம். இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் 1995-96இலும் நாம் தொடர்ந்து மேற்கொள்வோம். என் முயற்சிக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் நாடுகிறேன்

## வரிகள்

## விற்பனை வரி

49. இந்த அரசு எந்த ஒரு பகுதியினரையும் பாதிக்காத வகையில் நடைமுறைக்கு ஏற்ற வரி விதிப்புக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. வரி விதிப்புக் கொள்கையில் இருக்கும் இந்த நிரந்தரத் தன்மையை எல்லோரும் வரவேற்றுள்ளனர். 1993-94ல் விற்பனை வரி விதிப்பு முறையில் நாங்கள் கொண்டு வந்த முக்கியத்துவம் வாய்ந்த மாற்றங்களை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். இவை நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் ஒரு முன் மாதிரியாக அமைந்துள்ளன. பல மாநிலங்கள் நம்மைப் பின்பற்றி உள்ளன. தொழில் மற்றும் வாணிகத் துறையினர் கூடுதல் விற்பனை வரி, மேல் வரி, கூடுதல் மேல் வரி ஆகியவற்றை அடிப்படை விற்பனை வரியுடன் இணைத்து எளிதாக்கப்பட்ட விற்பனை வரி முறையை உருவாக்க வேண்டும் என்றும், முதலீட்டுப் பொருட்களுக்கு சலுகை விகிதங்கள் விதிக்கப்பட வேண்டும் என்றும் கோரி வருகின்றனர். இக்கோரிக்கையும் கூட்டப்பட்ட மதிப்பின் மீதான வரி (Value Added Tax) செயல் முறைக்கு கொண்டு வருவது பற்றிய தேசிய பொது நிதியியல் மற்றும் கொள்கை நிறுவனத்தின் (National Institute of Public Finance and Policy) ஆய்வில் அடங்கியுள்ளது. இந்த நிறுவனத்தின் அறிக்கை மத்திய அரசிடம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை ஆய்வு செய்வதற்காக 1994ம் ஆண்டு மே மாதம் 27ம் தேதி மத்திய நிதியமைச்சர் அனைத்து மாநில நிதியமைச்சர்களுடன் கூட்டம் ஒன்றை நடத்தினார். அப்பொழுது வரி சீரமைப்பு குறித்து எல்லாப் பொருட்களையும் ஆய்வு செய்வதற்காக 10 மாநில நிதியமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று அமைப்பது என முடிவு செய்யப்பட்டது. சரக்கு ஒப்படை வரி (Consignment Tax) பற்றியும் இந்தக் குழு ஆய்வு செய்யும் என முடிவு செய்யப்பட்டது. இக்குழு பல்வேறு கூட்டங்களை நடத்தியது. இதன் துணைக் குழுக்களும் இது சம்பந்தப்பட்ட பல பொருட்களைப் பற்றி ஆராய்ந்தன. கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி மீதான மேல்வரி, கூடுதல் மேல்வரி ஆகியவற்றை அடிப்படை விற்பனை வரியுடன் சேர்ப்பது, மற்றும் முதலீட்டுப் பொருட்களுக்கான சலுகைகள் போன்ற சீரமைப்புகள் ஆகியவை, மத்திய அரசு மூன்று பொருட்களுக்கு, கூடுதல் ஆயத்தீர்வை விதிப்பதன் விளைவாக மாநிலங்களுக்கு விற்பனை வரி விதிக்கும் உரிமை தடை செய்யப்பட்டதைத் திரும்ப பெறுதல், சரக்கு ஒப்படை வரி விதித்தல் போன்றவையுடன் இணைந்ததாகும். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒருமித்த கருத்து உருவாக்கப்படவேண்டும். மற்ற மாநிலங்கள், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள் மற்றும் மத்திய அரசு ஆகியவற்றுடன் கூடிய விரைவில் ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கு மாநில நிதியமைச்சர்கள் குழுவில் இதைப்பற்றி நாங்கள் விரிவாக நடவடிக்கை எடுப்போம்

50. மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் நிதிக் கொள்கையில் சில நடவடிக்கைள் எடுக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இறக்குமதித் தீர்வைகள் குறைவின் காரணமாகவும் பொருளாதாரச் சலுகைகள் காரணமாகவும் இந்தியத் தொழில் துறை மற்ற நாடுகளுடன் போட்டியிடுவதற்கு ஏற்ற வலிவு பெற வேண்டும். புதிய தொழில்களைத் தொடங்குவதற்கு மாநிலங்களிடையே போட்டி உருவாகி வருகின்றது. மாநிலத்தில் தொழில் வளர்ச்சி ஏற்பட செயல் திட்டம் ஒன்றை நாம் ஏற்கனவே தொடங்கியுள்ளோம். நன்றாகச் சீரமைக்கப்பட்ட வரி விதிப்புக் கொள்கை இதில் உள்ளடங்கும். தமிழ் நாட்டில் எளிமையான, முற்போக்கான வரி விதிப்பு முறையை அமைப்பதில் நாம் முனைந்துள்ளோம். தொழில் இடுபொருட்கள் மீதான விற்பனை வரி விகிதம் பல்வேறு மாநிலங்களிடையே உள்ள தொழிற்சாலைகளின் போட்டியிடும் திறனைப் பாதிக்கக்கூடிய ஒரு அம்சமாகும். அடுக்கடுக்காக அமையும் வரி விகிதத்தைக் குறைப்பது நமது குறிக்கோள். இந்த முயற்சியின் தொடர்ச்சியாக, தமிழ்நாடு பொது விற்பனை வரி, சட்டத்தின் பிரிவு 3(3)இன் கீழ் வரும் இடுபொருட்கள் மீதான சலுகை விற்பனை வரியை பல பொருட்களுக்கு விரிவாக்குவதற்கான நடவடிக்கைகளை 1993-94ல் எடுத்துள்ளோம். மீண்டும் 1994-95ம் ஆண்டிற்கான வரவு செலவுத்

திட்டத்தில் பிரிவு 3(3)இன் கிழான சலுகை விற்பனை வரி சில குறிப்பிடப்பட்ட கனிம எண்ணெய் மற்றும் வாயுக்கள் போன்றவற்றிற்கு விரிவு படுத்தப்படுமென கூறியிருந்தேன். வருவாய் இழப்பைக் கவனத்தில் கொண்டு, இந்தச் சலுகையைச் செயல்படுத்த இயலவில்லை. தற்போது தொழில் துறையில் பயன்படுத்தக்கூடிய இடுபொருட்கள் குறித்த விற்பனை வரி பற்றி முழுமையாக ஆய்வு செய்துள்ளோம். உருவாகி வரும் புதிய போட்டிச் சூழ்நிலையில் உற்பத்தி அல்லது தொழில் முறையில் பயன்படுத்தப்படும் அனைத்து இடுபொருட்கள் மீதான வரி குறைந்த பட்ச அளவில் இருக்க வேண்டும் என்ற கருத்தில் போதிய வலு உள்ளது. இவ்வாறான ஒரு கொள்கையை நாம் செயல்படுத்த முடிவு செய்துள்ளோம். இதன்படி தற்போது பிரிவு 3(3)இன் கிழ் சலுகை முறையிலான விற்னை வரிக்கு உட்படாத எல்லா கனிம எண்ணெய், மசகு (Lubricating) எண்ணெய், குவென்சிங்(Quenching) எண்ணெய், கிரீஸ்(Grease) மற்றும் வாயுக்கள் ஆகியவற்றிற்கும் 3 சதவிகித விற்பனை வரி விதிப்பதென முடிவு செய்துள்ளோம். இதனால், கனிம எண்ணெய் மற்றும் வாயுக்களை இடுப்பொருட்களாவும் அடிப்படை எரிபொருளாகவும் கொண்டுள்ள அனைத்து தொழில்களும் மற்றவையுடன் போட்டியிட ஏதுவாக இருக்குமென கருதுகிறோம். (பெரும்பாலான வாகனங்களுக்கு எரிபொருளாக பயன்படக்கூடிய டீசல் இந்தச் சலுகைக்கு உட்படாது. பெட்ரோல், விமான எரிபொருள், மது ஆகியவையும், இடுபொருள்கள் இல்லாததால், இந்தச் சலுகைக்கு உட்படாது). இந்தச் சலுகையினால் அரசுக்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ ரூ 80 கோடி வருவாய் இழப்பு ஏற்படும். மாநிலத்தில் தொழில் முன்னேற்றத்தை முடுக்கி விடுவதற்காக இந்த முற்போக்குச் சீரமைப்பு வழி வகை செய்யும் எனக் கருதுவதால், இக்கொள்கையைச் செயல்படுத்த முனைந்துள்ளோம்.

51.சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்கள் ஆகியவற்றில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்கள் மீது 5 சதவிகிதம் விற்பனை வரி விதிக்கப்படுவதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். ரூ 3 இலட்சம் வரை ஆண்டு விற்பனை உள்ள நிறுவனங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த வரிவிகிதத்தைக் குறைக்க வேண்டும் என்று பல முறையீடுகள் வந்துள்ளன. பெருவாரியான தொழிலாளர்கள் தங்களது உணவிற்காக தினந்தோறும் சிறிய உணவகங்களுக்குச் செல்கிறார்கள் என்றும், அங்கு விலைவாசியைக் கட்டுப்படுத்துவது அவர்களுக்கு பெரிதும் உதவும் என்றும் கருதப்படுகிறது. நட்சத்திர உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவு மற்றும் பானங்கள் தவிர ஏனைய உணவகங்களுக்கு இந்த வரி விதிப்பில் இருந்து விலக்களிப்பதென அரசு முடிவு செய்துள்ளது. இதனால் உணவகங்களை நடத்துபவர்கள் அங்கு விற்கப்படும் உணவுப்பொருட்களின் விலையைக் குறைப்பார்கள் என எதிர்பார்க்கிறோம். பாமர மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தும் இந்த முயற்சியை மன்ற உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்பார்கள் என நம்புகிறோம். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ 20 கோடி வரி இழப்பு ஏற்படும்.

52. வரி விதிப்பு அடிப்படையை விரிவு படுத்துவதற்காக விற்பனை வரியில் இருந்து விலக்களிக்கப்பட்ட பொருட்களை ஆராய்ந்து, குறைந்தபட்ச வரி விதிப்பு விதிக்கப்படத்தக்கவை எனச் சில பொருட்களைச் சென்ற ஆண்டு நாம் வரி விதிப்பு முறைக்குக் கொண்டு வந்ததை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். பிறகு பெறப்பட்ட பல முறையீடுகளின் அடிப்படையில் பின் வரும் பொருட்களுக்கு ஏற்கெனவே மீண்டும் விலக்கு அளித்துள்ளோம்:-

- தென்னங்கிற்றுத் தட்டிகள்
- விறகு
- பாடப்புத்தகங்கள் உள்ளிட்ட படிப்பதற்கான புத்தகங்கள்
- மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்களும், கையெத்துப் பயிற்சிப் புத்தகங்களும்
- கோழித்தீவனம், முயல் தீவனம், குரங்குத் தீவனம், பன்றித் தீவனம்
- கோரைப்புல்
- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பட்டுப்புழு வளர்ப்புப் பொருட்கள்
- உலர்த்திய தேங்காய்
- துடைப்பம்
- எழுதும் பென்சில்கள் வண்ணப் பென்சில்கள், அழிப்பான்கள், கூர் சீவிகள்
- பேனாக்கள், உருள் குழை முனைப் பேனாக்கள், மைக்குச்சிகள் எபோனைட் பேனாக்ள், எபோனைட் உருள் குழை முனைப் பேனாக்கள், மை வில்லைகள்

உள்ளிட்ட எழுதும் மை

- துருப்பிடிக்காத இரும்பு எழுது முனைகள்
- கரும்பலகைகள், துடைப்பான்கள், வடிவியல் பெட்டிகள், பகுத்தாய்வுப் பெட்டிகள், பகுத்தாய்வு பெறுவதற்கான அல்லது வரைவதற்கான பிற கருவிகள்
- தைக்கப்பட்ட கைத்தறி மற்றும் ஆலையில் தயாரிக்கப்பட்ட கைக்குட்டைகள்
- பனை வெல்லம்
- அடுப்புக் கரி
- 50 கிராம் எடைக்குட்பட்ட சிப்பம் கட்டப்பட்ட ஊறுகாய்கள்
- அனைத்து வகையான அப்பளங்களும், வடங்களும்

53. மேலும், பெறப்பட்ட பல்வேறு முறையீடுகளின் அடிப்படையில், பாமர மக்கள் மற்றும் சிறார்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு கீழ்க் கண்ட பொருட்களின் மீதான விற்பனை வரியை விலக்கிக் கொள்வதென முடிவு செய்துள்ளோம்:-

- மெழுகு வர்த்திகள்
- இரப்பராலான விளையாட்டுப் பந்துகள்
- எண்ணெயில் எரியும் அரிக்கேன் விளக்குகள்.
- மண்ணெண்ணெய் விளக்குகள் (வாயு மற்றும் பெட்ரோமேக்ஸ் விளக்குகள் தவிர) அவற்றின் திரிகள், மற்றும் கண்ணாடி கூடுகள் (சிம்னி).
- அழுத்த விசையில்லாத மண்ணெண்ணெய் அடுப்புகள்.

54. கையினால் இயக்கப்படும் விவசாய சமன் படுத்தும் கருவி, களை எடுக்கும் கருவி, விலங்கினால் இழுக்கப்படும் சமன் செய்யும் கருவி ஆகியவற்றிற்கும் இனி வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

55. அட்டையினால் தயார் செய்யப்படும் பெட்டிகள் மீது தற்போது ஏனைய பொருட்கள் என்னும் தலைப்பின் கீழ் 8 சதவீத வரி விதிக்கப்படுகிறது. நெளிவுள்ள பெட்டிகள் மீது 5 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இதற்கென அட்டவணை I இல் உள்ள விவரம் விரிவாக்கப்பட்டு அட்டைத் தாள்களால் செய்யப்பட்ட பெட்டிகளுக்கும் 5 சதவீத வரி விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

56. மின்னணுத் துறை விரிவடைந்து வரும் ஒரு துறையாகும். மின்னணுப் பொருட்கள் மீதான வரி ஏற்கெனவே 3 சதவீதம் என்று குறைந்த அளவில் விதிக்கப்படுகிறது. இருப்பினும், தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி மற்றும் மின்னணுச் சாதனங்களில் பயன்படுத்தப்படும் சிறிய அளவிலான மின்விசை மாற்றமைவுகள் மற்றும் கொள்திறன் கருவிகள் (Capacitors) மீது கூடுதலான வரி விதிக்கப்படுவதாக மின்னணுப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் முறையீடு செய்துள்ளனர். இவை அனைத்துக்கும் ஒரே வகையான வரி வீதம் விதிக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர். இந்த வேண்டுகோளை அரசு கவனமாகப் பரிசீலித்துள்ளது. அதன் படி மின்னியல் விசை மற்றும் கட்டுப்பாடு மாற்றமைவுகள் (230 வோல்டிலிருந்து 100 வோல்ட்டுக்குக் கீழ் குறைப்பவை, மின் விசைத் திறன் 250 வோல்ட்- ஆம்பியருக்கு மிகாதவை), குறைத்தல்/மிகைப்படுத்தல் மின்னியல் விசை மாற்றமைவுகள் (230 வோல்டிலிருந்து 100 வோல்ட்டுக்குக் கீழ் குறைப்பவை), திருப்பம் செய்யும் மின்னியல் விசை மாற்றமைவுகள், தனிமைப்படுத்தும் மின்னியல் விசை மாற்றமைவுகள், சீர் செய்யும் மின்னியல் விசை மாற்றமைவுகள், ஃபெர்ரோ ரெசோனண்ட்(Ferro resonant) மின்னியல் விசை மாற்றமைவுகள், லைன் டிரைவர் மின்னியல் விசை மாற்றமைவுகள் (50 வோல்ட்-ஆம்பியருக்குக் குறைவானவை), ஃபிளைபேக்(Flyback) மின்னியல் விசை மாற்றமைவுகள்/லைன் அவுட்புட் (Line output) மின்னியல் விசை மாற்றமைவுகள், அதிக உயரழுத்த மின்னியல் விசை மாற்றமைவுகள், மூல வடிகட்டும் (Main filter) மின்னியல் விசை மாற்றமைவுகள், ஃபெர்ரைட் கோர் (Ferrite core) லைன் டிரைவர் மின்னியல் விசை மாற்றமைவுகள்,

★ **நெசவாளர்களுக்குத் தறிக் கூடத்துடன் 1,000 வீடுகள்.**

★ **1998-ஆம் ஆண்டில் அனைவருக்கும் கல்வி - புதிதாக 100 தொடக்கப் பள்ளிகள்.**

டொராயிடல்கோர் (Toroidal core) மின்னியல் விசை மாற்றமைவுகள் மற்றும் ஆர்-கோர் (R-Core) மின்னியல் விசை மாற்றமைவுகள், சுவிட்ச் மோடு (Switch mode)மின் வழங்கும் மின்னியல் விசை மாற்றமைவுகள் போன்ற மின்னணுப் பொருட்களில் பயன்படுத்தப்படும் சிறிய மின் மாற்றமைவுகள் மீதான வரி வீதத்தை 12 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அட்டவணை I பகுதி D இனம் 38 A ல் குறிப்பிடப்படவுள்ளவை தவிர, பிற கொள்திறன் கருவிகள் ( capacitors) மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக குறைக்கப்படும். குறிப்பிடப்படவுள்ள அட்டவணை I பகுதி D இனம் 38 A ல் பவர் ஃபேக்டர் மற்றும் ஷண்ட் (Power factor and shunt) கொள்திறன் கருவிகள் (1கே.வி.ஏ.ஆர். முதல் 100 கே.வி.ஏ.ஆர் – 415 வோல்ட் அல்லது 660 வோல்ட்) தொடர்ந்து குறிப்பாக 8 சதவீத வரி விதிப்பிற்கு உட்படும். அனைத்து மின்சாதன மின்னியல் விசை மாற்றமைவுகள் மின்அனுப்புதல் மின்சார மின்னியல் விசை மாற்றமைவுகள் (33 கே.வி முதல் 232 கே.வி வரை), பகிர்ந்தளிப்பு மின்னியல் விசை மாற்றமைவுகள் (33 கே.வி.யிலிருந்து 3.3 கே.வி வரை), டிராக்சன் (Traction) மின்சார மின்னியல் விசை மாற்றமைவுகள் (110கே.வி), மிகைப்படுத்து மின்னியல் விசை மாற்றமைவுகள் (சற்றேறக்குறைய 25 கே.வி ), உலைக்கலன் மின்னியல் விசை மாற்றமைவுகள், ரெஸின் பாட்டெட் (Resin potted) மின்னியல் விசை மாற்றமைவுகள் (சற்றேறக் குறைய 11 கே.வி) வெல்டிங் (Welding) மின்னியல் விசை மாற்றமைவுகள், உயர்படுத்தும் மின்னியல் விசை மாற்றமைவுகள் (230 V/ up, 5 to 50 KV and 415/5 to 50 KV) தானியங்கி மின்னியல் விசை மாற்றமைவுகள் (வேரியாக்), சாதன மின்னியல் விசை மாற்றமைவுகள் போன்ற மின்சார மின்னியல் விசை மாற்றமைவுகள் பொட்டென்ஷியல் (Potential) மின்னியல் விசை மாற்றமைவுகள் மற்றும் பாகங்கள், உப பொருட்கள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி தொடர்ந்து 12 சதவீதமாக இருக்கும்.

57. தற்போது பரிசுச் சீட்டின் விலையின் மீது 3 சதவீத வரி விதிக்கப்படுகிறது. பிற மாநிலங்களில் நடத்தப்படும் பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. பரிசுச் சீட்டின் மீதான விற்பனை வரி முறை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படை மதிப்பு மிகவும் குறைவாக இருப்பதனால், பிற பொருட்களிலிருந்து பரிசுச் சீட்டுகள் மாறுபட்டிருக்கின்றன. நீண்டகால அளவில் இவை வாங்கி விற்கக்கூடிய அல்லது கைப்பற்றக்கூடிய பொருட்கள் அல்ல. ஒரு குலுக்கலுக்குப் பிறகு பரிசு பெற்ற சீட்டைத் தவிர மற்றவை மதிப்பில்லாதவை. விற்கப்படாத சீட்டுகளால் ஏற்படும் பிரச்சினை குறித்தும் பரிசுச் சீட்டு விற்பனையாளர்கள் முறையீடு செய்துள்ளனர். இதனால் ஒட்டுமொத்த கம்பௌன்டிங்(compounding) முறையைச் செயல்படுத்தலாமெனக் கேட்டுக்கொண்டுள்ளனர். இவ்வகையான முறை இராஜஸ்தான் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையீடுகளைக் கருத்தில் கொண்டு, பரிசுச் சீட்டு விற்பனையிலிருந்து கணிசமான வருவாய் கிட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன், ஒட்டுமொத்த கம்பௌன்டிங் (compounding) முறையைச் செயல்படுத்துவதென அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, பங்கிட்டாளர் (distributor) உட்பட, அனைத்து பரிசுச் சீட்டு விற்பனையாளர்களும் வரிவிதிப்பு முறைக்குப் பதிலாக ஒட்டு மொத்தத் தொகை செலுத்த முன்வரலாம். அதற்கான தொகைகள் பின்வருமாறு இருக்கும்:-

| குலுக்கல் முறை | ஒவ்வொரு குலுக்கலுக்கும் செலுத்த வேண்டிய தொகை. |
|---|---|
| வாராந்திரக் குலுக்கல் | ரூ. 6,000 |
| மாதாந்திர உடனடிக் குலுக்கல் | ரூ. 15,000 |
| மாதாந்திர பம்பர் குலுக்கல் | ரூ. 15,000 |
| விழாக்கால பம்பர் குலுக்கல் | ரூ. 20,000 |

இந்த ஒட்டு மொத்தத் தொகை செலுத்தும் முறை விற்பனையாளரின் விருப்பத் தேர்வின் அடிப்படையில் அமையும். அதற்கு 30.6.1995க்குள் விற்பனையாளர்கள் தேர்வைத் தெரிவிக்க வேண்டும்.

- **கடலூர்த் துறைமுகத்தை மேம் படுத்த ரூ. 600 கோடி.**
- **நாகப்பட்டினத்துக்குப் புதிய திட்டம்.**
- **தூத்துக்குடித் துறைமுகத்தில் சேமிப்புக் கிடங்கு வசதி.**

58. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 12வது பிரிவின் கீழ் செலுத்தப்பட்ட விற்பனை வரியானது இறுதிக் கணிப்பின் மீது விதிக்கப்படும் வரியை விடக் குறைவானதாக இருக்குமாயின், அபராதத் தொகை விதிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. தற்போது கடைசியாக முடிவு செய்யப்பட்ட வரி விகிதத்திற்குக் குறைவாக தொகை செலுத்தப்பட்டிருந்தால், குறைந்தபட்ச அபராதமாக 50 சதவீதம் விதிக்கப்படுகின்றது. வரி செலுத்தப்படுவதற்கும் கடைசி மதிப்பீட்டிற்கும் இடையே கணக்கிட்டு முறைகளினாலும் கணினி இயக்கத்தில் ஏற்படும் தவறுகளினாலும், குறைந்த அளவிலான வேறுபாடுகள் இருப்பது இயல்பு என வணிகர்கள் முறையிட்டுள்ளனர். இதற்கும் மிகக் கடுமையான 50 சதவீத அபராத தொகை விதிக்கப்படக்கூடாது எனக் கேட்டுக் கொண்டுள்ளனர். ஆகவே செலுத்தப்பட்ட வரி, இறுதிக் கணிப்பின் மீது விதிக்கப்பட்ட வரியை விட 5 சதவீதத்திற்கு குறைவாக இருப்பின், அபராதத் தொகை 25 சதவீதமாக இருக்குமென முடிவெடுக்கப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட வரித் தொகைக்கும் இறுதிக் கணிப்பின் மீது விதிக்கப்பட்ட வரித் தொகைக்கும் உள்ள குறைபாடு 5 சதவீதத்திற்கு மேல், ஆனால் 15 சதவீதத்திற்கு மேற்படாமல் இருக்குமானால், தற்போதுள்ள 50 சதவீத அபராதத் தொகை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். அபராதத் தொகை குறித்த மற்ற விதிதங்களில் மாற்றம் ஏதுமில்லை.

59. தற்போது புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் வாங்கப்படும் பருப்பு வகைகள், எண்ணெய் மீதான விற்பனை வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதுபோல், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு விற்பனை செய்யப்படும் தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் மாற்று உணவு மீதான விற்பனை வரிக்கு விலக்கு அளித்து தனிப்பட்ட அறிவிக்கை வெளியிடப்படும்.

60. அட்டவணை III Bல், தண்ணீரைப் பொறுத்த இனம் கீழ்க்கண்டவாறு தெளிவாகத் திருத்தி அமைக்கப்படும்: சுத்திகரிக்கப்பட்ட மற்றும் கனிம நீர் எவ்வித கொள்கலனில் விற்கப்பட்டாலும், வரி விலக்கு கிடையாது என்ற நிலைமை தொடரும். சாதாரணத் தண்ணீர் புட்டிகளிலும், பிளாஸ்டிக் பைகளிலும் விற்கப்பட்டால், வரி விலக்கு கிடையாது என்ற நிலைமையும் தொடரும். மேலும், தண்ணீர் ஜாடிகளிலோ, ஜெரிக்கேன்களிலோ விற்கப்பட்டாலும் வரி விலக்குக் கிடையாது எனத் தெளிவுபடுத்தப்படும். ஆனால், மிகப் பெரிய பீப்பாய்களிலும், லாரி மற்றும் டிராக்டர் அல்லது விலங்குகள் மூலம் இழுக்கப்படும் டேங்கர்களில் விற்கப்படும் தண்ணீருக்கு தொடர்ந்து விலக்கு அளிக்கப்படும்.

61. மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் இடை மாறுபாட்டுக் கால-விற்பனைகள் (In transit sales) குறித்த 40 நாள் காலக் கெடுவினைப் பற்றி வணிகர்களிடையே இரண்டுவித கருத்து நிலவுகிறது. இதைத் தெளிவுப் படுத்தும் வகையில், இந்தக் காலக் கெடு ஒட்டுமொத்தக் கெடுவாக, அதே பொருட்கள் அடுத்தடுத்து விற்பனை செய்யப்பட்டபோதும் 40 நாட்களுக்கு மிகாமல் அமையும் என அறிவிக்கை வெளியிடப்படும். இருப்பினும் 1-4-1995க்கு முற்பட்ட விற்பனைகளுக்கு இது அமல்படுத்தப்படமாட்டாது.

62. விற்பனை வரியில் செய்யப்படும் மேற்கூறிய மாற்றங்கள் 1995 ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும். தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் இதற்கான சட்டத் திருத்தங்கள் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

## கேளிக்கை வரி

63. மேல் நிலை விற்பனை வரி சீர்திருத்தக் குழு அளித்த பரிந்துரையை ஏற்று, கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது 40 சதவீத கேளிக்கை வரி விதிக்கப்பட்டதை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்கள் 40 சதவீத வரி மிகக் கூடுதலான ஒன்று என்றும் இது கணிசமாக குறைக்கப்பட வேண்டும் என்றும் மீண்டும் மீண்டும் முறையீடு செய்துள்ளார்கள். கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்களின் கோரிக்கையை முழுமையாக ஏற்காமல், அதே சமயத்தில் வரி செலுத்துவதற்கு இணங்குவதை மேம்படுத்தவும், தொடர்ச்சியாக வழக்குகள் தொடுக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும், இந்த வரி விதத்தை 1995 ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து 20 சதவீதமாக குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.8.50 கோடி வருவாய் வீழ்ச்சி அடையும்.

64. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தில் இதற்குத் தேவையான திருத்தங்கள் இந்த கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

## விவசாய வருமான வரி

65. தோட்டப் பயிர்த் தொழில் ஏற்றுமதி வாய்ப்புகளை உடைய ஒரு தொழிலாக கருதுகின்றோம். ஆகவே சென்ற வரவு-செலவுத் திட்டத்தில்

தோட்டப்பயிர்த் தொழில்களுக்கென சில ஊக்குவிப்புகள் அறிவித்திருந்தேன். புதிய முதலீடுகளை ஊக்குவிப்பதற்காகத் தோட்டப் பயிர் வளர்ச்சி நிதித் திட்டம் ஒன்றை தொடங்க உள்ளோம். இந்தத் திட்டத்தின் கீழ், வேளாண்மை வருமான வரி செலுத்துபவர்கள் அவரது வரி விதிப்பிற்கு உட்பட்ட வருவாயில் 8 சதவீதத்திற்கு மிகாமல் புதிதாக நிறுவப்படவுள்ள தோட்டப்பயிர் வளர்ச்சி நிதியில் செலுத்துவராயின், அந்தத் தொகைக்கு ஈடான தொகை வருமான வரிக்கு உட்பட்ட வருவாயிலிருந்து குறைக்கப்படும். இந்தத் தொகை தேசிய விவசாய வளர்ச்சி வங்கி, மாநிலக் கூட்டுறவு வங்கி, அல்லது, தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஆகிய ஏதாவது ஒன்றில் தனிப்பட்டக் கணக்காகப் பராமரிக்கப்பட வேண்டும். ஓராண்டு காலத்திற்கு பிறகு இத் தொகையின் மீதான வட்டியுடன் தமிழ்நாட்டில் தோட்டப் பயிரில் முதலீடு செய்வதற்காகச் சில குறிப்பிட்ட செலவினங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம். மீண்டும் தோட்டப்பயிர்களை நடுவது, தோட்டப்பயிர்ப் பகுதியை விரிவு செய்வது, சாலைகள் பாலங்கள் போன்றவற்றைப் புதிதாக கட்டுவது மற்றும் விரிவாக்குவது, தொழிற்சாலைகள், கிடங்குகள் கட்டுதல், தொழிற்சாலைகளுக்கான கருவிகள் வாங்குதல் போன்ற செலவினங்களுக்கு இந்தத் தொகை பயன்படுத்தப்படலாம்.

66. கடந்த வரவு-செலவுத் திட்ட உரையில் அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகள், பொதுத்துறை நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வழிவகை முன்பணங்கள் மீது செலவிடப்படும் வட்டித் தொகையை முழுமையாக வரவிலிருந்து குறைக்க அனுமதிக்கப்பட்டது. தற்போது இந்நிபந்தனை மேலும் தளர்த்தப்பட்டு, உறவினர்களைத் தவிர மற்ற ஆதாரங்களிலிருந்து பெறப்படும் வழிவகை முன்பணங்களுக்கும் இச்சலுகை வழங்கப்படும். ஆனால், 15 சதவீதத்திற்குட்பட்ட வட்டி மட்டுமே சலுகை பெறும்.

★ **1995- 96-ஆம் ஆண்டில் ரூ.10 கோடி செலவில் மாநில ஏரிப்பாசனத் திட்டம் தொடங்கப் படும்.**

★ **கால்நடை மேம்பாட்டுக்கு மொத்தம் ரூ.10.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

67. சட்டத்தின் பிரிவு 5 (e) ன் கீழ் அறப்பயன்களுக்கு வழங்கப்படும் தொகைகளும் நன்கொடைகளும் குறித்து, தொகையைக் கழித்துக் கொள்வதற்கு அனுமதியளிக்கப்படுகிறது. இத்தகைய தொகைகளுக்கான தற்போதைய உச்சவரம்பு ரூ. 10,000 ஆகவுள்ளது. இது இனி, ரூ.25,000 என உயர்த்தப்படுகிறது. இதே போன்று, இவ்வகையில், முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகள் தொடர்பாகக் கழித்துக் கொள்ளப்படும் தொகைகளுக்குரிய உச்சவரம்பு ரூ.50,000 என்று உயர்த்தப்படுகின்றது.

68. விவசாய வருமான வரிச் சட்டத்திற்கும் விதிகளுக்கும் இதற்கான திருத்தங்கள் இந்த கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும். இந்தத் திருத்தங்கள் 1995-96 வரி விதிப்பு ஆண்டிலிருந்து செயல்பாட்டிற்கு வரும்.

## முடிவுரை

69. 1995-96ஆம் ஆண்டிற்கான இறுதிப் பற்றாக்குறை (-)ரூ25.50 கோடியாக இருக்குமென நான் என்னுடைய உரையில் ஏற்கெனவே சுட்டிக் காட்டியிருந்தேன். கூடுதல் வரிவிதிப்பிற்கு எவ்விதச் செயற்குறிப்புகளையும் நான் முன்வைக்கவில்லை என்பதையும், ஆனால், மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், ஏழை, எளிய மக்களின் நலனைப் பேணிக்காக்கவும் பல சலுகைகளை நான் அளித்துள்ளேன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறியலாம். இச்சலுகைகளின் காரணமாக,ரூ.110 கோடி வருவாய் இழப்பு ஏற்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள செலவைக் கட்டுப்படுத்தப் பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும், வரிகளையும், வரிகளல்லாத ஏனைய வருவாயையும் வசூலிப்பதன் மூலமும் எதிர்பார்க்கப்படும் வருவாய் இழப்பை ஈடு செய்யலாமென்று நான் நம்புகிறேன். பொது விநியோக முறையில் அரிசியின் அனைத்து ரகங்களுக்கும் 1.4.1995 இலிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.1 குறைக்க எடுத்த முடிவின் விளைவாக, கூடுதல் சுமை ரூ.150 கோடி ஆகும். இத்தொகையையும் சேர்த்து, நிகர இறுதிப் பற்றாக்குறை ரூ.175.50 கோடியாக இருக்கும். ஏறத்தாழ

நான்காண்டுகளுக்கு முன் நாங்கள் பதவி ஏற்றபோது இருந்ததைவிட, ஒரு நல்ல நிதிநிலைமையை இது பிரதிபலிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறியலாம்.

70. வருவாய்க்கணக்கில் பற்றாக்குறை, அதிகரித்து வரும் போக்கை நாங்கள் மாற்றியபோதிலும், பயனுள்ள நிதி நிவாரணத்தை அளிப்பதற்குப் பத்தாம் நிதிக்குழு தவறிவிட்டதால், செலவைக் கட்டுப்படுத்த நாம் தொடர்ந்து விழிப்போடு இருக்கவேண்டியது அவசியமாகிறது. மாநிலங்கள் தங்கள் நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள அவை நீண்ட காலமாகக் கேட்டுவந்த கோரிக்கை எதனையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. கூட்டு நிறுவன வரியில் ஒரு பங்கை அளிக்க வேண்டுமென்பது ஒரு நீண்டகாலக் கோரிக்கையாகும். இது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. மறைந்த மாண்புமிகு பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பதவியில் இருந்தபோது செயல்படுத்தப்படும் நிலைக்குவந்த சரக்கு ஒப்படை வரி திட்டத்தட்ட கிடப்பில் போடப்பட்டுவிட்டது. இது, நிதியாதாரங்களை மத்திய, மாநில அரசுகளிடையே நியாயமாகப் பகிர்ந்து கொள்வது பற்றிய நல்ல அறிகுறியாக அமையவில்லை. பத்தாம் நிதிக்குழுவின் பரிந்துரைகள் இந்த நிலைமையைச் சீரடையச் செய்யவேயில்லை.

71. பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசு விருப்பின்பாற்பட்டு வழங்கும் நிதியுதவியைப் பெறுவதற்குப் பதிலாக, அனைத்து மாநிலங்களின் ஒட்டுமொத்த நிதி ஆதாரப்பங்கினைச் சீரடையச் செய்வதே சிறந்த நடைமுறையாகுமென்று நாம் தொடர்ந்து கூறிவந்துள்ளோம். இது மாநில அரசுகளை அவற்றின் பொறுப்புகளுக்கு ஏற்ப, தற்சார்புடையனவாகச் செய்யும். இத்துறையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்பட்டதாக எங்களுக்குத் தெரியவில்லை. பத்தாம் நிதிக்குழு, இந்நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்குக் கிடைத்த பெரிய வாய்ப்பினை இழந்துவிட்டது. பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்கு ஏற்ப, மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே நிதி ஆதாரங்களைப் பங்கிடு செய்வது குறித்துப் பொருளார்ந்த முறையில் விவாதிக்க வேண்டிய தருணம் வந்துள்ளது.

72. ஒரு மாநில அரசு வெளி நாட்டு வணிகக் கடனைப் பயன்படுத்தி இன்றியமையாத அடிப்படை வசதிகளை அமைப்பதற்குப் புதிய திட்டங்களைத் தொடங்க விரும்பினாலும், அவ்வாறு செய்ய முடிவதில்லை. ஏனெனில், அதற்குரிய அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடம் உள்ளன. அத்தகைய கடன்களைப் பெறுவதற்கு நிறுவனங்களே அனுமதிக்கப்படுகிறபோது, இன்றியமையாத திட்டங்களுக்கென்று அவ்வாறு கடன் பெற்றுக் கொள்ள மாநில அரசுகளுக்கு ஒரு ஒதுக்கீட்டளவை மத்திய அரசு ஏன் அனுமதிக்கக் கூடாது என்பது தெரியவில்லை. மத்திய அரசு இதுபற்றிப் பரிசிலித்து அத்தகைய முதலீடுகளை ஈர்க்கக் கூடிய மாநிலங்களுக்கு வெளிநாட்டு வணிகக் கடனிலிருந்து ஒரு பங்கினை ஒதுக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

73. மாநில மக்களின் நலனைப் பேணிக்காக்கப் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அ.இ.அ.தி.மு. கழகத்திற்குத் தமிழ்நாட்டு மக்கள் 1991 ஜூன் திங்களில் மிகப் பெருமளவில் வாக்களித்து வெற்றிபெறச் செய்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் எப்போதும் மாநில மக்களுக்குத் துணை நிற்கத் தயங்கியதில்லை. வெளிநாட்டுப் போராளிகள், தீவிரவாதிகளால் ஏற்பட்ட கடுமையான அச்சுறுத்தல்கள் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிட்டன. மாநிலம் முழுவதும் அமைதியும் நல்லிணக்கமும் நிலவுகிறது. இந்திய மாநிலங்களிடையே, நிலைத்தன்மையும், ஒழுங்கமைதியும் வளர்ச்சிக்கும் வளமைக்கும் வழி வகுத்துள்ளதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் தமிழகம் ஒளி வீசித் திகழ்கிறது. ஏழை, எளிய மக்களின் நலனே, நமது வளர்ச்சித் திட்டத்திற்கும் பணிகளுக்கும் அடித்தளமாக விளங்குகிறது. தமிழ் நாட்டில் நபர் வாரி திட்ட ஒதுக்கீடு மீண்டும் தேசிய சராசரியை விட உயர்ந்துள்ளது. தமிழ்நாடு விரைவாக வளர்ந்துவரும் மாநிலங்களில் ஒன்றாகும் என்பது தெளிவு. இது ஒரு வியத்தகு சாதனையாகும். இதற்காக நாம் பெருமைப்பட உரிமையுண்டு.

74. இந்த அரசு பல பிரச்சினைக்குரிய நிலைமைகளை எதிர் நோக்கியிருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், ஒவ்வொரு மட்டத்திலும் மாநிலத்தின் உரிமைகளைக் காக்க அயர்வின்றிப் பாடுபட்டார். அவருடைய தொலைநோக்கு, உறுதியான நடவடிக்கை, திட்பமான, தெளிவான வழிகாட்டல் ஆகியவை தமிழ்நாடு வளமிக்க வளர்ச்சிப் பாதையில் பீடு நடைபோட வழி வகுத்தது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர், பழங்குடியினர், சீர்மரபினர் ஆகியோருக்கு வேலை வாய்ப்பிலும், கல்வியிலும் இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் தமிழ்நாடு சட்டத்திற்கு அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பு அளிப்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட சமூகநீதி காக்கும் குறிப்பான பயன் நோக்கில் அமைந்த கொள்கை, அவர்களுடைய உறுதியான நடவடிக்கைகள் மூலம் பெரிதும் வலுப்பெற்றுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம்

பெருமளவில் பாராட்டைப்பெற்றுள்ளது. இதனை மற்றவர்களும் பின்பற்றி வருகின்றனர். மாநிலப் பொருளாதாரத்தில் உயர் வளர்ச்சி பெறும் பொருட்டு, இந்த வரவு-செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் விரைவான தொழில் வளர்ச்சிக்கு ஒரு புதிய நாட்டம் செலுத்தப்படுகிறது. அதே சமயத்தில், ஏழை எளிய மக்களுக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் பயன்தரும் பல திட்டங்களும் பணிகளும் இதில் இடம் பெற்றுள்ளன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ரூ.3250.58 கோடி திட்ட ஒதுக்கீடு மிகப் பெரிய இலட்சிய வேட்கையுடன் அமைந்ததாகும். ஆனால், மக்களுக்கு நாம் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்ற நாம் இதனையும் தாண்டிவிடுவோம்.

75. இந்த நிதிநிலை அறிக்கை தொடர்பாக, நீதி, உண்மை, நேர்மை ஆகிய வலுவான கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த, ஆக்கப்பூர்வமான கருததுக்களை மாண்புமிகு பேரவை உறுப்பினர்களிடமிருந்து நான் வரவேற்கிறேன். மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் விருப்பு வெறுப்புக்களையும் காழ்ப்புணர்ச்சிகளையும் தவிர்த்து, மக்களுக்குச் சீரிய முறையில் பணிபுரிய எங்களுக்கு உதவும் வகையிலான சீரிய பயனுள்ள கருத்துரைகளை வழங்கியுதவ வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

76. இந்த நிதி நிலை அறிக்கையைச் சிறப்பாகவும், செம்மையாகவும் உருவாக்கப் பெருந்துணையாக இருந்து பேருதவி புரிந்த நிதித் துறைச் செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., அவர்களுக்கும், நிதித் துறையைச் சார்ந்த ஏனைய அலுவலாளர்களுக்கும், பிற அரசுத் துறைகளைச் சார்ந்த செயலாளர்கள், அலுவலாளர் ஆகியோர்க்கும் என் பாராட்டுதல்களையும் உளங்கனிந்த நன்றியும் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

77. 1995-96 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் விழைந்து கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்

இரா. நெடுஞ்செழியன்
நிதி அமைச்சர்

சென்னை
1995 ஆம் ஆண்டு
மார்ச்சுத் திங்கள் 22 ஆம் நாள்.
திருவள்ளுவர் ஆண்டு-2026.
பங்குனித் திங்கள் 8 ஆம் நாள்.



# வியத்தகு சாதனை !

இந்திய மாநிலங்களிடையே நிலைத் தன்மையும், ஒழுங்கமைதியும் வளர்ச் சிக்கும் வளமைக்கும் வழி வகுத்துள்ள தற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் தமிழகம் ஒளி வீசித் திகழ்கிறது.

ஏழை எளிய மக்களின் நலனே, நமது வளர்ச்சித் திட்டத்திற்கும் பணி களுக்கும் அடித்தளமாக விளங்குகிறது. தமிழ் நாட்டில் நபர் வாரித்திட்ட ஒதுக் கீடு மீண்டும் தேசிய சராசரியைவிட உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு விரைவாக வளர்ந்து வரும் மாநிலங்களில் ஒன்றாகும் என்பது தெளிவு. இது ஒரு வியத்தகு சாதனையாகும். இதற்காக நாம் பெருமைப்பட உரிமையுண்டு.

— நிதிநிலை அறிக்கையில்,
மாண்புமிகு நிதியமைச்சர்

நிதி நிலை அறிக்கையின் (1995-96) 'பகுதி-ஆ' அடுத்த இதழில் இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

# பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்கும் தமிழகம்!

## புதுக்கோட்டை விளையாட்டரங்கத்தில், புதுக்கோட்டை மற்றும் மணப்பாறை குடிநீர்த் திட்டங்கள், அரசு திட்டப் பணிகள் தொடக்கம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

**7.2.1994** அன்று, இதே புதுக்கோட்டை நகருக்கு வருகை தந்து, இம்மாவட்டத்தின் வளர்ச் சிக்காக நான், 248 கோடி ரூபாய் மதிப்பில், வளர்ச்சிப் பணிகளை அர்ப்பணித்து வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கியது, இன்னும் எனது மனதில் பசுமையாக உள்ளது. உங்கள் அன்புச் சகோ தரியாகிய எனக்கு, நீங்கள் அன்று எந்த உணர்வுடன், கோலாகல மான ஒரு வரவேற்பினை அளித்தீர்களோ, அதே உணர்வு சற்றும் குன்றாமல், இன்றும் அத் தகைய வரவேற்பினை அளித்த உங்கள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியை, உரித் தாக்கிக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியும், தமிழக மக்களின் நல்வாழ்க்கையும் தான், எங்கள் இலட்சியங்கள், அந்த இலட் சியங்களை, அடைய நாங்கள் தொலைநோக்குப் பார்வையுடன், செயல்பட்டு வருகிறோம் என்ப தைச் சென்ற முறை நான் உங்களைச் சந்தித்து, பேசும்போது குறிப்பிட்டேன். அந்தத் தொலை நோக்குப் பார்வையின், உச்சகட்ட வெளிப்பாடு தான், 3 தினங் களுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட, தமிழக அரசின், மக்கள் நலன் காக்கும் Budget என்றால், அது மிகையாகாது.

வளர்ச்சிப் பணிகள் முடுக்கி விட்டு தொழில் துறையிலும், மின் உற்பத்தித் துறையிலும் ஒரு மாபெரும் புரட்சியை, ஏற்படுத்தி வரும் அதே நேரத்தில் சமூக நலத் திட்டங்களையும், மக்கள் நல் வாழ்வுத் திட்டங்களையும், முனைப்புடன் தீட்டிச் செயல் படுத்தி வருகிறது. உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. அகில இந்திய அளவில், மற்ற மாநிலங்களுக்கு, சமூகத் துறையிலும், திட்டப் பணிகள் செயலாக்கத்திலும், ஒரு முன்னோடியாக, வழிகாட்டியாக, இன்று தமிழகம் விளங்குகிறது. சமூகத் திட்டங்களில், அதாவது Social Sector-களில், அதிகமான நிதி ஒதுக்கீடு செய்கிறீர்களே என்று, எங்களைக் குறை கூறிய வர்களும் உண்டு. எங்களைக் கண்டித்தவர்களும் உண்டு. ஆனால், நமது திட்டங்களால் ஏற்பட்ட பயன்களை உணர்ந்து, இன்று மத்திய அரசே, இந்தச் சமூக நலத் திட்டங்களை, இந்த ஆண்டு, மத்திய வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ளது, நமது தொலைநோக்குப் பார்வைக்கும், முன்னோடித் தன்மைக்கும் கிடைத்த, மாபெரும் பாராட்டு ஆகும்.

மத்திய அரசு, Dunkel ஒப் பந்தத்தில் கையெழுத்திட்டபோது, அதில் உள்ள நல்ல கருத்துக்களை வரவேற்றோம். ஆனால், ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் வண்ணம் மானியங்கள் தொடர் வதற்குத் தடை விதிக்கப்பட்டதைக் கடுமையாக எதிர்த்தோம். நாங்கள் அரசியல் ஆதாரம் தேடுபவர்கள் அல்ல! மக்கள் நலன் காப்பதற்கு, அச்சமின்றிச் செயல்படுபவர்கள்.

உங்கள் அன்புச் சகோதரி ஆகிய என்னிடம், என்றைக்குத் தமிழக மக்கள், மிகுந்த நம்பிக் கையுடன் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார்களோ அன்றி லிருந்து, பொது விநியோகத் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் அரிசியின் விலையை, எந்தக்

காரணத்தைக் கொண்டும், உயர்த்தக் கூடாது என்பதில், தீவிரமாக இருந்தேன். அரிசி விலையை உயர்த்தக் கூடாது என்று, மத்திய அரசையும் வலியுறுத்தினேன். தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும் குறிப்பிட்டேன். தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், அகில இந்திய அளவில், அனைத்து மக்களும், மானிய விலையில் அரிசியைப் பெறுகிற, ஒரு சூழ்நிலை உண்டாக வேண்டும் என்பதே, எனது அவா. எனவே தான், மத்திய அரசு, அரிசியின் விலையைத் தொடர்ந்து உயர்த்தினாலும், நாங்கள் அந்த அளவிற்கு, அரிசி விலையை என்றைக்கும் உயர்த்தவில்லை.

நிதி நெருக்கடி எவ்வளவு வந்தாலும், எப்படியாவது அரிசி விலையைக் குறைத்து, ஏழை எளிய மக்களின் மனங்களைக், குளிர வைக்க வேண்டும் என்ற உறுதி, என் மனதில் ஒரு வைராக்கியமாக உருவெடுத்தது. அந்த வைராக்கியத்தைச் செயல்படுத்தத் துணிந்து, இன்று தமிழகத்தில், பொது விநியோகத் திட்டத்தின் கீழ், அரிசி விலையை, **1.4.1995** முதல், கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம், குறைத்திருக்கிறோம்.

குறைந்த விலையில் அரிசி வழங்குவதால், நாங்கள் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டு வரும் மானியத்தொகை, **450** கோடி ரூபாய் ஆகும். அரிசி விலை, மேலும் ஒரு ரூபாய் குறைத்ததால், ஏற்படும் கூடுதல் மானியத் தொகை மட்டும், **150** கோடி ரூபாய். ஆக மொத்தம், ஆண்டொன்றுக்கு **600** கோடி ரூபாயாக, எங்கள் நிதிச் சுமை அதிகரித்துள்ளது. எங்கள் நிதிப் பளு அதிகமானாலும், சாதாரண ரக அரிசியை, ஒரு கிலோ இரண்டரை ரூபாய்க்கு, மக்களுக்குக் கிடைக்கச் செய்வதால், ஏற்படுகின்ற ஆனந்தத்தையும் மன நிறைவையும் எண்ணி, என் மனம் பூரிப்பு அடைகின்றது.

தேர்தலை மனதில் வைத்து, போடப்பட்ட பட்ஜெட் என்று, சிலர் கூறுகிறார்கள். அது தவறு, இது மக்களின் நலனை மனதிலே வைத்து போடப்பட்ட பட்ஜெட், ஏழை எளிய மக்கள், நலிவுற்ற பாட்டாளி மக்கள், முதியோர்கள், விதவைகள், ஊனமுற்றோர், ஆகியோருடைய வாழ்வில், வளம் பெருக வேண்டும் என்ற எண்ணத்தோடு போடப்பட்ட பட்ஜெட். உழவும் தொழிலும் தமிழ்நாட்டில், செழித்துப் பெருக வேண்டும், என்ற நோக்கத்தோடு போடப்பட்ட பட்ஜெட். அது மட்டுமல்லாமல், மக்களால் ஒதுக்கித் தள்ளப்பட்ட, மக்கள் நலனைப் பற்றி, எவ்விதக் கவலையும் படாத, அரசியல்வாதிகளின் வயிற்றிலே, புளியைக் கரைக்கின்ற பட்ஜெட். அதுதான் அப்பட்டமான உண்மை.

ஒரு காலக் கட்டத்தில், தமிழ்நாடு இழந்துவிட்ட அமைதியையும், மறைந்துவிட்ட செழிப்பையும், மீண்டும் பெற்றுத் தருவதற்காக, நாங்கள் எதிர்கொண்ட இன்னல்களும், இடர்ப்பாடுகளும், எத்தனை எத்தனை? தமிழகத்தை இன்று பல்வேறு துறைகளில், வளர்ச்சிப் பாதையில் கொண்டு வந்துள்ளோம். ஆனால், நாம் கண்ட முன்னேற்றமே, நமக்குப் பாதகமாக அமைகிற விந்தையை, இன்று நாம் பார்க்கிறோம். எங்களது விரல்களை வைத்தே, எங்கள் கண்களைக் குத்த வைக்கிற விநோதத்தை, இன்று பார்க்கிறோம். மத்திய அரசின் பத்தாவது நிதிக் கமிஷன், தமிழ்நாட்டிற்கு வருமானத்தைப் பங்கு போட்டுக் கொடுப்பதில், காட்டியிருக்கும் பாரபட்சம், இதை நிரூபித்துள்ளது.

தமிழ்நாட்டின் தனி நபர் வருமானம், இன்று தேசிய சராசரியைவிட அதிகரித்துள்ளது,



நான்காம் அட்டை சொல்லும் செய்தி:



ஒரு சாதனை தான்! இந்த சாதனைக்காக, பத்தாவது நிதிக் கமிஷன், நமக்குக் கொடுத்த பரிசு, என்ன தெரியுமா? வருமான வரி மற்றும் ஆயத்தீர்வை, அதாவது Income Tax மற்றும் Excise Duty, ஆகியவற்றிலிருந்து, தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய பங்கை, கணிசமாகக் குறைத்துள்ளது! ஆக, தேசிய சராசரியைவிட, தனி நபர் வருமானம் அதிகமாக இருப்பதால், தமிழ்நாட்டிற்குத் தண்டனை தரப்பட்டதாகத்தானே பொருள்?

தேசிய நலனைக் கருதி, மக்கள் தொகையைக் குறைக்கத் தமிழ்நாடு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை, நன்முறையில் செயல்படுத்தியதால், இன்று மக்கள் தொகை குறைந்துள்ளது. மக்களை தொகை அடிப்படையில், மானிய உதவியை வழங்கினால், தமிழ்நாட்டுக்குக் கிடைக்கின்ற நிதி உதவி, குறையும் அல்லவா? மக்கள் தொகையைக் குறைத்த மாநிலங்களுக்குத் தண்டனையாக அல்லவா, இது அமைந்துவிட்டது?

இதுபோன்று, எத்தனைப் பிரச்சினைகள் வந்தாலும், புதிய வரிகளை விதிக்காமல், கூடுதலாக சமூக நலத் திட்டங்களை, எங்களால் செயல்படுத்த முடியும் என்பதைத்தான், இந்தப் பட்ஜெட் காட்டுகிறது.

நாங்கள் பதவி ஏற்றபோது, முதியோர்கள், விதவைகள், நலிவுற்ற விவசாயத் தொழிலாளர்கள், ஊனமுற்றோர், ஆகியவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த, மாதாந்திர ஒய்வூதியத்தை, 50 ரூபாயிலிருந்து, 75 ரூபாயாக, உயர்த்தி வழங்கினோம். வரும் நிதி ஆண்டிலிருந்து, இந்த ஓய்வூதியத் தொகை, 75 ரூபாயிலிருந்து, 100 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதியோர் உதவித் தொகையை, இரண்டு மடங்காக்கி உள்ளோம்.

65 வயதைக் கடந்த, குறு விவசாயிகளுக்கு, மாதம் 100 ரூபாய் உதவித் தொகை வழங்கும், புரட்சிகரமான திட்டத்தையும், இந்த ஆண்டு Budgetஇல் அறிவித்துள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குழந்தைகள் நலத் திட்டம், Child Welfare Scheme என்ற திட்டத்தின் கீழ், ஒரு குடும்பத் தலைவர், அல்லது குடும்பத் தலைவி இறந்து விட்டால், அந்தக் குடும்பத்திலுள்ள குழந்தைகளின் கல்வி, பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, மாதம் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்கு, 50 ரூபாய் வீதம், 4 ஆண்டுகளுக்கு, உதவித் தொகை வழங்கும் புதிய திட்டத்தையும், இந்த ஆண்டு நடைமுறைப்படுத்த உள்ளோம்.

1995-96-ஆம் ஆண்டில், 105 கோடி ரூபாய் செலவில், 50,000 கான்கிரீட் தள வீடுகள், ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாகக் கட்டி வழங்கப்படும். மேலும் 30,000 ஆதிதிராவிடப் பெருமக்களின் வீடுகள், 15 கோடி ரூபாய் செலவில், மேம்படுத்தப்படும். வரும் நிதியாண்டிற்குள், எல்லா ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும், வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள், அதாவது, Colour Television Set-கள் வழங்கவும், திட்டமிட்டுள்ளோம்.

தமிழகத்தின் மூலை முடுக்குகளில் உள்ள, குக்கிராமங்கள் வரை, எல்லா இடங்களுக்கும், நல்ல குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில், நாங்கள் முனைப்புடன் செயல்பட்டு வருகிறோம். அந்த வகையில், 40 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, புதுக்கோட்டை குடிநீர்த் திட்டத்தையும் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, திருச்சி மாவட்டம் மணப்பாறை குடிநீர்த் திட்டத்தையும் இன்று தொடங்கிவைத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காவிரி ஆற்றின் கரையில், கிணறு ஒன்றை அமைத்து, 90 கிலோமீட்டர் தூரம் குழாய் வழியாக, காவிரி நீர், புதுக்கோட்டை நகருக்குக் கொண்டு வரப்படுகிறது. மணப்பாறை குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்த வரை, குளித்தலை அருகில், காவிரி ஆற்றுக்கு அருகில், கிணறு ஒன்றை அமைத்து, 49 கிலோமீட்டர் தூரம் குழாய் வழியாக, காவிரி நீர், மணப்பாறைக்குக் கொண்டு வரப்படுகிறது.

ஒரு காலத்தில் காவிரி நீர், புதுக்கோட்டை மக்களுக்கு, கானல் நீராகத் தான் தெரிந்தது. இன்று எங்களது ஆட்சியில், காவிரி நீரைப் புதுக்கோட்டைக்குக் கொண்டுவந்து, குடி நீராகக் கொடுத்துள்ளோம். நாங்கள் பொறுப்பேற்றப் பிறகு, மேற்கொண்ட குடிநீர்த் திட்டங்களை,

முறையாகச் செயல்படுத்தி, வெற்றிகண்டு வருகிறோம் என்பதற்கு, இந்த இரண்டு குடிநீர்த் திட்டங்களே சாட்சி.

புதுக்கோட்டை நகராட்சி, இலுப்பூர், கீரனூர், அன்னவாசல் நகராட்சிகளிலும், மற்றும் 15 வழியோரக் கிராமக் குடியிருப்புகளிலும், வாழும் இரண்டரை இலட்சம் மக்கள், புதுக்கோட்டைக் குடிநீர்த் திட்டத்தினால், பயன் பெறுவார்கள். திருச்சி மாவட்டம், மணப்பாறை நகராட்சி. மற்றும் 51 குடியிருப்புகளில் வாழும், ஒன்றே கால் இலட்சம் மக்கள், மணப்பாறை குடிநீர்த் திட்டத்தினால் பயன் பெறுவார்கள்.

1985-ஆம் ஆண்டில், மதுரை, கோவை, சேலம் ஆகிய மாநகரங்களுக்குக் குடிநீர் வழங்க் திட்டங்கள் தீட்டப்பட்டன. அவை திட்டமிட்டபடி நடந்திருந்தால், 1990-ஆம் ஆண்டே, நிறைவு அடைந்திருக்க வேண்டும்.

ஆனால், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, இவற்றில் எந்தவொரு திட்டமும், முடிக்கப் படவில்லை. ஏன், எந்த ஒரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. 60 இலட்சம் மக்கள், பயன்பெறும் குடிநீர்த் திட்டங்கள், உறங்கிக் கிடந்தன. உறங்கிக் கிடந்த திட்டங்களை, உருப்படியாக்கிச் செயல்பட வைத்தது, எங்கள் அரசு தான்.

இந்த அரசின் மாபெரும் சாதனை இது என்பதை, எங்கள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் கூட, மறுக்க முடியாது.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, இன்றுவரை, கிராமக் குடிநீர்த் திட்டங்களின் கீழ், 313 கோடி ரூபாய் செலவில், 14,692 கிராமக் குடியிருப்புகளில் வாழும், ஒரு கோடி மக்கள் பயன் பெறும் வண்ணம், பல திட்டங்களை நிறைவேற்றி உள்ளோம். இவற்றில், 7,174 குடியிருப்புக்கள், ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடிப் பெருமக்கள் வாழ்கின்ற, கிராமப் புறக் குடியிருப்புக்கள் ஆகும். எனது அன்பிற்குரிய ஆதிதிராவிடச் சகோதரிகளும், தாய்மார்களும், ஒரு குடம் குடிநீருக்காக, நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலைமையை, என்றைக்கு நான் கண்டேனோ அன்றைக்கே இந்த கைய சூழ்நிலையைத் தமிழகத்தில் மாற்றி அமைக்க வேண்டும், என்று உறுதி பூண்டேன். அந்த மன உறுதியின் வெளிப்பாடாகத் தான், இன்று 7,174 ஆதி திராவிடக் குடியிருப்புகளுக்கு, நாங்கள் குடிநீர் வசதியைச் செய்து கொடுத்துள்ளோம்.

இந்த விழாவில், இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்காக, மேலும் 48 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்ததிலும் புதியத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இங்கு வரவேற்புரை ஆற்றிய மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள், புதுக்கோட்டைக்குப் பக்கத்தில் உள்ள புறநகர்ப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். புதுக்கோட்டை நகர எல்லைக்கு வெளியே அமைந்துள்ள தஞ்சாவூர்ச் சாலையில் 16 புறநகர்ப் பகுதிகளுக்கும், ஆலங்குடிச் சாலையில் அமைந்துள்ள 12 புறநகர்ப் பகுதிகளுக்கும், திருச்சிச் சாலையில் அமைந்துள்ள பழனியப்பா நகர் மற்றும் திருமயம் சாலையில் உள்ள லட்சுமி நகர், மறைமலை நகர், ஆகிய புறநகர்ப் பகுதிகளுக்கும் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் இப்பகுதி மக்களின் நீண்ட நாளைய குறையை நீக்கும் வகையில், வருகிற 31.12.1995-க்குள் கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் காவிரி நீர் வழங்க ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் காக்க, பல்வேறு ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளை, எடுத்து வருகின்ற எங்கள் அரசு, இதே புதுக்கோட்டை மாவட்டத்தில், தனியார் கல் குவாரிகளில், பணிபுரிந்து வந்த மகளிரின், பொருளாதார சமூக வாழ்க்கையை, மேம்படுத்திக் காட்டியுள்ளது. 1991-ஆம் ஆண்டுக்கு முன், கிட்டத்தட்ட 520 தனியார் கல் குவாரிகளில், நாள் முழுவதும் உழைத்து, 6 ரூபாய் மட்டுமே, ஊதியம் பெற்று வந்த, 4,500 பெண்மணிகளின் வாழ்க்கையில், வசந்தத்தை ஏற்படுத்தி இருக்கின்றோம்.

தனியாரின் கல் உடைக்கும் உரிமங்களை, நாங்கள் நீட்டிக்கவில்லை. மாறாக, இந்தக் கல் குவாரிகளில், குருதி சிந்தி, கடுமையாக உழைத்த பெண் தொழிலாளர்களை, 152 குழுக்களாகப் பிரித்து, இந்தக் குழுக்களிடம், இந்தக் கல் குவாரிகளை ஒப்படைத்தோம். Development of Women and children in Rural Areas, ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்திற்கான திட்டத்தின் கீழ், இந்த மகளிருக்குத் தொழில் நடத்தத் தேவையான மூலதனம் பெற்றுத் தரவும், தொழில் நுட்ப உதவிகளை வழங்கவும், நாங்கள் ஏற்பாடு செய்தோம். அவர்கள் வாழ்க்கையில், இன்று வசந்தம் வீசுகிறது. 6 ரூபாய்க்காக, இடுப்பொடிய அனுதினமும் பாடுபட்ட, அந்த அன்புச் சகோதரிகள், இன்று நாள் ஒன்றுக்கு, 30 ரூபாய் வருமானம் பெற்று வருகிறார்கள். அவர்களின் வாழ்க்கைத் தரம், இன்று உயர்ந்துள்ளது. இதை நாங்கள் மட்டும் கூறவில்லை. National Institute of Adult Education, என்ற மத்திய ஆய்வு நிறுவனம், தான் மேற்கொண்ட ஆய்வின் முடிவாக, இந்த மாவட்டத்தில், உழைக்கும் மகளிர் அடைந்துள்ள உன்னதமான, சமூகப் பொருளாதார மேம்பாட்டை, மனம் மகிழ்ந்து பாராட்டியுள்ளது.

மகளிர் மேம்பாடு அடைந்தார்கள் என்றால், அந்தக் குடும்பங்களே மேம்பாடு அடைந்ததாகத் தானே பொருள்? 4,500

குடும்பங்கள் பலன் அடைந்ததை, எவரும் மறுக்க முடியாது!

கல் குவாரிகளின் குத்தகைத் தொகையை உயர்த்தியபோது, இவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்று, நான் முடிவு செய்தேன். இந்த உயர்வு இவர்களைப் பாதிக்காமல் இருக்க, குத்தகைத் தொகை எந்த அளவிற்கு உயர்த்தப் பட்டதோ, அந்த அளவிற்கு, முதலாண்டிற்கு மானியமும்; அடுத்த சில ஆண்டுகளுக்கு, கணிசமான மானியமும்; அரசுத் தரப்பிலிருந்து வழங்க, ஆணையிட்டுள்ளேன் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்தக் கல் குவாரிகளின் குத்தகை உரிமங்கள், ஒவ்வொரு ஆண்டும் நீட்டிப்பு செய்யப்படுவதால், இவர்களுக்குப் பிரச்சினை ஏற்படுகிறது என்பது, எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இம்மகளிரின் நல்வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு, இந்தக் கல் குவாரிகளின் குத்தகை உரிமங்களை, 5 ஆண்டுக் காலத்திற்கு நீட்டிப்பு செய்ய வேண்டும் என ஆணை வழங்கியுள்ளேன் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**27,051** பேருக்கு, இங்கே அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள், வழங்கப்பட உள்ளன. பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள், வறியவர்கள், நலிந்தவர்கள், அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெற வேண்டும் என்கின்ற எண்ணத்தில், ஏற்கெனவே மாவட்டந்தோறும் ஒரு முறை சென்று, நலத்திட்ட உதவிகளை வழங்கி இருந்தாலும், மீண்டும் இங்கே **27,051** பேருக்கு, **10** கோடி ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்குவதில், எனக்கு உண்மையில், ஒரு மன நிறைவு ஏற்படுகின்றது. இன்று அரசின் உதவிகளைப் பெறுகின்றவர்கள், வளமான தொரு வாழ்க்கையைப் பெற வேண்டும் என்று, மனதார வாழ்த்துகிறேன்.

இந்த மேடையில் ஒரு சிலருக்கு மட்டும், அரசின் நலத்திட்ட உதவிகளை, எனது கரங்களால், நானே வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், எனது முன்னிலையில் வழங்குவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தனை இடர்ப்பாடுகள், எத்தனை இன்னல்கள் வந்தாலும், உறுதியான உள்ளத்தோடு அதைத் தாங்குவோம். தமிழக மக்களின் பேராதரவும், பேரன்பும், ஒரு மாபெரும் சக்தியாக, எங்களுக்கு உறுதுணையாக இருக்கும்போது, உலகத்தில் வேறு எந்தச் சக்தியாலும், எங்களை ஒன்றும் செய்து விட முடியாது. மக்கள் நலன் காப்பதிலும், மக்கள் பணி ஆற்றுவதிலும், இன்னும் முனைப்புடன், நாங்கள் செயல்படுவோம் என்று, இந்த நேரத்தில் உறுதி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கோடைக்கால வெயிலின் கொடுமையையும் மீறி, என்னைக் காண்பதற்கும், என் பேச்சைக் கேட்பதற்கும், இங்கு குழுமியுள்ள உங்கள் அனைவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியை உரிதாக்கிக் கொள்கிறேன்.

நீங்கள் அனைவரும், எல்லா வளமும், எல்லா நலமும் பெற்று, வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# புகழ் மிக்க புதுகையில் புதிய சரித்திரம்

பொங்கு புனல் காவிரி நீரைப் புதுகை மக்கள் பருகிடவும், இம்மாவட்டம் புதிய பொலிவு பெறவும், மக்கள் வாழ்வில் வளம் பெருகவும். 25.3.95 அன்று புதுக்கோட்டை விளையாட்டரங்கில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சமூக நீதி காத்த வீராங்கனை புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 108 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுக்கோட்டை மற்றும் மணப்பாறை குடிநீர்த் திட்டங்கள், மற்றும் அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டப்பணிகள் ஆகியவற்றைத் தொடங்கி வைத்து, பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 27 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

இவ்விழாவில், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். வாழ்த்துரையாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.டி.எம்.செல்வகணபதி அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.பொன்னுசாமி அவர்களும் உரையாற்றினார்கள்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.சேடபட்டி இரா.முத்தையா அவர்கள் தலைமையுரையாற்றிய பின்பு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் விழாப்பேருரையாற்றினார். பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் பாரதி மற்றும் தனலட்சுமி பெண் குழந்தைகளுக்குத் தங்க மோதிரமும், அறந்தாங்கியைச் சார்ந்த மாரிமுத்து - காந்திமதி ஆகிய தம்பதியர்க்கு தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தில் ரூபாய் ஆயிரமும், ஆதரவற்ற பெண்கள் நிதி உதவித் திட்டத்தின்படி கருப்பாயி என்ற பெண்ணுக்கு ரூபாய் இரண்டாயிரமும், விதவை மகள் திருமண நிதி உதவித்திட்டத்தின்படி மகமாயி என்பருக்கு ரூபாய் இரண்டாயிரமும், சண்முகம் என்ற பெண்ணுக்கு இலவச மூன்று சக்கர வண்டியும், சசிகலா என்ற ஊனமுற்ற பெண்ணுக்குக் கம்பிக் காலுறை மற்றும் கைத்தாங்கிகள், டாக்டர் ஜெ.ஜெயலலிதா கண் ஒளித்திட்டத்தின்படி வள்ளியம்மை என்ற பெண்ணுக்கு மூக்குக் கண்ணாடியும், சந்திரா என்ற பெண்ணுக்குப் பாசிபவளமும், மெய்வழிச்சாலையைச் சார்ந்த தமிழரசிக்குத் தையல் எந்திரமும், மாங்குடியைச் சார்ந்த பானுமதி என்ற பெண்ணுக்குப் பிளாஸ்டிக் ஒயர் கூடைபின்னுதல் கருவியும், கூடலூரரைச் சேர்ந்த மூக்கன் என்பவருக்கு மைக்செட்டையும், அன்னவாசல் கிராமத்தைச் சார்ந்த பழனியம்மாள் என்ற ஏழைப் பெண்ணுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாவும், ராஜேந்திரன் என்பவருக்கு இலவசச் சலவைப்பெட்டியும், மூக்காயி என்ற பெண்ணுக்கு விதவை உதவித்தொகையும், நலிந்தோர் நலத் திட்டத்தின் படி விசாலாட்சி என்ற பெண்ணுக்கு ரூபாய் ஐந்தாயிரமும், வீரபத்திரன் என்பருக்குப் பெட்ரோமாக்ஸ் லைட்டையும், கருப்பையா என்பருக்கு விசைத்தெளிப்பான் கருவியும், ஆனந்தி என்ற பெண்ணுக்குத் தென்னங்கன்றையும் வழங்கினார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட அமைச்சர்கள் அனைவரும் விழாப்பந்தலுக்குள் அமர்ந்துள்ள, ஏழை, எளிய மக்கள் இருந்த இடத்திற்குச் சென்று நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். இறுதியாக புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வெ.வரப்பிரசாதராவ், இ.ஆ.ப. நன்றியுரையாற்றினார்.

— நிகழ்ச்சித் தொகுப்பு:
அ. மதிமாறன்.

## மனம் குளிர்ந்தது!

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் புதுக்கோட்டைக்கு ரூ.40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர்த்திட்டத்தை ஒரு பொத்தானை அமுக்கித் தொடங்கி வைத்தார். அப்பொழுது காவிரித்தாய் போல வடிவமைக்கப்பட்ட சிலையின் கரங்களில் உள்ள குடத்தில் இருந்து காவிரித் தண்ணீர் வரும் காட்சியைக் கண்ட ஏராளமான பொதுமக்களின் மனது குளிர்ந்தது. மேலும் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் புதிய வழித்தடங்களையும் துவக்கி வைத்தார். அடுத்து ரூ.10 கோடி செலவில் அமைக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தையும் தொடங்கி வைத்த நிகழ்ச்சிகள் இவ் விழாவின் முத்தாய்ப்பாக அமைந்தன.



# நூல்நயம்

## தமிழில் ஆட்சிச் சொற்கள்

ஆசிரியர்: டாக்டர் சி. செல்வராஜ்

வெளியிட்டோர்: அன்பு பதிப்பகம்,
10, பொன்னுசாமி
நாயக்கன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை 600 014

பக்கம்:476 விலை:ரூ.75

**தா**ய் மொழியாம் தமிழ்மொழி எண்ணற்ற ஆட்சிச் சொற்களைக் கொண்டதாகப் பழங்காலத்திலேயே இருந்திருக்கிறது என வரலாறுகள் தெரிவிக்கின்றன. அயலவர் ஆதிக்க ஆட்சிகள் இங்கே நிலைபெற்ற காலத்தில், அவர்களுடைய அயல் மொழி ஆதிக்கங்களும் ஏற்படலாயின. அப்போதெல்லாம் அவர்கள் மொழி ஆட்சிச் சொற்களும் அரிசியிடை உமிபோல் தமிழில் கலந்தன. ஆதிக்கம் பெற்றன.

அவைகளையெல்லாம் தேடிப் பிடித்துத் தோலுரித்துக் காட்டும் திறம் மிக்க பணியையே இந் நூலாசிரியர் செய்திருக்கிறார். ஆட்சிச் சொற்களில் சிதைந்தவை, மறைந்தவை, மருவியவை, புதிதாக உருவாக்கப்பட்டவைகளையெல்லாம் கூட நமக்கு அருமையாகத் தோலுரித்துக் காட்டியிருக்கிறார்.

'தமிழில் ஆட்சிச் சொற்களுக்கான ஆராய்ச்சி மூலங்கள்' என்பதில் தொடங்கி 'விடுதலைக்குப் பின் ஆட்சிச் சொற்கள்' என்பது வரை, ஏழு தலைப்புகளின் கீழான கட்டுரைகள் இதில் இடம்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு கட்டுரையிலும் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி இயக்குநராக உள்ள நூலாசிரியரின் இலக்கண - உயர்வு, இலக்கியப் பயிற்சி, மொழியியல் அறிவு, ஆட்சி முறை அனுபவம், பன்மொழித் திறன், ஆய்வுத்துறை ஆற்றல் ஆகியவை வெளிப்படுவதை நாம் அறிய முடிகிறது.

ஏறத்தாழ 2150 ஆட்சிச் சொற்கள் இந்நூலில் ஆய்வு செய்யப்பட்டு உள்ளன.

தமிழ் வாழ, வளர, செழித்திட இத்தகைய நூற்களைக் கற்றறிவாளர்கள் பெரிதும் வரவேற்பார்கள்.

**- 'இந்திரன்'**

## கடலுக்குள்ளே ஒரு சிறைச்சாலை

ஆசிரியர்: டாக்டர் மலையமான்

வெளியீடு: அன்புப் பதிப்பகம்,
63-A, ரங்காச்சாரி
சாலை,
சென்னை 600 018.

பக்கம்: 112 விலை: ரூ.16

**கூ**டல் பற்றி, கடல் வாழ் உயிரினங்கள் பற்றி தாவரங்கள் பற்றி, கடலில் கிடைக்கும் எண்ணெய் வளங்கள், கனிமங்கள் பற்றி, ஓர் நெடுங்கதையோடு இணைத்துக் கூறப்பட்டிருக்கிறது. கடல் பற்றி பல புதிய தகவல்கள் இந்நூலில் கிடைக்கின்றன. தமிழில் பயனுள்ள வித்தியாசமான ஓர் அறிவியல் நூல்.

**குமார்**

## எல்லா விஷக் கடிகளுக்கும் வைத்தியம்

ஆசிரியர்: சூரியநாத்

வெளியீடு: காத்திகா
பப்ளிகேஷன்ஸ்
96, கங்கையம்மன்
கோவில் தெரு,
வடபழனி,
சென்னை 600 026

பக்கம்: 96 விலை ரூ.14

**பா**ம்பு, தேள், பூரான் போன்ற கொடிய விஷ ஜந்துக்களால் மட்டுமல்ல, ஈ, கொசு, கரப்பான் போன்றவற்றின் கடிகளால் நமக்கு ஏற்படும் நோய்களை விளக்கி அவற்றிற்கு உரிய மருந்துகளையும் அவற்றை உபயோகிக்கும் முறைகளையும் இந்நூல் விளக்குகிறது.

## 'மேல்நாட்டு மேதைகள்'

ஆசிரியர்: இலக்கியச் சித்தர்
தங்கவயல்
லோகிதாசன்

வெளியீடு: பாண்டியன் பதிப்பகம்,
20,சீனிவாச பெருமாள்
சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை 600 014.

பக்கம்: 104 விலை: ரூ.12

**மே**ல்நாட்டு மேதைகளின் வாழ்க்கையில் நடைபெற்ற நீதி, நேர்மை, நகைச்சுவை கலந்த பல சுவையான நிகழ்ச்சிகள் இந்நூலில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

பல தரப்பட்ட குணாதிசயங்களை உடைய பல மனிதர்களைச் சந்தித்துப் பழக வேண்டிய இக்காலச் சூழ்நிலையில் நாம் நேர் கொள்ள வேண்டிய பிரச்சினைகளை, எவ்வாறு பிறர் மனம் புண்படாமல், நம்மைத் தற்காத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பதை 'வேறு தலை என் தலைக்குப் பொருந்தாதே!' 'ஈக்குச் சமாதி கட்டிய இணையற்ற கவிஞன்' போன்ற தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்களில் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

'சாவதற்குள் ஒரு புது விஷயம்' தலைப்பின் கீழ் சாக்ரடீஸ் தன் மரணத்தை எதிர்நோக்கி இருக்கும் தறுவாயிலும் சிறையிலிருந்த மற்றொரு கைதியின் பாடலை மறுமுறை பாடக் கேட்டதாகக் குறிப்பிட்டிருப்பது மனத்தின்மையை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

**கு. மல்லிகா**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சன்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய

பட்டு

தூய

சரிகை




ராஜகம்பீரமான ஊதா...

செந்தூரப்பூபோல் சிகப்பு...

மங்களகரமான மஞ்சள்...

வான்வெளிபோல் நீலம்...

கற்பனைக் கடங்கா

அற்புத வண்ணங்களில்

நேர்த்தியான பட்டு,

நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்

தமிழ் நாடு கைத்தறி




MPTC
1995